விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ௵ மாசி ௴ 27-ம் ௳ | ஞாயிற்றுக்கிழமை | (11 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 13 | ஓசை 21

1993-07 யாழ்ப்பாணம்

## ஆந்திராவும் மறுத்ததால் பஸ்களில் ஒரிஸா சென்றனர்

(விசாகப்பட்டினம்)

திருகோணமலையிலிருந்து இரண்டு கப்பல்களில் ஏற்றிச் செல்லப்பட்ட ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல். எவ். குழுக்களைச் சேர்ந்தவர்களும், அவர்களின் குடும்பத்தினரும் தமிழ் நாட்டில் இறங்குவதற்கு தமிழ்நாடு அரசு மறுத்ததைத் தொடர்ந்து அவர்களை ஏற்றுக்கொள்ள ஆந்திரா மாநில அரசுப்கூட மறுத்துவிட்டது. இவர்களை சேரள, கர்நாடக அரசுகளும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதால் அடுத்து என்ன செய்வதென்ற பிரச்சினை மத்திய அரசுக்கு ஏற்பட்டது. இதன் பின்னரே இவர்களை அகதிகளாகத் தற்காலிகமாக ஏற்றுக்கொள்வதென்று ஒரிஸா மாநில அரசு ஒப்புக்கொண்டது. இதன் பின்னர்தான் விசாகப்பட்டினம் துறைமுகத்துக்கு வந்த கப்பல்களிலிருந்து இவர்களை இறக் (4-ஆம் பக்கம் பார்க்க)

# பெருமாளை நாம் கைவிடமாட்டோம் - 'றோ'

## அவருக்கு பாதுகாப்பு அளித்து கைகொடுப்போம்

(கொழும்பு)

நாம் பெருமாளைக் கைவிடப்போவதில்லை. இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறினாலும், வரதராஜப் பெருமாள் அரசியல் அரங்கைவிட்டு விலகமாட்டார். நாம் அவருக்கு உதவவுள்ளோம். இவ்வாறு 'றோ' கருத்துத் தெரிவித்ததாக, றோவுக்கு நெருங்கிய வட்டாரப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்திய இராணுவமும், மேஜர் ஜெனரல் கல்கட்டும் ஆற்றிய சேவைகளுக்கு நன்றி தெரிவித்து, முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் கல்கட்டுக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளதாகத் தெரியவருகிறது. இக்கடிதம் சென்ற வெள்ளியன்று கையளிக்கப்பட்டது.

இதேவேளை மாகாண அமைச்சின் நிர்வாகம் சீர்குலைந்து விடுவதற்கான அறிகுறிகள் அதிகரித்து வருவதாகவும், வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு நெருங்கியவர்கள் திருகோணமலையை விட்டு ஓடிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வியாழனன்று முதலமைச்சர் வரதரின் மனைவி திருகோணமலைக்கு அண்மையில் உள்ள சீனன்குடா விமான நிலையத்திலிருந்து விமானத்தில் இந்தியா சென்றுள்ளதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. முதலமைச்சர் வரதர், மனைவியை வழியனுப்பி வைத்தாராம்.

திருமதி வரதராஜப் பெருமாள் விமானப் பயணத்தை மேற்கொள்வதற்கு சில நிமிடங்கள் முன்னதாக மாகாண சபையின் நிதியமைச்சரும், மாகாண அமைச்சின் சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தர்களும் விமானமொன்றில் சென்னை சென்றுள்ளனர்.

அவர்கள் அங்கு வரதருக்கான வதிவிட வசதிகளை ஒழுங்கு செய்வார்கள் எனத் தெரிய வருகிறது.

இடம்பெயர்ந்து தான் இந்தியாவுக்குப்போவது தொடர்பாக பெருமாள் முரண்பாடாகப் பேசினாரென்றாலும், வரதரின் வீட்டில் மூட்டை முடிச்சுகள் கட்டப்படுவது பலரால் அவதானிக்கப்பட்டதாம். வரதரின் மாமனார் அ. வேதநாயகம், தாம் வீட்டிற்கு வர்ணம் பூசுவதற்காக பெட்டி படுக்கைகளைக் கட்டுவதாகச் சொல்லியிருக்கிறார்.

இது இப்படியிருக்க, பெருமாளும் அவரது தோழர்களும் போர்கலப் பயிற்சிபெற லெபனானுக்குப் போகவிருக்கிறனர் என்று ஈ. பி. ஆர். எல். எவ். வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஞாயிறு மலர் உள்ளே

## வடபகுதி தபால் சேவைகள்

# ஈழப்போராளிகளுக்கு இனி தமிழ்நாட்டில் இடமில்லை

## முதல்வர் கருணாநிதி அறிவிப்பு

### ஆயுதமில்லாத உண்மையான அகதிகளுக்கு உதவிவருகிறோம்

இலங்கையில் இருந்து தமிழ்நாட்டிற்குச் சென்ற ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல். எவ். இயக்கத்தினரும் அவர்களுடன் தொடர்புடையவர்களையும் சென்னை துறைமுகத்தில் இறங்கவிடாமல் திருப்பி அனுப்பிய விடயம் தொடர்பாக பத்திரிகையாளர் கேட்ட கேள்விகளுக்கு கருணாநிதி பதிலளித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது இலங்கைத் தமிழ்ப் போராளிகள் தமிழ் நாட்டில் இறங்குவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

தமிழகத்தில் தமிழ்ப் போராளிகளின் நடமாட்டம் ஏற்பட்டால் அவர்களுடன் மோதுவதற்கு வேறு குழுக்கள் வந்துவிடுவார்கள். இதனால் சட்டம் ஒழுங்கு அமைதிக்கு பங்கம் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



இலங்கையிலிருந்து அகதிகளாக வருபவர்களை ஆதரிக்கவும், வசதிசெய்து கொடுக்கவும் தமிழக அரசுக்கு எவ்வித தடையுமில்லை. கடந்த மூன்று மாதங்களில் சுமார் மூவாயிரம் அகதிகள் இங்கு வந்துள்ளனர். அவர்களை குன்னக்குடி, மண்டபம் போன்ற அகதிகள் முகாம்களில் தங்கவைத்துள்ளோம் என்றும் அவர் சொன்னார்.

சில தினங்களுக்கு முன்னர் ஹர்சவரத்தனா, சில்புசுர்தான் ஆகிய இரு கப்பல்களில் வந்தவர்கள் பெரும்பாலானோர் போராளிக் குழுக்களைச் சேர்ந்திருந்ததால் இங்கு இறங்க அனுமதிக்கப்படவில்லை. இக்கப்பல்கள் அமைதிப் படை சார்பில் வந்தன.

இக்கப்பல்கள் வருவது பற்றி முதல் நாளே தமிழக அரசுக்கு தெரிவிக்கப்பட்டது. உடனே தாம் மத்திய அரசுடனும் பிரதமர் வி. பி. சிங்குடனும் தொடர்புகொண்டு போராளிகள் இங்கு வந்தால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட்டேன். இதனையடுத்தே அக்கப்பல்கள் திருப்பிவிடப்பட்டன. ஒரிசா சென்ற அகதிகள் தமிழ் நாட்டிற்கு திரும்புவார்களா என்று கேட்டபோது உண்மையான அகதிகளைத் தவிர ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல். எவ். போன்ற போராளிக் குழுவினர் தமிழ் நாட்டில்

## சங்கானை வடிசாலையில் மீண்டும் உற்பத்தி

(சங்கானை)

சங்கானை வடிசாலை மீண்டும் இயக்கப்படவுள்ளது. ஐந்து லட்சம் ரூபா செலவில் புனர்நிர்மான வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளன.

அளவெட்டி மல்லாகம் தெங்குபனம் உற்பத்தி விற்பனவுச் சங்கம், பண்டத்தரிப்பு தெ. ப.பொ. உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம், தெல்

மானிப்பாய் தெ ப.பொ. உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் சங்கானை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கங்கள் ஐந்து இணைந்த சமாஜமே சங்கானை வடிசாலையை இணைந்து நடத்தவுள்ளன.

தினம் நான்கு சிவ்ற் உற்பத்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ள

## பதில் நீதவானாக நியமனம்

(கரவெட்டி)

கரவெட்டியைச் சேர்ந்த சட்டத்தரணி ஈ. டபிள்யூ.

மலையை விட்டு ஓடிக்கொண் டிருக்கிறார்கள் என்றும் செய் திகள் தெரிவிக்கின்றன.

வியாழனன்று முதலமைச்

மாகாண அமைச்சின் சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தர் களும் விமானமொன்றில் சென்னை சென்றுள்ளனர்.

... தாகச் சொல்லியிருக் கிறார்.

இது இப்படியிருக்க, பெரு

ஐந்து லட்சம் ரூபா செலவில் புனர்நிர்மான வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளன.

அளவெட்டி மல்லாகம் தெங்குபனம் உற்பத்தி விற்பனவுச் சங்கம், பண்டத்தரிப்பு தெ. ப.பொ. உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம், தெல் லிப்பளை தெ. ப. பொ. உ. விற்பனவு கூட்டுறவுச்சங்கம், பனம் பொருள் உற்பத்தி விற் பனவுக் கூட்டுறவுச்சங்கங்கள் ஐந்து இணைந்த சமாஜமே சங் கனை வடிசாலையை இணைந் து நடத்தவுள்ளன.

தினம் நான்கு சிவ்ற் உற் பத்தி செய்யத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

நான்கு சிவ்ற் வேலை செய்

(4ஆம் பக்கம் பார்க்க)

ஞாயிறு மலர் உள்ளே

## பதில் நீதவானாக நியமனம்

(கரவெட்டி)

கரவெட்டியைச் சேர்ந்த சட்டத்தரணி ஈ. டபிள்யூ. தேவராசா கொழும்பு மாவட்டத்திற்கு பதில் நீதவானாக நீதியமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவரான இவர் சில காலம் மத்திய வங்கியில்பணி புரிந்தார்.

சிங்களச்சட்டம் காரணமாக வேலையை விட்ட இவர் பின்னர் சட்டக்கல்லூரியில் சேர்ந்தார்.

திருப்பி விடப்பட்டன. ஒரிசா சென்ற அகதிகள் தமிழ் நாட்டிற்கு திரும்புவார்களா என்று கேட்டபோது உண்மையான அகதிகளைத் தவிர ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி, எல். எவ். போன்ற போராளிக் குழுவினர் தமிழ் நாட்டில் முகாம் அமைக்க அனுமதிக்க முடியாது என்று பதிலளித் தார்.

ஈ. பி. ஆர். எல் வ்பின் தனி ஈழம் பற்றி முதலமைச் சரிடம் நிருபர்கள் கேட்ட போது பதிலளித்த அவர் பிரச்சினைகள் தீர தமிழீழ மக்களின் ஆதரவைப் பெற்று போராடும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் எந்தத் தீர்வை எடுக்கிறார்களோ அதில் குறுக்கிடுவதும் தலையிடுவதும் தி. மு க. வின் நோக்கமல்லவும் என்றார்.

# வடபகுதி தபால் சேவைகள் சீராக நடைபெறுகின்றன

தபால் ரயில் சேவை மீண் டும் ஆரம்பித்திருப்பதால் வட பகுதிக்கான ரயில் சேவைகள் சீராக நடைபெறும் என வட பகுதி தபால் அத்தியட்சகர் திரு. சேதுகாவலர் ஈழநாதத் துக்கு தெரிவித்தார்.

அண்மைக் காலங்களில் தபால் சேவை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது! பல இடங்களில் முத்திரைகளுக்கு தட்டுப்பாடு காரணமாக தாபல் நிலையங்கள் சீராக இயங்க முடியவில்லை. இனி மேல் இவை வழமைக்கு வந்து விடும் எனவும் அவர் சொன் னார்.

யாழ். நகரப் பகுதியில் தபால் சேவைகளை சீராக நடத்துவதற்கு ஐந்து புதிய வாகனங்கள் கிடைத்துள்ள தாகவும் ரயில் மற்றும் போக்கு வரத்துக்கு தடங்கல் ஏற்படும் போது இவற்றின் மூலம் தபால்கள் எடுத்துச் செல்லப் படும் எனவும் அவர் மேலும் சொன்னார்.

உள்ளூர் பஸ்கள்மூலம் தின மும் அந்தந்த தபால் நிலை யங்களுக்கு அனுப்பப்படு கிறது. அதேபோல அங்கி

(6ஆம் பக்கம் பார்க்க)

## மல்லிகை வெள்ளி விழா

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை யாழ். நாவலர் மண்டபத்தில் நடை பெற்ற மல்லிகை வெள்ளி விழா மலர் வெளியீட்டு விழாவில் நாட்டின் பல பகத் திலும் இருந்து பல அறிஞர் களும், எழுத்தாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்த னர்.

மேற்படி வெளியீட்டு விழா விற்கு எழுத்தாளர் தெளி வத்தை ஜோசப் தலைமை வகித்தார்.

விழாவின் இறுதி நிகழ்ச்சி யாக, 'இன்றைய நவீன இலக் கிய கர்த்தாக்கள் தம்சமூகக் கடமையினின்று வழுவி விட்ட னரா? என்ற தலைப்பில் விவாத மேடையும் நடை பெற்றது. (தி)

# வடக்கு-கிழக்கிற்கு மேலதிக இராணுவம் செல்லாது

(கொழும்பு)

இந்திய இராணுவம் மார்ச் 31-ஆம் திகதி இலங்கையை விட்டு விலகியதும், வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு இலங்கை இராணுவம் மேல திகமாக அனுப்பிவைக்கப்பட மாட்டாது என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித் தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத் தில் மேலதிகமாகப் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படவுள் ளன என்று கொழும்பில் பொலிஸ் வட்டாரங்கள் தெரி வித்தன.

இந்திய இராணுவத்தையும். அவர்களது உபகரணங்களை யும் ஏற்றிச் செல்ல திருகோ ணமலை த்துறைமுகத்தில் பல இந்தியக் கப்பல்கள் நங்கூர மிட்டு நிற்பதாக ஈ. பி ஆர். எல். எவ். பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்திய இராணுவம் வெளி யேறியதும், ஸ்ரீலங்காப் படை யினர் ரோந்து நடவடிக்கை யில் ஈடுபடுவார்கள் என்றும், தற்சமயம் ஸ்ரீலங்காப் படை முகாமில் தங்கியிருக்கும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## புகையிரதத்திற்கு ஆசனங்களை பதிவு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்-கொழும்பு பயணிகள் தமது ஆசனங்களை காலை 9 மணிக்கும் பன்னிரண்டு மணிக்கும்,மாலை ஒரு மணிக் கும் மூன்று மணிக்கும் இடை யில் பதிவு செய்து கொள்ள லாம் என யாழ்.மத்திய புகை யிரத நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் முதலாம் வகுப்பு படுக்கை வசதிக்கு 307.40 சத மும் இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி 176 60 சதமும் அறவிடப்படும் என அவ்வதி. காரிகள் தெரிவித்தனர். உறங் கல் இருக்கைக்கு வழமை போல் பணம் அறவிடப்படும் என்றும் அவ்வதிகாரி தெரி வித்தார். (லோ)

## குடும்ப சுகாதார சேவை

சுகாதார அமைச்சில் உதவி வைத்தியர்கள் சேவையின் கீழ் குடும்ப சுகாதார சேவை யை கொண்டுவர அங்கீகாரம் கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் தெரிவித்துள்ளார்.

சுமார் ஆறாயிரம் குடும்ப சுகாதார ஊழியர்கள் இத னால் தொழிற்துறைக்குரிய சம்பளத்தைப் பெறுவார்கள்.

குடும்ப சுகாதர ஊழியர்கள் வருடாந்தம் சப்பாத்துக்கான படியாக 300 ரூபாவையும், சீருடை செலவு செய்வதற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் கவின்கலைக் கல்லூரி திறப்புவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலாச்சாரப் பிரிவினால் ஸ்தா பிக்கப்பட்ட கவின்கலைக் கல்லூரியை விடுதலைப் புலி கள் மக்கள் முன்னணித் தலை வர். திரு. கே. மமேந்திர ராசா (மாத்தையா) திறந்து வைத்தார். ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இவ் விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலா ளர் யோகி, காசி ஆனந்தன் வன்னி மாவட்டப் அரசியற் பொறுப்பாளர சந்திரன, கிளிநொச்சிப் மாவட்டப் அரசியல் பொறுப்பாளர் கோபால் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

இவ் விழாவில் பேசிய பல ரும் தமிழ் மக்களின் கலை கலாச்சார பண்பாட்டு அம் சங்கள் பற்றியும் அவற்றின் சிறப்புப் பற்றியும், அதே வேளை அழிந்து செல்லும் பாரம்பரிய கலாச்சார அம் சங்கள் பேணிக் காக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட் டனர். மேலும் இக்கவின் கலைக் கல்லூரி பாரம்பரிய கலாச்சாரப் பண்பாட்டு அம் சங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய வாற்றை உருவாக்கவும் பாடுபட வேண் டும் எனவும் கேட்டுக்கொண் டனர்.

## நெடுந்தீவு

## மீனவர்களுக்கு இந்திய றோலர்களால் தொல்லை

(தீவுப்பகுதி)

இந்திய மீனவர்களின் தொல்லையினாலும், அடா வடித் தனத்தினாலும் நெடுந் தீவு மீனவர்கள் மிகுந்த அல் லல் உறுவதுடன் அச்சமும் தெரிவித்துள்ளனர்.

நெடுந்தீவு மீனவர்கள் மீன் பிடிப்பதற்காக் கடலில் போ டப்படும் மீன்பிடி வலைகள் யாவும் இந்திய மீனவர்களின் றோலர்களால் பிய்த்து நாச மாக்கப்படுகின்றதாம். இத னால் நெடுந்தீவு மக்களின் மீன்பிடித்தொழில் பாதிப்ப டைந்துள்ளது. இதனால் அவர்கள் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நெடுந் தீவுப்பகுதிக்கு விஜயம் மேற் கொண்ட விடுதலைப் புலிக ளின் தீவகப் பொறுப்பாளர் திரு. ஜேம்ஸ் தீவக அரசியல் பொறுப்பாளர் திரு. வீ. கஸ் ரோ, தீவக அரசியல் பிரி வைச் சேர்ந்த திரு. நரேஸ் ஆகியோரிடம்இப் மக்கள் தாம் படும் கஷ்ட துன்பங்களை எடுத்துக் கூறினர். (15)

# இன்ரசிற்றி தற்போதைக்கு இல்லை

(யாழ்ப்பாணம்)

நகரங்களுக்கிடையிலான ரயில் (இன்ரசிற்றி) தற்போ தைக்கு ஓடுவதற்கான சாத் தியக்கூறுகள் எதுவும் தென் படவில்லை என யாழ். மத் திய ரயில் நிலைய அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் அவ்வதிகாரி தெரி விக்கையில் இந்த ரயில் ஓடு வதாயின் முதலில் முக் கூட் டுப்படை தலைமை அலுவல கத்திலிருந்து தமக்கு உத்தரவு கிடைக்க வேண்டும் எனவும் வடபகுதிக்கு வந்த ரயில் ஓடுவதற்கு வசதிகளோ அன்றி ஏற்பாடுகளோ எதுவும் இன் னும் செய்யவில்லை எனவும் அவ்வதிகாரி தெரிவித்துள் ளார். (லோ)

# முன்னேற்றத்திற்குத் தடையான எதனையும் அனுமதிக்கமுடியாது -பிரேமதாசா

(கொத்மலை)

அசோக மன்னன் காலத் தில் இந்தியாவில் பல வன் முறைகள் இடம்பெற்ற பின் னர் அமைதி ஏற்பட்டது போன்று தற்போது நாட்டில் அமைதி ஏற்பட்டுள்ளது என ஜனாதிபதி ஆர். பிரேமதாச நேற்று கொத்மலை புனித

(4ஆம் பக்கம் பார்க்க)

**வரி விளம்பரம்**

**விற்பனைக்கு**

தனிச்சீனியில் அரைத்த 'ஐசிங் சுகர்' எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். M. G. M. 777, K. K. S. Road, Jaffna. (B/67)

**போட்டோஸ்ரட்**

தெளிவான போட்டோஸ்ரட் பிரதிளை விரைவாக பெற்றுக்கொள்ள நாடுங்கள் 'கிளீன் கட்''

**வகுப்பு**

Radio Tv, Air Conditioning-Refregeration வயறிங், வெல்டிங், வைன்டிங், Typing. Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை அறிமுறைப் பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid-Hall, 328, Navalar Road, Jaffna. (B-203)

**சேவை**

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள், செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ் பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-202)


# உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தமுடியாத சூழ்நிலை

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணம் உதை பந்தாட் ''லீக்'' யாழ்ப்பாண விளையாட்டுக் கழகங்களிடையே பல உதை பந்தாட்டப் போட்டிகளை நடாத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டதுடன், இலங்கை ரீதியில் மாவட்டத் தெரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்று வரும் இளைஞர் உதைபந்தாட்டப் போட்டிகளிலும் நாம் கலந்து கொள்ள முடியாத சூழ் நிலை ஏற்பட்டு விட்டது.'' என யாழ் உதை பந்தாட்ட லீக்கின் காரியதர்சி திரு. ஈ. கே. குமரையா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் கடந்த வருடம் இடை நிறுத்தப்பட்ட ''லீக்'' சுற்றுப் போட்டி ''நொக்கவுட்'போட்டிகளை தொடர்ந்து நடத்தவுள்ளோம்.

அத்துடன் 13 வயதுக்குட்பட்ட இளைஞர் கோஷ்டிகளிடையே ''நொக்கவுட்'' போட்டி ஒன்றையும் தலைவர் வெற்றிக் கிண்ணப் போட்டியையும் நடாத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இப்போட்டிகள் சம்பந்தமாக சகல ஏற்பாடுகளையும் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் போட்டிக் குழு சகல ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் தமது கழகங்களில் புதிதாகச் சேர்த்துக்கொண்டுள்ள வீரர்களை நாம் தற்போது நடாத்தவுள்ள போட்டிகளிலும் சேர்த்து விளையாடுவதற்கு அனுமதி வழங்கியுள்ளோம். ஆனால் அப்படி புதிதாக சேர்த்துக்கொள்ளும் வீரர்களின் பெயர்களைப் போட்டிக் குழு காரியதரிசி திரு. ஏ. தேவராசாவுக்கு அனுப்பி அவரின் அனுமதியைப் பெற்று அதற்கேற்ப நடக்க வேண்டும்.

இப்போட்டிகள் அனைத்தும் இம்மாத நடுப்பகுதியில் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் ஆரம்பமாகலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (42)

# பாசையூரில் நீர் விநியோகம் இன்மையால் மக்கள் அவதி

(விசேட நிருபர்)

பல ஆண்டுகளாக வீடுகளுக்கும், வீதிகளிலுள்ள தண்ணீர்க் குழாய்களுக்கும் போதியளவு நீர் விநியோகம் இன்மையால் பொதுமக்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து வந்துள்ளனர். இதன் காரணமாகக் குடிதண்ணீர் பெறுவதற்குத் தேவாலயங்களுக்கும், தனியார் வீடுகளில் இருக்கும் கிணறுகளுக்கும் பொதுமக்கள் படை எடுக்கும் நிலைமை இருந்து வருகிறது.

பாசையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூக நிலையத்தால் யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

''சீரான நீர் விநியோகம் சம்பந்தமாக உடனடித் தீர்வு ஒன்று எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் பத்திரிகையில் வெளியிட்டிருந்த செய்தி குறித்து பாசையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூக நிலையத்தினர் பாராட்டையும், நன்றியையும் ஆணையாளருக்குத் தெரிவிக்கின்றனர்'' எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (25)


79 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
**நாயகன்**
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
**அவள் ஒரு தொடர்கதை**


# வடமராட்சி வங்கிக் கிளைகளில் மீண்டும் பணப்புழக்கம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை, நெல்லியடி இலங்கை வங்கிகளில் பணம் கொடுக்கல், வாங்கல் நடைபெற்று வருகின்றது.

இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. கே. கணேசமூர்த்தி வங்கி வாடிக்கையாளர்களின் நலன் கருதி மேற்கொண்ட துரித நடவடிக்கையையடுத்தே இது நடைபெறுகிறது.

முன்னர் பருத்தித்துறை, நெல்லியடி இலங்கை வங்கிக் கிளைகளில் வாடிக்கையாளர்கள் 2000/- ரூபா வரையான பணத்தொகையையே பெறக் கூடியதாக இருந்தது.

25,000 ரூபா வரை பணம் பெறவிரும்பும் வாடிக்கையாளர்கள் இவ்வங்கிகளில் வழங்கப்படும் ''ரோக்கண்'' துண்டைக் கொண்டு, யாழ்ப்பாணம் சென்று, இலங்கை வங்கிக் கிளையில் பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை இருந்து வந்தது. (26)

# மீண்டும் பழைய இடத்தில் பஸ் நிலையம்

(பருத்தித்துறை)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறை டிப்போவின் பருத்தித்துறை பஸ் நிலைய நேரப்பதிவாளர் அலுவலகம் பருத்தித்துறைபழைய பஸ்நிலையத்தில் செயற் படத் தொடங்கியுள்ளது.

பருத்தித்துறை பஸ் டிப்போவின் சகல பஸ் சேவைகளும் பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பிப்பதையடுத்தே பஸ் நிலைய நேரப்பதிவாளர் அலுவலகம் இங்கு இயங்கத் தொடங்கியுள்ளது (25)

# மூன்று வருடம் திருத்தப்படாத மின்சார இணைப்பு

(சுதுமலை)

நவாலி அட்டகிரி கந்தசாமி கோவில் பகுதியைச் சேர்ந்த சில இடங்கள் மின்சார இணைப்பு இன்றி இருளில் மூழ்கிக் கிடக்கின்றன.

1987ஆம் ஆண்டு இடம் பெற்ற இந்திய இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த மின்சார இணைப்புகள் இன்னும் திருத்தப்படவில்லை.

இதுபற்றி அறிய வலி-தென் மேற்கு பிரதேசசபை பொறுப்பதிகாரி எஸ். பாலசுப்பிரமணியத்தை அணுகியபோது அவர் கருத்து வெளியிடுகையில், இப்பகுதியில் அறுந்து கிடந்த மின்சார வயர்கள் களவாடப்பட்டுள்ளன, இந்தக் களவு சம்பந்தமான அறிக்கையை நாம் மின்சார சபைக்கு அனுப்பியுள்ளோம். அதை சபை அங்கீகரித்து நட்டத்தை எமது புத்தகத்தில் இருந்து நீக்கிக்கொள்ளும் அனுமதி கிடைத்த பின்னரே இப்பகுதிக்கு மின்சாரத்தைக் கொடுக்கலாம் என்றார்.

# வெளியிணைப்பு இயந்திரம் புலிகளால் அன்பளிப்பு

(தீவுப்பகுதி)

ஊர்காவற்றுறை - காரை நகர்க்கிடையேயுள்ள கடலில் சேவையாற்றும் கடற்பாதைக்கு, இருபத்தைந்து குதிரைச்சக்தி கொண்ட வெளியிணைப்பு இயந்திரமொன்றை தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதிப் பிரிவு வழங்கியுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊர்காவற்றுறை-காரைநகருக்கான கடற்பாதையைக் கொழும்பு டொக்யாட் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்து சேவையில் ஈடுபடுத்தினர். இப்பாதைக்கு அவர்கள் வெளியிணைப்பு இயந்திரத்தைப் பொருத்த நடவடிக்கை எடுக்கவில்லை. தண்டுகளைக் கொண்டு, கைகள் மூலமே இது வலித்துச் செல்லவேண்டியிருந்தது. இதனால் ஒரு கரையிலிருந்து மறுகரை செல்வதற்கு நீண்ட நேரமெடுத்து வந்தது.

இதனை அவதானித்த விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதிப் பொறுப்பாளாகள் இந்த வெளியிணைப்பு இயந்திரத்தை மக்களின் நன்மை கருதி அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

## இலங்கைவங்கி கிளை இடம் மாறும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கி கிளை வெகுவிரைவில் பருத்தித்துறை நகருக்கு மாற்றப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

தற்போது இலங்கை வங்கி பருத்தித்துறை கிளை புலோலியில் இயங்கி வரும் கட்டிடத்தில் வசதிகள் இல்லாமையினால் வங்கி ஊழியர்களும் பொது மக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

## உலக வங்கி உதவியில் களஞ்சியங்களின் புனரமைப்பு

(பருத்தித்துறை)

சர்வதேச அபிவிருத்தி சபை நாவற்குழி, ஊர்காவற்றுறை, குருநகர் ஆகிய இடங்களில் உள்ள உணவு விநியோக களஞ்சியச் சாலைகளை புனரமைக்க 12.6 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.


வாழ்க ஈழநாதம்!

**GLOBE INDUSTRIES**
173, 4th Cross Street,
JAFFNA.

*Approved Dealers for National Paper Corporation*

அச்சகத்துக்குத் தேவையான காகிதாதிகளும், மை (GRAFO) வகைகளும் எம்மிடம் குறைந்த விலையில்


# சார்ஜன்ட் மீது தாக்குதல் கான்ஸ்டபிளுக்கு றிமாண்ட்

(கொழும்பு)

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அவர் கடமை புரியும் பொலிஸ்நிலைய சார்ஜன்டை தாக்கியதால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸ் நிலை

வந்த கான்ஸ்டபிள் தாக்கியதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். நீதவான் இம்மாதம் 16ஆம் திகதிவரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

### சிதத மருத்துவப் பிரிவிற்கு 1989/90ஆம் ஆண்டிற்கான

# புதிய மாணவர்களை அனுமதித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவப் பிரிவிற்கு பி. எஸ். எம். எஸ். பட்டமாணிப் படிப்பிற்கான மாணவர்களைச் சேர்ப்பதற்கு பி வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

(அ) 1986, 1987, 1988 ஆகஸ்ட் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்கவேண்டும்

(ஆ) 1990ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதியன்று 17 வயதிற்கு குறையாதவராக இருக்கவேண்டும்.

அனுமதி பற்றிய விபரங்களும், விண்ணப்பப் பத்திரமும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தேர்வுகள்) தேர்வுக் கிளை, அவர்களிடமிருந்து ரூபா 10-/ஐ செலுத்தியோ, தபால் மூலம் எனின் 23X10 செ. மீ. அளவுள்ள தபால் மேலுறை ஒன்றை முத்திரையிட்டு, விலாசமிட்டு ரூபா 10-க்கான காசுக் கட்டளையை அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16-04-1990**

(B/222) பதிவாளர்

---

வகைகளும்
எம்மிடம் குறைந்த விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

(B/227)

---

ஈழநாதம் தமிழ் மக்களின்
இதய நாதமாக ஒலிக்க
எமது நல்வாழ்த்துக்கள்!

யாழ். ஸ்ரான்லி வீதியில்

பிறிமா, எண்ணெய்க் கொழுப்புக் கூட்டுத்தாபன கோழித் தீன் வகைகளும், மருந்து வகைகளும், தண்ணீர் கலன்களும் நியாய விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யும் ஸ்தாபனம்.

# சரவணா டிரேடர்ஸ்

*174, ஸ்ரான்லி வீதி,*
**யாழ்ப்பாணம்.**

(B. 221)

---

பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸ் நிலையத்தில்நடந்த இச்சம்பவத்தில் கடமையில் இருந்த பொலிஸ் சார்ஜன்டை மதுபோதையில்

வான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். நீதவான் இம்மாதம் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

---

## ஈழநாதமே!

உன் பணி தொடர எமது நல்வாழ்த்துக்கள்!

தரமான பொருள்
மலிவான விலைக்கு
விற்கப்படும்

# டிப்டொப்
# சுப்பர் மார்கட்

358, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

---

ஈழத்தே உதித்துள்ள
ஈழநாதமே வாழ்க! [illegible]ளர்க!

**எங்களிடம்** ஆங்கில மருந்து, பால் மா, அழகு சாதனப் பொருட்கள்
நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

மக்கள் நலன் கருதி சனி, ஞாயிறு ஆகிய நாட்களிலும்
இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.

# வசந்தா பார்மஸி அன் குறோசரிஸ்

280, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

B-216

# கடந்த கால தமிழ் தலைமையினரின் அரசியல் வங்குரோத்தே காலத்திற்குக்

தமிழ் பேசும் மக்கள் தமது சுயதேசியத்துவ நிலையை அடைவதைச் சிலர் வெறும் பிரகடனப் பிரச்சினையாக்க முற்பட்டு நிற்கின்றனர் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் இது ஒன்றும் புதுமையானதல்ல. அரசியலில் வங்குரோத்தான - பலவீனமான நிலையை அடையும் தமிழ்த் தலைமைகள் தத்தம் நலன்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கான பேரம் பேசுதலுக்கு ஒரு துரும்புச் சீட்டாகவே பெரும்பாலும் தனியரசாக அமைவது பற்றிய சிந்தனையை அல்லது ஈழப் பிரகடனத்தைப் பயன்படுத்தி வந்திருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுவது இன்றைய சூழலில் அவசியமானதாகும்.

தமிழ் பேசும் மக்கள் தமது சுயதேசியத்துவ நிலையை அடைவது என்பது, சமூக ஒருமைப்பாடு, பொருளாதார அமைப்பு, பிரதேச வரையறை, கலாசாரம், மற்றும் மொழி ஆகியவற்றைப் பேணிப் பாதுகாத்து தம் சுதந்திரத்தையும், இறைமையையும் நவீன உலகில் நிலைநாட்டுதலே. இத்தகைய இலக்கை அடைவதற்காக வகுத்துக்கொண்ட ஆயுதம் தாங்கிய போராட்டப் பாதையே ஈழப் போராட்டம் ஆகும். ஆனால் ஈழப்போராட்டத்தின் உண்மையான உள்ளடக்கத்தை புரிந்து கொள்ளாமலும், அர்த்த புஷ்டியாக ஈழத்தை அமைக்கும் கைங்கரியத்தில் ஈடுபடாமல் வெறும் பிரகடனங்களை மேற்கொள்வதால் ஈழம் விடுதலையடையப் போவதும் இல்லை தமிழ் பேசும் மக்களுக்கு விமோசனம் கிட்டப் போவதுமில்லை என்பது தெளிவு.

பிரிட்டிசாரிடம் இருந்து விடுபட்ட இலங்கையின் அரசியல் வரலாற்றில் தமிழர் தாயகம் பற்றிய வலுவான போராட்டம் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளின் பின்பே முளைவிடத் தொடங்கியது. எனினும் இனவாதத்தை மையமிட்ட அரசியற் போக்குகள் திட்டவட்டமாக துலங்கத் தொடங்கிய வேளையில் எல்லாம் ''பிரிவினை'' பற்றிய அச்சமும், எண்ணமும் இருந்து வந்துள்ளன. இதற்கு

1975 ஆம் ஆண்டில் இலங்கை வந்த சிறுபான்மையினர் உரிமைக் குழுவிற்காக (Minority rights group) ஆய்வுகளை மேற்கொண்டவர் திரு. வால்டர் சுவோரசு (Waiter Sohwarz) 'இலங்கையில் தமிழர்' என்ற தமது ஆய்வில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். எதிர்காலத்தில் இலங்கையில் இனக் கலவரங்கள். வன்முறைகள். அதிரடி எதிர்ப்பு நடவடிக்கைகள் பரந்தளவில் வட அயர்லாந்திலோ, சைப்பிரசிலோ ஏற்பட்டவைகளோடு ஒப்பிடத் தூண்டும் அளவிற்கு நிகழாவிட்டால் இதுவரை காலமும் காண்பித்ததைவிட விளக்கமான தீர்வுக்கு வரவேண்டிய சூழல் தோன்றலாம். மொழி. கல்வி, வேலை வாய்ப்புத் தொடர்பான சிக்கல்களைத் தீர்க்ககாலம் கடந்து விட

ருந்துதமிழர்விடுதலைக் கூட்டணியானது தனிநாட்டுக்கான பிரகடனத்தை ஒரு பெரிய விடயமாக அல்லது காரிய சித்தியாகக் கூடிய விடயமாகக் கருதவில்லை எனத் தெளிவு பெறலாம்.

மலையக மக்களின் சார்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கம் பெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனிநாட்டுப் பிரகடனத்தை அதே ஆண்டில் இடம்பெற்ற தன் அட்டன் மாநாட்டின்மூலம் மறுதலித்தது ஒருபுறமிருக்க தமிழர் விடுதலைக் கூட்டணி ஏன் தனிநாட்டுப் பிரகடனத்தை மேற்கொண்டன என்பதையும் கவனிக்கவேண்டும்.

காங்கேசன்துறை இடைத் தேர்தல் வெற்றியின் பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அரசியல் செல்வாக்கு

தானாகவே வந்துவிடும் என்ற மனநிலையுடன் இருந்து வந்த சாதாரண மக்கள் அடுத்து வந்த இனக்கலவரத்தால் அலைக்கழிக்கப்பட்டனர். போர் என்றால் போர் என்று முரசறைந்த ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் முன்னால் கையறு நிலையில் கதறி அழுவதை விட கூட்டணிக்கு வேறு வழியிருக்கவில்லை.

இருந்தும் மக்கள் மனதில் கோபமூச்சுக்கள் கிளர்ந்தது. சாதாரண மக்கள் தமது எதிர்கால விமோசனம் ஒரு தனியரசை அமைப்பதில்தான் தங்கியிருக்கிறது என்பதை வெளிப்படுத்திய விதத்தை இளைஞர்கள் புரிந்து கொண்டார்கள். புத்திஜீவிகள் எனத் தம்மைக் கருதிக் கொண்டோரும் கம்யூனிஸ்டுக்காக தம்மை முலாம் பூசிக்கொண்டவர்களும் இதுபோன்ற ஏனைய

பட்ட கோப மூச்சுக்களும் துப்பாக்கி வேட்டுக்களாய், வெடியோசைகளாய் வெளிப்படலாயிற்று. மாவட்ட அபிவிருத்திச்சபைகளை பஞ்சாகப் பறந்தநிலையில் மீண்டும் தனிநாட்டுப் பிரகடனத்திற்கு குரல் ஒ று வெளிப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபைக்குள் விபரிதமாகப் புகுந்து கொண்ட ஒருவர், ஸ்ரீலங்கா வெளிநாட்டு அமைச்சர் பேச எழுந்த தருணத்தில் எழுந்து தமிழீழ நாட்டின் பிரதிநிதி எனக் கூறி பேச முற்பட்டார். அந்த மனிதனை திரு. கிருஸ்ணா வைகுந்தவாசன் எனப் பத்திரிகைகள் பறைசாற்றின. தன் மகன் காண்டீபனின் திருமணத்திற்காக லண்டனுக்குச் சென்ற திரு. அமிர்தலிங்கம் இந்த வைகுந்தனுக்கு தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் என்ற

உரத்தகுரலில் தனிநாடு பற்றிப் பேசத் தலைப்பட்டனர். (ஆனால் சந்தர்ப்பம் வாய்த்த போதெல்லாம் சமரசத்திற்கு தயாராக இருந்தனர் என்பது வேறுவிடயம்)

1984 தொடக்கம் 1987 வரை அநேகமாக ஒவ்வொரு தைப்பொங்கலுக்கும் முன்னதாக ''தமிழீழப் பிரகடனம்', பற்றிய சர்ச்சை இருப்பது வாழ்க்கையாக இருந்தது. எனினும் 1987 இன் ஜனவரிப் பகுதியில் மீண்டும் ஒருவித பதற்றம் நிலவியது. பெரும்பாலான பிரதேசங்களில் சிறிலங்கா இராணுவம் முகாம்களுக்குள் முடங்கிக் கிடந்த சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் ''தமிழீழப் பிரகடனம்''

கும் ஒரு பிரச்சனையாகும். குறிப்பாக திரு வரதராசப் பெருமாளும்அவரத ஈ.பி.ஆர். எல்.எப். இனரும் இதிலிருந்து சற்க வேண்டியவை அநேகம் என்பதைக் கூறியே ஆகவேண்டும். ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகால அனுபவத்தின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள் வெளிப்படுத்திய தனி அரசுக்கான கோரிக்கையை சிறிலங்கா இராணுவத்தின் நான் காண்டுகால கொடூர அடக்குமுறையின் பின்பும் தமிழ்பேசும் மக்கள் கைவிட மறுத்த வேணவாவின மறுதலித்து இந்தியப்படை தந்த தெம்பையும். இந்திய அரசின் காகித உத்தரவாதத்தையும் நம்பி காற்றிலே பறக்க விட்டு மாகாண முதல்வர்-மகுடம் தரிசித்துக் கொண்ட திரு வரதராசப்பெருமாளும்.ஈ.பி.ஆர் எல். எப்பும். இன்று மேற்கொண்ட ஈழப் பிரகடனம் வெறும் சவடால்தனமானதே என்பதில் ஐயமில்லை.

வில்லை. இத்தீவில் தமிழர்களுக்கு பாதுகாப்பான இடம் ஒன்று உண்டு என்பதை ஒப்புக்கொள்ளத் தயங்குவதன் மூலம் திரும்பவும் சிறைகள் நிரம்பி வழியவும், குண்டுகள் வெடிப்பதற்கும் அரசு வழி வகுப்பது துயரமானதே.''

1975 முதல் இன்றுவரையான அரசின் மனபபோக்கில் மாற்றம் காணப்படாமையே ஈழப் போராட்டத்திற்கான கருவாக அமைகின்றது. ஆனால் ஈழப்பிரகடனம் என்பதை ஒரு தனியரசாக தமிழ்ப் பேசும் மக்கள் மாற்றம் பெறுகின்ற ஒரு நிகழ்ச்சியைப் பூமிப் பந்தில் எங்கள் தேசப்படத்தில் எல்லைக் கோடுகளை வரைவது என்பதை தலைமைகள் தம் சுய நலத்திற்கான துரும்புச் சீட்டாக பயன்படுத்தி வருகின்றமையே கடந்தகால அனுபவமாகும்.

தமிழர் கூட்டணியாக கைகுலுக்கிக்கொண்ட பாரம்பரிய அரசியல்வாதிகள் தமது இயக்கத்தினை தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பெயர் மாற்றம் செய்ததோடு

அதிகரித்திருந்தாலும் கூட ''தமிழ்இளைஞர் பேரவை'' என்றஅமைப்பினுள்ளும்பொதுவாக இளைஞர் மட்டத்திலும்தமிழர் கூட்டணித் தலைமையின அரசியல்வழி நடத்தல் குறித்து மாறுபாடான அபிப்பிராயங்கள் எழுந்திருந்தன. கைது செய்யப்படுதலும் கால

சாரரும் பலத்த வாதங்களை ஆரம்பித்தனர். தனி ஈழநாடு வளம்மிக்கதா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு தனிநாடு வேண்டாம் எனத் தீர்ப்பளித்தனர் ஒரு சாரார். அகில உலக அரசியல் போக்கு ஈழப் போராட்டத்திற்கு சாதகமாக அமையாது எனமுடிவு

மகுடத்தை சூட்டியிருந்தார். அந்த வைகுந்தவாசன் 1982 ஜனவரி 14 இல் அதாவது தைப்பொங்கல் தினத்தன்று ''தமிழீழ பிரகடனம்'' செய்யப் போவதாய் பகிரங்கப் படுத்தினர்.

அப்போது தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பாக திரு.

**சாதாரண மக்கள் தமது எதிர்கால விமோசனம் ஒரு தனியரசை அமைப்பதில்தான் தங்கியிருக்கின்றது என்பதை வெளிப்படுத்திய விதத்தை இளைஞர்கள் புரிந்து கொண்டார்கள். புத்திஜீவிகள் எனத் தம்மைக் கருதிக் கொண்டோரும் கம்யூனிஸ்டுகளாக தம்மை முலாம் பூசிக்கொண்டோரும் இது போன்ற ஏனைய சாராரும் பலத்த வாக்குவாதங்களை ஆரம்பித்தனர்.**

வரையறையின்றித் தடுத்து வைக்கப்படுதலும் இளைஞர்களை உலுக்கி இருந்தது. தமிழ் இளைஞர் பேரவையின் ஒரு சாரார் பிரிந்து தமிழீழ விடுதலை இயக்கமாக செயற்படத் தொடங்கியிருந்ததால் ஒரு அரசியற் தலையிடி தமிழர் கூட்டணிக்கு ஏற்பட்டி

கட்டினர் இன்னொரு சாரார். அரசின் வலிமை மிகுந்த இராணுவத்திற்கு முன்னால் ஈடுகொடுக்க முடியாதே என அங்கலாய்த்தனர் ஒரு சாரார் குறுகிய இனவாதமே ஈழப் போராட்டம் என முத்திரை குத்த முயன்றனர் ஒரு சாரார் ஆனால் இவை அனைத்தை

அமிர்தலிங்கமும், திரு. சிவசிதம்பரமும் கூட்டாக இந்தப் பிரகடனத்தை கண்டனம் செய்தனர். பல மைல்களுக்கு அப்பால் இருக்கும் பொறுப்பை உணராத சிலரின் விசமத்தனமான செயல் ''தமிழீழப் பிரகடனம்'' எனக் குறிப்பிட்டிருந்தனர். மேலும்

செய்து விடுவார்களோ என ஸ்ரீலங்கா உண்மையிலேயே அஞ்சியிருந்தது எனலாம், 1986 இல் பெங்களூரில் இடம்பெற்ற ''சார்க்'' உச்சிமாநாட்டின் இடம்பெற்ற ஜே. ஆர்-ராஜீவ் பேச்சுக்களின் பெறுபேறுகள் -ஸ்ரீலங்கா அரசிற்கு சாதகமாக அமைந்திருக்கவில்லை. அத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஈழத்திற்குள் வந்துவிட்டார் என்ற செய்தியும் மேற்படி ''தமிழீழப் பிரகடனம்'' பற்றிய ஊகத்திற்கு வலுச் சேர்த்து இருந்தது. எனினும் பிரகடனம் எதுவும் மேற்கொள்ளப்படாமலேயே சிறிலங்கா இராணுவம் எடுத்த நடவடிக்கைகள் கிழக்கின் தங்கவேலாயுதபுரம், கொக்கட்டிச்சோலை, மணற்சேனை, துவரங்காடு போன்ற இடத்தில் படுகொலைக்கு காரணமாயின.

மாகாண முதல்வர் பதவியில் ஒட்டிக்கொண்ட வேளையில் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாண முயற்சிப்பதும்,அந்தப் பதவி பறிபோய்விடும் என்ற நிலையில் தனி நாட்டுப் பிரகடனம் மேற்கொள்வதும், உண்மையில் மக்களின் வேணவாவினையும், அபிலாசைகளையும் தம் சொந்த நலத்திற்குப் பயன்படுத்தும் முயற்சியே அன்றி வேறில்லை.

ஆனால் தமிழ் பேசும் மக்களைத் திருப்திதபடுத்தக்கூடிய தீர்வொன்றை முன்வைத்து தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க சிறிலங்கா அரசு இக் கட்டத்திலும் தவறுமாயின் இனி மேல் ஈழப் பிரகடனம் என்பது கடந்த காலங்களைப் போல போலித்தனமான ஒன்றாக இருக்க மாட்டாது என்பது மட்டும் நிச்சயமானது.

தாயகம் பற்றிய வலுவான போராட்டம் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளின் பின்பே முளைவிடத் தொடங்கியது. எனினும் இனவாதத்தை மையமிட்ட அரசியற் போக்குகள் திட்டவட்டமாக துலங்கத் தொடங்கிய வேளையில் எல்லாம் ''பிரிவினை'' பற்றிய அச்சமும், எண்ணமும் இருந்து வந்துள்ளன. இதற்கு எடுத்துக் காட்டாக ''ஒரு மொழி என்றால் இருநாடு. இருமொழி என்றால் ஒரு நாடு'' என்ற கொல்வின் ஆர். டி. சில்வாவின் பாராளுமன்றக் கூற்றைக் கொள்ளலாம். தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பேணாமல் இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பேணமுடியாது என்ற அர்த்தத்தில் 1956 இல் பேசிய இதே கொல்வின் 1972 புதிய அரசியலமைப்பை எழுதும்போது எப்படி நடந்து கொண்டார் என்பது வேறு விடயம்.

அடங்காத் தமிழன் சுந்தரலிங்கமும், சுயாட்சி நவரத்தினமும் அவ்வப்போது பிரிவினை பற்றிப் பேசியிருந்த போதும்கூட 1976 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பண்ணாகம் பிரகடனத்தின் பின்னர்தான் ஈழக் கோரிக்கை அர்த்தமுள்ளதொன்றாக மாற்றம் கண்டது. அவ்வாறு மாற்றம் பெறுவதற்கான காரணிகளை இங்கு சுட்டிக் காட்டுதல் பொருத்தமானது.

நலத்திற்கான துரும்புச் சீட்டாக பயன்படுத்தி வருகின்றமையே கடந்தகால அனுபவமாகும்.

தமிழர் கூட்டணியாக கைகுலுக்கிக்கொண்ட பாரம்பரிய அரசியல்வாதிகள் தமது இயக்கத்தினை தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பெயர் மாற்றம் செய்ததோடு தனிநாட்டுக்காக போராடப் போவதாய் பிரகடனம் செய்தனர். வட்டுக்கோட்டை தீர்மானம் எனப் பெயர் பெற்ற இப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்ட 1976 மே 14 முதல் அவர்கள் எப்படிப் போராடினர் என்பதை வரலாற்றை அறிந்தவர் அறிவர். இந்தப் பிரகடனத்தின் பின்னர் கூட்டணித் தலைவர்களைக் கொழும்பில் பேட்டி கண்டார். Asiaweek பத்திரிகையின் நிருபராக இருந்த றொபின் ஒஸ்போன் என்பார் ''தமிழர்களின் கனவுகளும் திட்டங்களும்'' என்ற தலைப்பில் Asiaweek எழுதிய கட்டுரையில் ''குளிர்தரும் மரங்களின் கீழே சுவைப்பதற்கு அருமையான குளிர்பானங்களுடன், எந்த நாட்டுடன் போரிடுவதாகச் சொல்கிறார்களோ அந்த நாட்டின் தலைநகரிலேயே ஒரு விடுதலை இயக்கத்தின் தலைவர்களை சாதாரணமாக சந்திப்பது இயலாத காரியமாகவே இருக்கக்கூடும். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை மிக இலகுவாக சந்தித்துவிட முடிந்தது.'' எனக் குறிப்பிட்டார்.. ஆக இதிலி

வரையறையின்றித் தடுத்து வைக்கப்படுதலும் இளைஞர்களை உலுக்கி இருந்தது. தமிழ் இளைஞர் பேரவையின் ஒரு சாரார் பிரிந்து தமிழீழ விடுதலை இயக்கமாக செயற்படத் தொடங்கியிருந்ததால் ஒரு அரசியற் தலையிடி தமிழர் கூட்டணிக்கு ஏற்பட்டிருந்தது. ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் ஆரம்பக் குறியீடுகளான ஆயுதப் பிரயோகங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக சம்பவங்களாகவெளிப்படத்தொடங்கி இருந்தது. இவை அனைத்திற்கும் மேலாக பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்துவந்தன. இத்தகைய அக- புற அரசியல் காரணிகளுக்குஇடையேதான் தமிழர் விடுதலைக் கூட்டணி தனநாட்டுக்காக போரிடப் போவதாகக் கூறிக் கொண்டது. அதாவது சரிந்து கொண்டிருக்கும் அரசியல் செல்வாக்கை தூக்கி நிறுத்துவதும், அரசுடன் பேரம் பேசுதலுக்கான சந்தர்ப்பத்தை உருவாக்குவதுமே கூட்டணியின் இலக்குகளாக அமைந்திருந்தது எனலாம்.

ஆனாலும் 1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலை தமிழகத்திற்கான சர்வதேச வாக்கெடுப்பு எனப் பிரகடனப் படுத்திய தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றி பெற்றது. வாக்களித்து விட்டால் போதும் விடுதலை

கட்டினர் இன்னொரு சாரார். அரசின் வலிமை மிகுந்த இராணுவத்திற்கு முன்னால் ஈடுகொடுக்க முடியாதே என அங்கலாய்த்தனர் ஒரு சாரார் குறுகிய இனவாதமே ஈழப் போராட்டம் என முத்திரை குத்த முயன்றனர் ஒரு சாரார் ஆனால் இவை அனைத்தையும் மீறி போராட்டம் வேகம் கண்டபோதுஅந்த வெற்றியில் குளிர்காய முற்பட்டனர் சிலர்.

அமிர்தலிங்கமும், திரு. சிவசிதம்பரமும் கூட்டாக இந்தப் பிரகடனத்தை கண்டனம் செய்தனர். பல மைல்களுக்கு அப்பால் இருக்கும் பொறுப்பை உணராத சிலரின் விசமத்தனமான செயல் ''தமிழீழப் பிரகடனம்'' எனக் குறிப்பிட்டிருந்தனர். மேலும் தமது செயல்களின் விளைவுகளால் பாதிக்கப்படாதசூழ்நிலையில் உள்ள ஒரு குழுவினர் இவ்வாறான நடவடிக்கைகளில்

பிரகடனம் எதுவும் மேற்கொள்ளப்படாமலேயே சிறிலங்கா இராணுவம் எடுத்த நடவடிக்கைகள் கிழக்கின் தங்கவேலாயுதபுரம், கொக்கட்டிச்சோலை, மணற்சேனை, துவரங்காடு போன்ற இடத்தில் படுகொலைக்கு காரணமாயின.

இத்தைய சூழலில் இடம்பெற்ற இந்திய இராணுவத் தலையீடும் அதனால்ஏற்பட்ட அனர்த்தங்களும் அனைவருக்

கையை வென்றெடுக்க சிறிலங்கா அரசு இக் கட்டத்திலும் தவறுமாயின் இனிமேல் ஈழப் பிரகடனம் என்பது கடந்த காலங்களைப் போல போலித்தனமான ஒன்றாக இருக்க மாட்டாது என்பது மட்டும் நிச்சயமானது.

சாதாரணன்.

# காலம் ஈழப் பிரகடனம்

மாவட்ட அபிவிருத்திச் சபை ஒன்றைத்தாபித்து அதிகாரப் பரவலாக்கல் செய்வதனூடாக இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயன்ற ஜே. ஆருக்கு தோள் கொடுத்தது தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழத்திற்கு இது ஒருதங்குமடம் என்று பறைசாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் அம்மாவட்ட அபிவிருத்திச்சபையில் ஓரிரு மாதங்கள் கூடத் தாக்குப் பிடிக்க முடியவில்லை. இளைஞர்களின் பொங்கிவந்த ஆவேச அலையும்,

மக்களிடமிருந்து வெளிப்

ஈடுபடமுடியாது எனப் பறைசாற்றினர். தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழ் பேசும் மக்களின் அடிப்படை அபிலாசையை நிறைவேற்ற எந்தக் கைங்கரியத்திலும் ஈடுபடாத நிலையில் 1983 இன் இனக் கலவரம் உக்கிரமாக வெடித்தது. சிறிலங்கா அரசு தமிழ் பேசும் மக்களை அழித்தொழிக்க கங்கணம் கட்டிச் செயற்படுகின்றதோ என உலகமே ஐயுற்றது. ஆறாவது திருத்தச் சட்டத்தின் வாயிலாக பாராளுமன்றத்தில் இருந்து தூக்கி எறியப்பட்ட நிலையில் கூட்டணியினர் மீண்டும்

## மாற்றலாகிச்சென்றோர் ஆவணங்களை ஒப்படைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

காலாவதியான யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையிலிருந்து மாற்றலாகி வேறு திணைக்களங்களுக்கு சென்ற அலுவலர்கள் தமது பொறுப்பிலிருந்த ஆவணங்களையும் கோவைகளையும் இந்த அபிவிருத்திச்சபையை புதிதாக கையேற்றவர்களிடம் கையளிக்கவில்லை.

இதனால் இச்சபையின் முடிவுக் கணக்குகளை தயாரிப்பதில் பெரும் சிரமம் இருப்பதாக யாழ். செயலக பதில் கணக்காளர் தெரிவித்துள்ளார். 1987ஆம்ஆண்டுடன் இச்சபைகலைக்கப்பட்டுவிட்டது. ஆனால் முடிவுக் கணக்குகள் தயாரித்து அந்தந்த பகுதிகளுக்கு விநியோகிப்பது கஷ்டமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


ஈழநாதம் தமிழ் மக்களின்
இதயநாதமாக ஒலிக்க எமது நல்வாழ்த்துக்கள்

அழகான, தரமான
வர்ண அச்சுவேலைகட்கு
யாழ்நகரமக்களின்
அபிமானம் பெற்ற ஸ்தாபனம்

சாந்தி அச்சகம்
575, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ஈழநாதம்

# காசை விட விஸாக் காட் பெறுமதியுடையது-வி.ஜே.வில்சன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இலங்கை வங்கி விஸாக் காட் திட்டம் ஒரு வருஷத்துக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டாலும், நாட்டு நிலை காரணமாகத் தாமதித்து இப்பொழுதுதான் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு இலங்கை வங்கி அறிமுகப்படுத்தி விஸா காட் திட்டம் பற்றி நேற்று ஞானம்ஸ் ஹொட்டலில் நடந்த கலந்துரையாடலின் போது இலங்கை வங்கியின் பிராந்திய பிரதி முகாமையாளர் ஏ. கணேசமூர்த்தி தெரிவித்தார்.

விஸாக் காட் நடைமுறை, வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அறிமுகப்படுத்தப்பட்டுப் பிரபல்யம் அடைந்துள்ளதென்றும், இலங்கையில் இப்பொழுதுதான் நடைமுறைப் படுத்தப்பட்டு கொழும்பு நகரில் பெரும் வெற்றியைத் தந்துள்ளது என்றார்.

வி. ஜே. வில்சன், இலங்கை வங்கி உதவி முகாமையாளர் கருத்துத் தெரிவிக்கையில், விஸாக் காட் முறை வங்கிக்கு மாத்திரம் நன்மை பயப்பதல்ல. இத்திட்டம் வாடிக்கையாளருக்கும் நன்மை தரும். இப்போது ஐந்நூறு ரூபா கள்ளநோட்டுக்கள் ஏராளமாகப் புழக்கத்தில் உள்ளன. காசோலையைவிட இது பெறுமானமுடையது. காசைக் கையில் வைத்துக் கொண்டு பயத்துடன் அலையவேண்டியதில்லை. காசு இல்லை என்று திரியவேண்டியதில்லை என்றும், விஸாக் காட்டைக் கொடுத்தே பண்டங்களை வாங்கிவிடலாம் என்றார்.

செயற்பாட்டு முகாமையாளர் எம். கனகரெத்தினம், பாலச்சந்திரன் ஆகியோரும் கலந்துரையாடலின் போது கருத்துத் தெரிவித்தார்.

## குடத்தனை பாடசாலைக்கு புதியமாடிக் கட்டடம்

(பருத்தித்துறை)

குடத்தனை மணற்காடு றோமன் சத்தோலிக்க வித்தியாலயத்திற்கு பாடசாலை அபிவிருத்திச்சபை, நலன் விரும்பிகள், பழைய மாணவர்களின் உசவியுடன் நிர்மாணிக்சப்பட்டுவரும், ஆறுஇலட்சம் ரூபா செலவிலான அலுவலகம், வகுப்பறைகளைக் கொண்ட மாடிக்கட்டடம் பூர்த்தியடையும் நிலையில் இருக்கின்றது.

இப் புதிய மாடிக்கட்டடம் அடுத்த மாத இறுதியில் திறந்துவைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வித்தியாலயத்திற்கு அரசின் உதவியின்றி மக்களின் ஒத்துழைப்பினால் சுமார் ஆறு இலட்சம் ரூபா செலவிலான இக்கட்டடம் அமைவது ஏனைய பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக அமைவதாக கல்வித் திணைக்கள உயரதிகாரியொருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

இவ் வித்தியாலயச்தில் ஆசிரிய பற்றாக்குறையும், தளபாட பற்றாக்குறையும் மாணவர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இம் மாணவர்களின் குறைபாடுகளைப் போக்குமுகமாக கத்தோலிக்க சமய ஆசிரியரொருவரையும், விஞ்ஞான ஆசிரியரொருவரையும், ஆங்கில ஆசிரியரொருவரையும் நியமிக்குமாறு கல்வித்திணைக்களத்தை பாடசாலை அபிவிருத்திச்சங்கம் கோரியுள்ளது. (25)

## மீளக்குடியமர்தல் நிவாரணம் தாமதமின்றி பெறவேண்டும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கி கிளையில் வங்கி விடுமுறை நாட்களில் தொடர்ந்து மீளக்குடியமர்தல் நிவாரணம் கிராம சேவை அலுவலர் பிரிவுகள் ரீதியாக வழங்கப்பட்டு வருகின்றன.

கிராம சேவை அலுவலர் பிரிவுகள் அறிவிக்கப்பட்டு நிவராணம் வழங்கப்படும் போது நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளத் தவறின் மீண்டும் அந்த குறிப்பிட்ட கிராம சேவை அலுவலர் பிரிவிற்கு வழங்கும் நாள் பத்திரிகைகள் வாயிலாக மக்களுக்கு அறிவிக்கப்படும்.

குறிப்பிடப்படும் அந்த நாளிலேயே பெறத் தவறிய நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதனை விடுத்து இன்னொரு கிராம சேவை அலுவலர் பிரிவுக்கு நிவாரணம் வழங்கப்படும் போது முன்னர் நிவாரணத் தைப் பெறத்தவறி வருபவர்களுக்கு வழங்கப்படமாட்டா

## யாழ்ப்பாணத்தில் அண்மையில் கொலைகளைவிட

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(பருத்தித்துறை)

அல்வாய் பாரதிதாஸன் சனசமூக நிலையமும், விளையாட்டுக்களகமும், விளையாட்டுக்கள கங்களுக்கிடையேயான நான்கு பேர்கொண்ட கரப்பந்தாட்டச்சுற்றுப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

இக்கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் பாரதிதாஸன் சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம் அல்வாய் தெற்கு, அல்வாய் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (25)

## பெண் எயிட்ஸ் நோயாளிகளுக்கு தனிப்பிரிவு

(கொழும்பு)

எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கென தனியான அவசர சிகிச்சைப் பிரிவொன்றை நிறுவ, சுகாதர அமைச்சு தீர்மானித்திருப்பதாசத் தெரியவருகிறது இப் பிரிவு டி சேய்சா மகப்பேன்று இல்லத்தில் அல்லது காசில் வீதி பெண்கள் மருத்துவமனையில் அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எயிட்ஸ் நோய் கண்டுள்ள தாய்மாரின் மகப்பேற்றைக் கவனிப்பதற்கென்று, தாதிகள் குழு ஒன்றுக்கு விஷேச பயிற்சி அளிக்கவுள்ளதாக சுகாதார அசைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்சமயம் எட்டுமாதக் கர்ப்பிணிக்கு ஏப்பிரல் மாதத்தில் குழந்தை பிறக்கவிருக்கிறது. இதுதான் இலங்கையில் பிறக்கப்போகும் முதல் எயிட்ஸ் குழந்தையாகும்

## இன்று கொடித்தினம்

(கிளிநொச்சி)

கரைச்சி சைவ அபிவிருத்திச் சங்கத்தின் குருகுலம் அனாதைஇல்லத்தின் கொடித்தினம் இன்று நடைபெறும். இன்று மாலை 3 மணிக்கு கிளிநொச்சி குருகுல அனாதை இல்ல மண்டபத்தில் நடைபெறும் விசேட பொதுக் கூட்டத்திற்கு மேற்படி குருகுலத்தின் தலைவர் கே. துரைராசா தலைமை தாங்குவார். இவ் வைபவத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, சர்வோதய இயக்குனர் திரு ஜெகா செந்தில் நாதன் கிளி

# காங்கிரஸ் ரயில் மறிப்புப் போராட்டம் ரயில்சேவைகளைப்பாதிக்கவில்லை

(சென்னை)

தமிழ் நாட்டில் நேற்று இந்திரா காங்கிரஸ் நடாத்திய ரயில் மறியல் போராட்டம் காரணமாக தொண்ணூற்று ஐந்து சதவீதம் ரயில் போக்குவரவு பாதிக்கப்படவில்லை என்றும் சிறு தாமதமாக சகல ரயில் சேவைகளும் நடைபெற்றதாக தென்னக ரயில்வே அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த மறியல் போராட்டம் காரணமாக தமிழக சட்டப் பேரவையின் இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார், முன்னாள் அமைச்சர்களான திரு. ப. சிதம்பரம், திரு. அருணாசலம், திருமதி மரகதம் சந்திரசேகரம் உட்பட இரண்டாயிரம் காங்கிரஸ் உறுப்பினர்களும் இரண்டாயிரம் சமூகவிரோதிகளும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் எம். பிக்களும், சட்டப்பேரவை உறுப்பினர்களும் அடங்குவார்கள்

சில ரயில்களுக்கு கற்கள் வீசப்பட்டமை போன்று சிறு சிறு சம்பவங்கள் இடம்பெற்றன. ஒரு இடத்தில் குண்டு போன்ற பொருள் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

## இ.போ.ச. பஸ் சேவை நேர அட்டவணையில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரத்து சபையின் கண்டி, மட்டக்களப்பு போன்ற இடங்களுக்கான பஸ் சேவைகளில் நேரமாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 6.45 மணிக்கும் 7.00 மணிக்கும் மட்டக்களப்புக்கு மேற்கொள்ளப்பட்ட சேவைகள் முறையே 6.00 மணிக்கும், 6.30 மணிக்கும் மேற்கொள்ளப்படும்.

கண்டிக்கான பஸ் சேவை 6 30 மணியாக நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இது நாளை பன்னிரெண்டாம் திகதி நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## ரைக்ரர் மோதி மாணவி காயம்

(கிளிநொச்சி)

முரசுமோட்டையில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பாடசாலை மாணவி ஒருவர் ரைக்டர் ஒன்றினால் மோதுண்டதில் காயமடைந்தார். அவரின் சைக்கிளும் மிக மோசமாகச் சேதமடைந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஸ்தலத்துக்கு விரைந்து காயமுற்ற பாடசாலை மாணவியை வைத்தியசாலைக்கு அனுப்பியதுடன், சைக்கிளுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு ரைக்டர் சாரதியிடமிருந்து நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொடுத்தனர்.

## பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சியும்

(நாவாந்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியும், கலை கலாச்சாரப் பிரிவும் நடாத்தும் பொதுக் கூட்டமும், கலை நிகழ்ச்சியும் இன்று மாலை 7 மணிக்கு நாவாந்துறைச் சந்தைக்கு அருகாமையிலுள்ள சென் நிக்கிலாஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

## கிரிக்கெட் போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான

## சீனியின் விலையைக் குறைக்க அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

உலகச் சந்தையில் சீனியின் விலை குறைந்துள்ளதால் நாட்டில் சீனியின் விலையை குறைக்க வர்த்தக அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் சீனி இறக்குமதியாளர்களுடன் பேச்சு நடாத்தவுள்ளார்.

எதிர்வரும் புதுவருடத்துக்கு சீனிவிலை குறைக்கப்படலாம் என வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் உலக சந்தையில் பால்மாவின் விலை குறைந்துள்ளதால் லக்ஸ்பிறேயின் விலை குறைந்தது. இது போல ஏனைய பால்மாவின் விலையைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## மோட்டார் சைக்கிள் விபத்து! ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் எதிர்பாராதவிதமாக மின் கம்பத்தில் மோதுண்டதில் பலத்த காயங்களுக்குள்ளானார்.

செல்லையா மகேஸ்வரன் (18) என்பவரே விபத்துக்குள்ளானவராவார். இவர் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தற்போது யாழ்.

## கத்தி வெட்டால் இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தம்பிமுத்து உதயசந்திரன் என்ற (19) இளைஞர் கத்தி வெட்டு சம்பவமொன்றில் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கம்பட்டுள்ளார்.

இவர் மணியம் தோட்டம் பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## சட்டியில் விழுந்த குழந்தை மரணம்

(அம்பலாங்கொட)

மூன்று வயதுக் குழந்தை தற்செயலாகத் தவறி எண்ணெய்ச் சட்டியில் விழுந்த சம்பவமொன்று சென்ற வியாழனன்று அம்பலாங்கொடயில் நடந்துள்ளது.

பெற்றோர் அல்வா கிண்டிக் கொண்டிருந்தபோது, அடுப்புக்குப் பக்கத்திலிருந்த கதிரையில் ஏறும்போது, தவறி கொதிக்கும எண்ணெய்ச் சட்டியில் குழந்தை விழுந்ததாம்.

யாழ்ப்பாணத்தில்

# அண்மையில் கொலைகளைவிட தற்கொலைகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த நான்கு மாதங்களுக்கு முதல் துப்பாக்கிச் சூட்டுக் கொலைகளும் கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்ட கொலைச் சம்பவங்களுமே யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வந்தது.

ஆனால் தற்போது அந்நிலை மாறி தற்கொலை சம்பவங்களும் தவறுதலாக ஏற்பட்ட இறப்பு சம்பவங்களுமே அடிக்கடி அனுமதிக்கப்பட்டுவதாக வைத்திய சாலை வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

கடந்த பத்தாம் திகதி மட்டும் நான்கு இறப்பு சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவை அனைத்தும் தற்கொலையோ அன்றி தற்செயல் விபத்தாலோ ஏற்பட்ட மரணங்களே என மரண விசாரணைகளின் போது தெரிய வருகிறது. (லோ)

# சாவகச்சேரியில் மீண்டும் கமத்தொழில் இலாகா

(யாழ்ப்பாணம்)

கடந்த காலத்தில் இந்திய இராணுவத்தின் தடை முகாமாய் இருந்த சாவகச்சேரி கமத்தொழில் இலாகா அலுவலகம் அண்மையில் திறக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணக் கமத்தொழில் மத்திய அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் முதற்கட்டமாக ஐநூறு விவசாயிகளுக்கு இலவசமாக மண்வெட்டிகள் வழங்கப்பட்டதாகவும்இதற்கு யாழ். அலுவலகத்திலிருந்து பிரத்தியேக அதிகாரிகள் அங்கு விஜயம் செய்து நிகழ்ச்சியை சிறப்பித்ததாகவும் அவ் அதிகாரிகள் மேலும் கூறுகையில் தெரிவித்தனர். (லோ)

# தபால் புகையிரதத்திற்கு யாழ்ப்பாணத்தில்வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திற்கு நேற்று காலை சரியாக ஆறு மணிக்கு தபால் புகையிரதம் வந்து சேர்ந்தது. புகையிரத நிலைய அதிகாரிகளும் பொது மக்களும் கூடி வரவேற்றனர்.

கடந்த ஏழு ஆண்டுகளின் பின் வந்திருந்த இந்த இரயிலை பட்டாசுகள் கொழுத்தப்பட்டு புகையிரத நிலையம் தோரணங்களாலும் வாழை மரங்களாலும் சோடிக்கப்பட்டு வரவேற்கப்பட்டது. அத்துடன் குறிப்பிட்ட நேரத்துக்கு அரை மணித்தியாலம் முன்னதாகவே இந்த ரயில் வந்துவிட்டதாகவும் ரயில்வே அதிகாரிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

சேவை அலுவலர் பிரிவுக்கு நிவாரணம் வழங்கப்படும் போது முன்னர் நிவாரணத்தைப் பெறத்தவறி வருபவர்களுக்கு வழங்கப்படமாட்டாதென பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே மீளக்குடியமர்தல் நிவாரணம் பெறத் தகுதி பெற்று பட்டியலில் இடம் பெற்று முதற்கட்ட நிவாரணத்தைப் பெறத்தவறியவர்களுக்கு தற்போதைய பட்டியலின்படி மீளக் குடியமர்தல் நிவாரணம் 2000 ரூபாவும் வழங்கப்பட்டு வருகின்றது.

பட்டியலில் இடம் பெறாமல் இருந்தவர்களுக்கு வங்கி அறிவித்தலின் பிர 2000 ரூபாவும் சேர்த்து வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது உற்பத்தித் திறன் சார் தொழில் முயற்சிக்கான நிவாரணப் 4000 ரூபா வழங்குதல் பற்றி வங்கிவெகுவிரைவில் மக்களுக்கு அறிவிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் வேலணை விஜயம்

(தீவுப்பகுதி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான பிரதிநிதியும், யப்பான் நாட்டைச் சேர்ந்தவருமான திரு. நவோகிகோக்காவோ வேலணைக்கு விஜயம் ஒன்றைமேற்கொண்டார்.

யாழ். செஞ்சிலுவைச் சங்கமும், பலனஅபிவிருத்திச்சபையும் இணைந்து நடாத்திய பொருட்காட்சிவேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இப்பொருட்காட்சியை திரு. கோக்காவோ திறந்து வைத்தார். இவ்வைபவத்திற்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் வேலணைப் பிரதிநிதி திரு. செ.வரதலிங்கம்தலைமை வகித்தார்.

யாழ்.செஞ்சிலுவைச் சங்கம் அன்பளிப்பாக வழங்கிய பவுசருடன் கூடிய மினிஉழவுயந்திரமொன்றை திரு.கோக்காவோ வேலணைப் பிரதிநிதியிடம் கையளித்தார். யாழ். செஞ்சிலுவைச்சங்க தலைவர் டாக்டர் தெய்வேந்திரன் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். (15)

ராசா தலைமை தாங்குவார். இவ் வைபவத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, சர்வோதய இயக்குனர் திரு ஜெகா செந்தில் நாதன் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. க. வேலுப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்கள்,

## கிரிக்கெட் போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும்இடையிலான கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (25)

# வட-கிழக்கு பாராளுமன்ற தேர்தலும் நடக்கவேண்டும்

-தமிழ்க்காங்கிரஸ்

(கொழும்பு)

வடக்குக் - கிழக்கு மாகாண சபை சரியாக நடைபெறவில்லை எனக் கூறி அதனைக் கலைப்பதனால் அதே சூழ்நிலையில் நடைபெற்ற வடக்குக் - கிழக்குப் பாராளுமன்றத் தேர்தல்களும் சரியாக நடைபெறவில்லைஎன்றே கூறவேண்டும். எனவே இங்கு பாராளுமன்றத் தேர்தல்கள் நடாத்தப்படவேண்டும் என்று இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி உயர்கல்வி அமைச்சர் ஜனாப். ஏ. சி. எஸ். ஹமீத்திடம் தெரிவித்துள்ளது.

வடக்குக் - கிழக்குப் பகுதிகளில் மீண்டும் தேர்தல்கள் நடாத்தப்படவேண்டும். அதற்குச் சட்டம் இடம்தராவிடில் சட்டத்தை திருத்த வேண்டும். அல்லது பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சிடம் தெரிவிக்கப்பட்டது.

சர்வசன வாக்கெடுப்பு அவசியம் எனக் கண்டால் வடக்கிலும் - கிழக்கிலும் நடாத்தப்படவேண்டும். அல்லது வாக்கெடுப்பு அவசியமற்றது. வடக்குடன் கிழக்கு இணைவது குறித்து கிழக்கின் கருத்தை அறிவதுபோல கிழக்கும் வடக்கும் இணைவது பற்றி வடக்கின் கருத்தையும் அறியவேண்டும் அல்லது ஒருமிக்க கருத்து அறிதல் தவறாகும் எனவும் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது.

## வடபகுதி....

(1ம் பக்கம் பார்க்க)

ருந்து தபால்கள் பஸ்மூலம் எடுத்துவரப்படுகின்றன.

மன்னார், திருகோணமலைக்கும் தபால் பஸ்களில் தினமும் அனுப்பப்படுவதாகவும் மட்டக்களப்புக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் சொன்னார்.

செல்லையா மகேஸ்வரன் (18) என்பவரே விபத்துக்குள்ளானவராவார். இவர் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தற்போது யாழ். வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகிறது. (தி)

## குடும்ப....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கான படியாக 200 ரூபாவையும் பெறுவார்கள் அத்துடன் அவர்களின் அலுவலக வாடகைப்பணமும் கிடைக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## சங்கானை....

(1 ஆம் பக்சத் தொடர்ச்சி)

யுமிடத்து தினம்12,000 போத்தல் சாராயம் உற்பத்தி செய்யக் கூடியதாக இருக்கும் என அதன் தலைவர் திரு. ஐ.செல்வராசா தெரிவித்தார்.

பனம்பழங்கழியில் இருந்து பனஞ்சாரயம் வடிக்கும் திட்டமொன்றும் ஆரம்பிக்கவுள்ளதாகவும், 1989ஆம் ஆண்டு பரிச்சார்த்தமாக கழியில் இருந்து பனஞ்சாராயம் வடிககபபட்டு வெற்றி கண்டதெவும் திரு.செல்வராசா சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

## ஆந்திராவும்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு பஸ்கள் மூலம் ஒரிஸா மாநிலத்துக்கு அனுப்பப்பட்டனர்.

விஸாகப்பட்டினத்தில் இந்த 'அகதிகளுக்கு' உணவு வழங்கி அனுப்பிவைக்கப்பட்டனர்.

ஏற்கனவே பத்தாயிரம் திபேத்திய அகதிகளையும், ஏழாயிரம் பங்களாதேஷ் அகதிகளையும் வைத்துப் பராமரிக்கும் ஒரிஸா மாநிலஅரசு இவர்களுக்கும் கூடாரங்கள் அடித்துத் தங்கவைக்கும் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது. ஒரிஸாவில் வி. பி. சிங் ஜனதாதள ஆட்சியிலிருப்பது குறிப்பிடத்தக்கது.

பெற்றோர் அல்வா கிண்டிக் கொண்டிருந்தபோது, அடுப்புக்குப் பக்கத்திலிருந்த கதிரையில் ஏறும்போது, தவறி கொதிக்கும எண்ணெய்ச் சட்டியில் குழந்தை விழுந்ததாம்.

அம்பலாங்கொட மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்ட குழந்தை சிறிதுநேரத்தில் மரணமடைந்ததாகத் தெரியவருகிறது.

## வணிகத் தளிர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலையின் வணிகத் தளிர் இரண்டாவது மலர் வெளியீட்டுவிழா எதிர்வரும் 12 - 3 - 90 திங்கட்கிழமை 12 மணிக்கு நடைபெறும். இவ் வெளியீட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக கல்வி அதிகாரி சி. சிவராசா கலந்து கொள்வார். இந்நூலின் வெளியீட்டுரையினை பேராசிரியர் ந. நித்தியானந்தனும் ஆய்வுரையினை திரு. ஜெயரட்ண முன்நிகழ்த்தவுள்ளார்கள்.

## இலங்கை வங்கிக்கிளை பராமரிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை மன நோய் வைத்திய சிகிச்சைப் பராமரிப்புப் பொறுப்பை இலங்கை வங்கி பருத்தித்துறை கிளை ஏற்றுக் கொண்டுள்ளது. இம் மன நோய் வைத்திய சிகிச்சைப் பிரிவின் திருத்த வேலைகளை சுமார் 35,000 ரூபா செலவில் இவ்வங்கிக்கிளை மேற்கொள்ளவுள்ளது'

## முன்னேற்றத்திற்கு ....

(1-ஆம் பக்க தொடர்ச்சி)

நகாத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் கூறினார்

தொடர்ந்து பேசிய ஜனாதிபதி அரசாங்கத்தின முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் எந்தவொரு சத்திக்கும் இயக்கத்திற்கும் இடமளிக்கமாட்டாது, இன மத வேறுபாடு இன்றி மக்கள் ஒற்றுமைப்பட்டு நாட்டை முன்னேற்ற வேண்டும் என்று கூறினார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.




தொண்டு செய்யுமடிமை - உனக்குச்
சுதந்திர நினைவோடா?
பண்டு கண்ட துண்டோ? - அதற்கு
பாத்திரமாவாயோ!
கப்பலேறுவாயோ? - அடிமை
கடலைத்தாண்டுவாயோ!
குப்பை விரும்பும் நாய்க்கே - அடிமை
கொற்றத்தவிசுமுண்டோ!
நாடுகாப்பதற்கே - உனக்கு
ஞானம் சிறிதுமுண்டோ!
வீடுகாக்கப் போடா - அடிமை
வேலைசெய்யப் போடா

-மகாகவி பாரதி-



# எதிர்காலம் சிரிக்கிறது!

அன்று —
இருளின் மடியில்
நமது மண்
உறைந்திருந்த பொழுதில் —

''அழாதே!
அதோ வருகிறது'
என்று தாய்
'பூச்சாண்டி' காட்டி
குழந்தை
உதடுகளைப் பொத்தி வைத்தாள்!

இன்று —
'அது'கள் ஓடிவிட்டன.

சின்ன இதழ் சிறகடித்து
சிரிக்கிறது குழந்தை.
சந்தோஷம்
தந்த மாமாக்களை
முத்தமிடத் துடிக்கிறது!

— வவுனியா திலீபன்



# மௌனமான நேரம்

- மௌனம் உலகப் பொது மொழி என்றார் கவிஞர் கண்ணதாசன்
- ஒருவருடைய மௌனம் எத்தனையோ அர்த்தங்களை உள்ளடக்கக் கூடியது
- மௌனம் விபரீத விளைவுகளை மட்டுமல்ல வியத்தகு நிகழ்வுகளையும் ஏற்படுத்த வல்லது.
- ஞானியின் உயர்நிலையும மௌனம் தான். முட்டாளின தாழ்நிலையும் மௌனம். தான்
- மௌனத்தின் ஆழத்தை நிர்ணயிப்பது மௌனியின் தரம்தான்.
- அடுத்தவனின் மௌனம் உன்னைப்பற்றிய சிறந்த விமர்சனமாகவும் இருக்கலாம். ஆகவே உங்கள் 'வாய்' நிதானமாக செயல்படுவதில் அக்கறையாக இருங்கள்.

ஐயன்

நம்மில் அநேகமாக எல்லோருக்கும் பல விஷயங்கள் தெரியும். ஆனால் வேண்டிய நேரத்தில் அவற்றைச் செய்யத்தவறி விடுகிறோம் அதன் விளைவுகளை அனுபவிக்கும் போதுதான் வருந்துவதோடு பச்சாத்தாபப்படுகின்றோம். அவற்றுள் ஒன்றுதான் நாவடக்கம். இந்த நாவை அடக்கிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதனால் எத்தனையோ அருமங்களைச் சாதிக்கலாம் என மகான்கள் கூறியுள்ளனர்.

எங்களுக்கெல்லாம் பேச வேண்டிய நேரம் ஒன்று இருப்பது போல, ஒன்றுமே பேசாமல் வாய்மூடி மௌனியாக இருக்க வேண்டிய நேரமும் இருக்கிறது. இதனை நம்மில் வெகு சிலரில் சிலரே மிகமிக அருமையாக கடைப்பிடிக்கின்றோம் அதிலும் மௌனமாகச் சும்மா இருக்க வேண்டிய நேரத்தில் பேசுகிறோம். பேசவேண்டிய நேரத்தில் ஊமையாய் சும்மா இருகின்றோம்.

''சும்மா இருக்கிற் சுகம் வரும்' என்றோர் முதுமொழியும் உண்டு. எம்மால் அப்படி இருந்து விடமுடியாது, முடிவதில்லை. அப்படிச் சும்மா இருப்பது இலகுவான காரியமல்ல. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நாம் இதற்கு நம்மைப் பழக்கப்படுத்த வேண்டும். திருவள்ளுவர் கூட ''அடக்கம் அமரருள் உய்க்கும்'' என இதன்பயனைக் கூறியுள்ளார்.

எப்படி எப்படியெல்லாமோ பேசுகின்றோமோ, யாரிடமாவது பேசக்கற்றுக்கொண்டா பேசுகின்றோம். இல்லையே நமக்கு இயல்பாக வந்ததுதானே அது. ஒரு வயதுக் குழந்தையாக இருந்ததிலிருந்தே பேசிக் கொண்டும் சதைத்துக் கொண்டும் தானே வருகின்றோம். இப்போதைய நிலையில் பேசாமல் இருக்கத்தான் நாம் கற்றுக் கொள்ளவேண்டியுள்ளது. நாவை அடக்குவது சிரமமான பெரியதொரு காரியம் இதன் மூலவேர் ஒருவருடைய குணத்திலும் நடத்தையிலும் பண்பிலும் தங்கியுள்ளது.

தன்னைச் சூழ நிகழும் சம்பவங்களையும், புறத்தாக்கங்களையும் கண்டும் காணாமல், அமைதியாகவும், மௌனமாகவும் இருப்பதற்கு அசைக்க முடியாத உறுதிவாய்ந்த தன்னடக்கம் அவசியம்.

இங்கே சொல்ல நினைப்பது மிகச் சரியான பதில்தான். ஆனால் அதைச் சொல்லலாமா? அதற்கு இது ஏற்ற சமயமா? மற்றவர்களுடைய மனம் இதனைச் சொல்வதனால் புண்படாதோ? இப்படியான எத்தனையோ கேள்விகளுக்கும், மனத்தூண்டல்களுக்கும், மத்தியில் வாய்மூடிச் சும்மா இருப்பது இலேசுபட்ட காரியமல்ல. விதந்துரைத்தோ, கண்டித்தோ, ஒப்பிட்டோ பேசத்தோன்றும் வேளை மனதை அடக்கி நாவைக்கட்டி மற்றவர் சரியாக விளங்கிக் கொள்ளமாட்டார் என்ற நிலையில் வாயைத் திறக்காமல் சும்மா இருப்பது என்பதும், இதனால் உருவாகும் பயன் உருப்படியாக இருக்கமாட்டாதென்ற நிலையில் ஆத்திரமாகவோ அல்லது அதி புகழ்ச்சியாகவோ வார்த்தைகளைக் கண்டபாட்டில் கக்கிவிடாமல் அடக்குவதும் தன்னடக்கத்துக்கான உயரிய நிலைகளாகும். இது வாழ்வில் மகோன்னத நிலையை வழங்கும் வல்லமைமிக்கது.

பயனில் சொல் என்றும், எப்பொழுதும் தவிர்க்க வேண்டும். பயனுள்ள சொல்லையும் பக்குவமாகப் பிரயோகிக்க வேண்டும். வெறும் சத்தற்ற வார்த்தைகள் கண்டனத்திற்குரியனவாகிவிடும். அநேகமானவர்கள் அளவுக்கு மிஞ்சிப் பேசுவார்கள். நிதானம் நிரம்பியவர்கள் அவ்வாறு பேசமாட்டார்கள். மௌனமொழி பேசுபவர்கள் வாய்திறந்தால் வருவது அத்தனையும் முத்தாகவே இருக்கும். அவை இதய ஆழத்தில் ஊறிப் பிறபபதால் எல்லோரது நெஞ்சிலும் இடம்பிடித்து விடுவதோடு நித்திய வாழ்வையும் பெற்றுவிடுகின்றன. ஏனென்றால் அவை தேர்ந்தெடுத்த சிந்தனையில் பட்டைதீட்டிய வைர உரைகள் பேசிவிட்டுப் பின்னர் சிந்திப்பதில்லை. நாமும் அப்படியே குறைந்தது ஆயிரம் தடவை சிந்தித்து ஒருதடவை பேச வேண்டும்.

உங்கள் பேச்சொன்றே உங்களை உயர்த்தவும் தாழ்த்தவும் போதுமானது. நாக்கும் உதடும் சேர்ந்து எதையும் சொல்லிவிடும். சில வேளைகளில் எதை எதையோ சொல்லித் தப்பித்துக் கொள்ள அடிவேண்டி ஆடிப்போவதும், ஆடி உதிர்ந்து போவதும் அப்பாவிப் பற்களாக இருக்கும். ஆதலால் அளவறிந்து அளந்து பேசுவோம்.

★

சில நெருடல்கள் — சில பதிவுகள்

# தரிசனம்

## இரு நாடகங்கள்

### வாழ்க்கைப் பாதையிலே பூதத்தம்பி

அண்மையில் சுன்னாகம் மயிலணியில் முருகமூர்த்தி கோயிலுக்கு அருகாமையில் இரண்டு நாடகங்கள் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

''பூதத்தம்பி'' இசை நாடகம் பார்க்கச் சென்றதாலேயே மற்றைய சமூக நாடகத்தினை பார்க்க முடிந்தது. (!)

முன்னர் ஒரு காலத்தில் தான் சினிமாப் பாடல்களை ஒலிப்பதிவு நாடாவில்போட்டுவிட்டு மேடையிலே நாடக கதாநாயகனும், நாயகியும் ஓடிப்பிடித்து சினிமா நாயகனும், நாயகியும் செய்யும் திருவிளையாடல்களைச் செய்வார்கள் என்று நம்பிக்கொண்டிருந்த எண்ணத்தில்உண்மையில் இடிதான் விழுந்தது.

நகரப்புறங்களிலும், பாடசாலைகளிலும் பல்கலைக்கழகத்திலும் நாடகம் பற்றி நவீன சிந்தனைகளும் விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டிருக்கையில் கிராமப்புறங்களின் நிலைமை! என்ன?

உண்மையில் அவை கவலைக்குரிய நிலையில் தான் உள்ளன என்றே கருதவேண்டியுள்ளது. ஒரு புறத்தில் குழந்தை சண்முகலிங்கம், கலாநிதி மௌனகுரு, க. சிதம்பரநாதன் போன்றவர்களை ஒத்தவர்களால் முனைப்புப் பெறும் நாடக இயக்கமும் அதன் மறுபுறம் சினிமாத்தனமான நாடகங்களாகவுமே இப்போதைய நாடக இயக்கம் உள்ளதா?

அன்றைய நாடகத்தில் நடித்தவர்கள் மல்லாகம் இளைஞர்கள் நாடகத்தின் பெயர் வாழ்க்கைப் பாதையில் மூன்றாம் தர சினிமாக் கதையினை அப்படியே நகல் எழுத்து தங்களுக்குள் அவர்கள் திருப்திப்பட்டு இருக்க வேண்டும்.

உண்மையில் அவைகளை நினைத்து அனுதாபப் படத்தான் முடிகின்றது. அவர்களது ஆர்வமும், முயற்சியும் மெச்சப்பட வேண்டியது தான். ஆனால் அதன் விளைவு என்ன?

அந்த இளைஞர்களை பொறுத்தவரை அவர்கள் அடிக்கடி பார்க்கும் சினிமாக்களும் அவற்றில் மின்னும் திரை நட்சத்திரங்களின் நடிப்பும், கதையும், உரையாடலும்தான் உன்னதமானவை. அப்படியே நடித்தால் போதுமானது என்று தான் நினைக்கின்றார்கள்.

தங்கள் சூழலை உணராமல் தங்களது பொருளாதார அரசியல் நிலமையினை அதற்கான காரணங்களை சிறிதளவு தன்னும் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றார்களா?

பல வழிகளால் சுரண்டப்பட்டும் அடக்கி ஒடுக்கப்பட்டும் இருக்கும் பின்னணியில் அதனை உணர்ந்து கொள்ள முடியாமல் எப்படி இவர்களால் இருக்க முடிகிறது? என்பது சிந்தனைக்குரிய கேள்வியே.

அன்றைய நாடகத்தில் காட்சிக்கு காட்சி சினிமாப் பாட்டுக்களும் அபிநயங்களுக்குமாக அபிமான நடிகர்களின் நடித்தார்கள்.

ஒரு காட்சியில் சினிமாப் பாடல் பின்னனியில் ஒலிக்க சிறுகுழந்தை ஒன்றினை அது கதறக் கதற வைத்துக் கொண்டு நடித்தது மனத்தினை வேதனையடையச் செய்தது.

காதைக் கிழியச்செய்த சினிமாப்பாடல் சத்தத்தின் ஊடே குழந்தையின் அழுகுரல் வெளிப்படவில்லை. கால்களும் கைகளும் துடிக்க குழந்தையினை கொடுமைப் படுத்தியது பாரதூரமான செயற்பாடாகும்.

மேற்படி நாடகத்தில் நடித்த இளைஞர்களுக்கு ஒன்றை மாத்திரம் கூறலாம். தயவு செய்து கனவு உலகத்தில் இருந்து நிஜ உலகிற்கு வாருங்கள். உங்களது ஆர்வத்தினையும் அக்கறையினையும் உரிய முறையில் பயன்படுத்துங்கள்.

விழிப்புணர்ச்சி பெற்றுள்ள நாடகக்கலையினைப் புரிந்து கொண்டு தகுதியானவர்களின் ஆலோசனைகளைப் பெற்று நல்ல நாடகங்களை மேடையேற்றுங்கள்.

இந்த இடத்தில் நமது நாடக முன்னோடிகளுக்கும் ஒரு வேண்டுகோள் உங்களது நாடகங்களை கிராமப் புறங்களுக்குக் கொண்டு சென்று சினிமா மாயையில் சிக்குண்டு உள்ள இத்தகைய இளைஞர்களினை சரியாக வழிநடத்த முனையுங்கள் பெரிதும் உபகாரமாக இருக்கும்.

★

### பூதத்தம்பி

ஏழாலை மயிலங்காடு நடிகமணி கலாமன்றம் தயாரித்து அளித்த பூதத்தம்பி இசை நாடகம் பின்னிரவில் ஆரம்பமாகி அதிகாலை மூன்று மணி அளவில் முடிந்தது

பூதத்தம்பியாக நடித்த வேலையாவின் குரல் கணீர் என்று ஒலித்து ஈர்ப்பினை ஏற்படுத்தியது.

'' பூதத்தம்பி '' கதை காலங்காலமாக பலராலும் மேடை யேற்றப்பட்டே வந்துள்ளது.

அதன அடிப்படைக் கரு எக்காலத்துக்கும் பாடம் போதிப்பதாகும் எனவே இது போன்ற நாடகங்கள் தொடர்ச்சியாக மேடையேற்றப்பட வேண்டியவையே.

சாதாரண நாடகங்களை விட இசை நாடகங்களினை தயாரித்து மேடைக்குக் கொண்டு வருவது சிரமமான செயலாகும். நடிகர்களே பாடி நடிப்பதும் இதற்கு ஒரு காரணம்.

பூதத் தம்பி நாடகத்தில் அநேகமாக எல்லோருமே சொந்தக்குரலில் பாடி நடித்தார்கள். இரண்டுமூன்றுபேரைத்தவிர ஏனையவர்கள் நன்றாகச் செய்தார்கள். அந்திராசி (எம். ஜீவன் சிவரட்ணம்) அட்மிறல் அமில் (எஸ். நவரட்ணம்) சின்னலாந்தேஸ்(எம்.இந்திரநாதன்) சிட்பாய்சு (கே. சிவரத்தினம் எஸ். செல்வலிங்கம்) போன்றோர் தத்தமது பாத்திரங்களை மனதில் பதிய வைத்தனர்.

அழகவல்லி (கே. நாகராசா) யாக நடித்தவரால் அழகவல்லியை அழுத்தமாக மேடைக்குக் கொண்டுவர முடியவில்லை. அவர் வேறு பாத்திரங்களுக்கு ஒரு வேளை பொருத்தமாக இருக்கலாம்.

சின்னலாந்தேஸ் பூதத்தம்பியை பிரிந்த சோகம் மிகைப்படுத்தப் பட்டதால் மனதில் நெகிழச்சியை ஏற்படுத்தவில்லை.

வெகு காலத்திற்கு முன்னர் நடந்த நாடகங்களுக்கும் கூத்துக்களுக்கும், அவை விடிய விடிய நடக்க வேண்டும் என்பதற்காக காட்சிகளை இழுத்தடித்தார்கள்.

காட்சிகளின் இழுவை அவற்றினால் உண்டாக்கும் தாக்கத்தினை மழுங்கடிக்கச் செய்து விடும்.

இசை நாடகத்தின் இடையே பேசப்பட்ட வசனங்கள் கூட சீராக வில்லை ஒரே வசனம் திரும்பத் திரும்ப பேசப்படுகின்றது.

நாடகத்தில் நொய்வுகள் அகற்றப்பட்டு இறுக்கப்பட்டு இன்னும் செம்மையாக்கப்பட்டால், இன்னமும் நன்றாக அமையும்.

நடிகமணி வைரமுத்து அவர்களோடு நாற்பது ஆண்டுகாலம் இணைந்து பணிபுரிந்தவரான எஸ். சின்னத்துரை அவர்கள் இயக்கிய இந்த இசை நாடகம் பல மேடைகள் ஏறவேண்டும். ★

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்

---

# கலாரதம்

## நாடகத்தில் கரணங்களும் சொற்களும்

நாடகம் பற்றிய சொற்கள் அனைத்தும் அர்த்த புஷ்டியானவை. அவற்றின் விளக்கங்கள் அபூர்வமானவை. இச்சொற்கள் ஆராய்ச்சிக்குரியவை. இவற்றை இன்று நாம் காணும் நிலையில் அறிமுகப்படுத்தும் முயற்சியில் உலக முழுவதும் நாகரீகம் அடைந்த சமூகங்களில் நம் முன்னோர்களின் ஆடல் முறைகளை ஆராய்ந்து நாம்பொருள் நாடும் போது முழுப் பொருளையும் முழுமையாகப் புரிந்து கொள்கிறோம்.

நாடகம் சமயச் சடங்குகளின் அடியாகத் தோன்றியது, என்பது எல்லோராலும் ஒத்துக் கொள்ளப் பட்ட கருத்தாகும். புராதன காலத்தில் நாடகம் திரும்பத் திரும்ப நடைபெறும் நிகழ்ச்சியாக (Series of Enactment) அமைந்தது. இந்து சமயத்தில் இன்றும் நாடகங்கள் சமயச் சடங்குகளாகவே செயற்படுகின்றன. இது கொடும்பாவி, சூரன் போர் போன்ற நிகழ்ச்சிகளாக அமையும்.

தமிழில் நாடகம்என்று வழங்கப்படுவது ஒரு வடமொழிச் சொல்லாகும். வடமொழியில் Nat என்றால் பாவனை செய்தல் என்ற பொருளில் வழங்கப்படுகிறது. சிங்களத்தில் Natung என்றால் பாவனை செய்தல் என்று பொருள்படும். Nat என்ற சொல்லே நாடகம் என்று தமிழ் மொழியில் மருவி வழங்கலாயிற்று.

பரதமுனி ஐந்தாவது வேதம் என்று கருதப்படும் நாட்டிய சாஸ்திரத்தில் அனுக்கரணம் (Anukarna) என்ற சொல்லை உபயோகிக்கிறார். கரணம் (Karna) என்றால் (A ThingDone) செய்யப்பட்டது. அனுக்கரணம் செய்யப்பட்ட பொருளை உணர்ந்து கொள்வதாகும். அனுக்கரணம் ஊமம் (Mime) என்ற சொல்லை ஒத்த கருத்துடையது. வடநூலாரும் நாடகம் என்ற சொல்லை வழங்கினார். இது ஒரு பொருளைப் பாவனை செய்வதாகும். பாவனை செய்யப்பட்டது கரணங்களாகும்.

தமிழில் கூத்து என்ற சொல் வழக்கிலிருந்தது. இது 'குதி' என்ற சொலின் அடியாகப் பிறந்திருக்கலாம். அடியார் திலகர் கூத்துஎன்பதைக் ''கதை தழுவியது'' என்கிறார். கதை தழுவியது என்ற சொற்றொடர் கரணங்கள் நிகழ்த்தப் பட்ட முறையை உணர்த்துகின்றன. ஆச்சியர் குரவையில் இளங்கோ ''கூத்துள் படுதல்'' என்கிறார். தொல்காப்பியத்துக்கும் பேராசிரியர் எழுதிய உரையிலும், இறையனார் களவியல் உரையிலும் கூத்து இலக்கணம் பற்றிக் கூறப்படுகிறது. தொல்காப்பியர் இலக்கிய வனப்புக்களைப் பற்றிச் சொல்லும் போது புலன் எனும் வகையைப்பற்றிச் சொல்கிறார். புலனில் தெரிந்த மொழி (Spoken Language) பேசப்படுகிறது. கூத்து அடிநிலை மக்களின் கலையாக இருந்

(11 ஆம் பக்கம் பார்க்க)

ஈ. ஆர். திருச்செல்வம்

# உலைக்களம்

**நமது சமூகத்தில் காணப்படும் பல்வேறு எரியும் பிரச்சினைகள் குறித்தும் இப் பகுதியில் தொடர்ந்து அலசப்படவுள்ளன.**

**ஆ - ர்.**

## சமூகச் சீர்கேடுகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகள்

மனிதன் என்பவன் ஒரு வரைமுறைக்குட்பட்ட ஒழுக்கவிதியைப் பின்பற்றி, மனிதப்பண்புகளை மதித்து வாழ வேண்டிய கடமையைக் கொண்டிருக்கின்றான்.

உலகில் ஒவ்வொரு பகுதிகளிலும் வசிக்கும் மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட பழக்கவழக்க நடைமுறைகள் உண்டு. ஆனால், ஒருபகுதி மக்களால் கைக்கொள்ளப்படும் பழக்கவழக்க நடைமுறைகள் இன்னொரு பகுதி மக்களால் கைக்கொள்ளப்படுவதில்லை. இது அந்தப்பகுதி மக்களின் வாழ்க்கைநிலைகளை அடியொற்றிஎழுந்த கலாசாரத் தனத்துவங்களுடன் சம்பந்தமுடையது.

கீழைத்தேய நாடுகளென அழைக்கப்படும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் பல நூற்றாண்டுகாலமாக மேலைத்தேய நாடுகளின் ஆக்கிரமிப்பிற்குள் இருந்து வந்ததனால் மேலைத்தேய பழக்கவழங்கங்ளின் தாக்கம் எமது மக்கள் திரளின் ஒரு பகுதியினரிடையே வேரூன்றியது.

அத்தகைய மேலைத்தேய பழக்கவழங்களைக் கைக்கொள்ள முயல்பவர்கள் உயர்ந்த அந்தஸ்துக்குரியவர்கள் என்றும், அதுதான் நாகரிகம் என்றும் ஒரு பிழையான அபிப்பிராயம் எமது மக்களில் கணிசமான பகுதியினரிடம் உண்டு.

இது எஜமான் - அடிமை உறவுமுறையின் வெளிப்பாட்டையே ஞாபகமூட்டுகின்றது. அதாவது எவ்வளவு தான் மோசமான, ஒழுக்கக்கேடான விடயங்களை ஒரு எஜமான் செய்துகொண்டுவந்தாலும் அதுதான் உயர்ந்த பண்பாடு எனக் கருதும் ஒரு அடிமையின் மனோபாவத்தை ஒத்ததுதான் மேற்குறிப்பிட்ட உணர்வுகள்.

முதலில் இத்தகைய மனோபாவங்கள் எமது மக்களின் மனங்களில் இருந்து அகற்றப்பட வேண்டும்.

எமது வாழ்க்கை முறைக்கு ஒத்துவராத சில பழக்கவழக்கங்களும், நடைமுறைகளும் மற்றும் மேலைத்தேய கலை வடிவங்களிலிருந்து திரிபடைந்து வர்த்தக நோக்கில் புழக்கத்திற்கு வந்த சில விரசமான கேளிக்கை நிகழ்ச்சிகளும் கலைவடிவம் என்னும் பெயரில் எமது மக்கள் மத்தியில் நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

பிறேக் நடனம், டிஸ்கோ நடனம் என்ற விரசமான அங்க அசவுகளைக்கொண்ட கேளிக்கை நிகழ்ச்சிகளை எமது இளம் சந்ததியினரும், சிறுவர்களும் தமது பெற்றோர்களுடன் அமர்ந்திருந்தே இவற்றைப் பார்த்து ரசிக்கின்றனர். இதனால் இவைகள் ஒரு பிழையான அம்சங்களென அவர்கள் கருதமாட்டார்கள். அவைகள் உன்னதமான கலையின் வடிவங்கள் என்ற கண்ணோட்டத்துடன் பார்ப்பதற்கூடாக ஒரு ஒழுக்கக்கேடான பண்பாடு ஒன்று எமது இளைஞர்கள் மத்தியில் வேரூன்றுவதற்கூடாக எமது உன்னதமான கலாசாரத்தில் சீரழிவை ஏற்படுத்த முனைகின்றது.

இத்தகைய கேளிக்கை நிகழ்ச்சிகள், இன்று கோயில் திருவிழாக்களின்போதும் பாடசாலை நிகழ்ச்சிகளின்போதும், சடங்கு சம்பிரதாயங்களின் போதும் முக்கியமான நிகழ்ச்சிகளாகக் கருதப்படுகின்றன.

> ஒரு யுத்தகாலகட்டத்தில் ஆக்கிரமிப்பாளனும் இத்தகைய ஒழுக்கச்சிர்கேடுகளைப் புகுத்த நேரடியாகவும், மறைமுகமாகவும் முயலுவான் அவ்வொழுக்கச் சீர்கேட்டிற்கூடாக எமது கலாசாரத்தின் சாரத்தைச் சிதைத்து எமது இளைஞர்கள், யுவதிகள் சிந்தனைகளைப் போராட்டத்தின் பக்கமிருந்து திசைதிருப்பி எமது விடுதலைப் போராட்டத்தை வேரோடு களைய எதிரி முனைந்துகொண்டிருக்கின்றான்

விழாக்களை நடாத்தும் மனிதர்களுக்கு இடையே ஏற்படும் போட்டியில் வெற்றியைத் தீர்மானிப்பவை இவ்வகையான ஒழுக்கச் சீர்கேட்டை உருவாக்கும் நிகழ்ச்சிகளே என்பதை வெட்கத்துடன் ஒப்புக்கொள்வோம்.

இத்தகைய நிகழ்ச்சிகளில் எந்த விதமான கலையம்சமும் இருப்பதில்லை. மாறாக மனிதனிலுள்ள மிருக உணர்ச்சியைத் தூண்டிவிடும் ஒரு கருவியாகவே இது பயன்படுகின்றது. இக் கேளிக்கை நிகழ்ச்சிகளின் கட்டுப்பாடற்ற வளர்ச்சிகளினால் எமது கலாசாரம் புறக்கணிக்கப்பட்டு ஒரு ஒழுக்கச் சீர்கேடான சமூகம் உருவாக அவைகள் உந்து சக்தியாக உள்ளன.

மேலும் விருந்துகள், உபசாரச் சடங்குகள், ஒன்றுகூடல்கள், ராக்கிங் போன்ற அர்த்தம் நிறைந்த செயல்வடிவங்கள் பிழையான கையாள்கையாலும், அவற்றைத் தவறாக விளங்கிக் கொண்டதாலும் அந்த நிகழ்ச்சிகளின் உண்மையான நோக்கம் கெடுக்கப்பட்டு ஒழுக்கச் சீர்கேட்டைப் புகுத்தவே அவைகள் பயன்படுத்தப்படுகின்றன.

காலத்தின் மாற்றத்திற்கேற்ற விதத்தில் வேலைத்தளங்களிலும், கல்விச்சாலைகளிலும், குறிக்கோள்களுக்காக ஒன்றுபட்டவர்களும் பிரியும் வேளை அல்லது ஒரு மகிழ்ச்சிகரமான சம்பவத்தைக் கொண்டாடும் வேளைகளிலோ, அல்லது ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி விசாலமான பார்வைகளை சகலருக்கும் கொடுக்க இத்தகைய நிகழ்ச்சிகள் உதவும் என்பது உண்மைதான்.

ஆனால், இவற்றுக்கெல்லாம் ஒரு உன்னதமான குறிக்கோள்கள் உண்டு. அப்படியிருந்த பொழுதிலும் இதற்கு மாறாக விருந்துகள் என்றவுடன் மதுவில் தொடங்கி டிஸ்கோ நடனத்துடன் முடிக்க வேண்டும் என்றும்,

ராக்கிங் என்றவுடன் அங்கசேஷ்டைகள் உள்ளிட்ட விரசமான சம்பாஷனைகளாக இருக்க வேண்டும் என்ற தவறான நடைமுறைகளாலும் அவற்றின் உண்மைத் தாற்பரியம் கெடுக்கப்பட்டு, சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய பழக்கவழக்கங்கள் புகுத்தப்படவே மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன.

இத்தகைய களியாட்டங்களை ஒரு அந்தஸ்திற்குரிய செயலெனக் கருதும் சாதாரண பெற்றோர்களும் தங்களுடைய பிள்ளைகளை தாராளமாக இந்த நிகழ்ச்சிகளுக்கு அனுமதிக்கின்றார்கள்.

ஒவ்வொரு மனிதனுக்கும் சுயமாகச் சிந்திக்கும் உரிமை உண்டு. சுயமாகச் செயற்படும் உரிமையும் உண்டு. ஆனால் சமூகக் கட்டமைப்பின் ஒழுக்க விதிகளை எழுந்தமானமாக மாற்ற முடியாது. அதற்கூடாக சமூக அமைப்பின் சரியான வளர்ச்சிப் பாதையைத் திசைதிருப்பக் கூடிய விதத்திலும், அச்சமூகத்திலுள்ள தனி மனிதர்களின் எண்ணங்களில் சமூக ஒழுக்கத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய கருத்துக்களை விதைப்பதற்கூடாக எமது சமூகம் பிழையான சிந்தனைகளுடன் வளரமுனைவதை மக்கள் அனுமதிக்கக்கூடாது.

அறிவியல் அபரிமித முன்னேற்றம்கண்ட இன்றைய உலகில் மனித வாழ்வின் ஒவ்வொரு சம்பவங்களும் ஞாபகச் சின்னங்களாகப் பாதுகாத்து வைப்பதற்காகவும் வீடியோவில் படப்பது வழக்கம்.

ஆனால், இன்று சில நகர்ப்புறங்களில் தனியார் தொலைக்காட்சி ஒலிபரப்பு நிலையங்களிலிருந்து பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா, திருமணவிழா போன்ற நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்காக தயாரிக்கின்றார்கள்.

இதில் ஒரு குழந்தையின் பிறந்தநாள் விழாவைக் காட்டும்போது அக்கொண்டாட்டத்திற்கு உரிய குழந்தையைக் காட்டுவதைவிட அந்த வீட்டிலுள்ள தொலைக்காட்சிப்பெட்டி, குளிர்சாதனப்பெட்டி, சோபாசெற், ரேப்ரெக்கோடர், முள்ளுக்கரண்டி... என்று ஆடம்பரமான வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் பொருட்களே அந்த ஒளிபரப்பில் முக்கிய இடத்தைப் பிடிக்கும்.

இதனைப் பார்க்கும் மக்களின் மனங்களில் தவறான எண்ணங்களே உருவாகும். குளிர்சாதனப்பெட்டி, சோபாசெற், முள்ளுக்கரண்டி ஆகியவற்றுடன் வாழ்வதுதா வாழ்க்கை. அவைகள் இல்லாதுவிடின் தமது அந்தஸ்திற்குப் பங்கம் ஏற்படுகின்றன எனக் கருதத் தொடங்குகிறார்கள்.

மேலும் ஒரு இளம் பெண்ணின் பூப்புனித நீராட்டுவிழா தொடர்பான நிகழ்ச்சியை ஒளிபரப்பும்போது அப்பெண்ணை விரசமான கோணங்களிலிருந்து படமாக்கி அதை ஒளிபரப்புகின்றார்கள்.

இதனால் ஒரு பெண்ணின் பருவமாற்றம் தொடர்பான பாரம்பரியச் சடங்கு ஒன்று விரசமாகக் காட்டப்படுகின்றன. இது பார்ப்பவர்களின் மனதில் கீழ்த்தரமான எண்ணங்களையே தோன்றச்செய்யும்.

இத்தகைய முறை தவறிய நடவடிக்கைகளால் எமது கலாசாரம் பாதிக்கப்படும் நிலையிலுள்ளது. இக் கலாசாரச் சீரகேடுகள் பெரும்பாலும் நகர்ப்புறத்திலும் நகர்ப் புறத்தை அண்டியுள்ள பகுதிகளிலும் சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது.

இவைகள் தொடர்பாக சில பெற்றோர்கள் ஒரு சரியான கண்ணோட்டத்துடன் பார்க்கமறுக்கின்றனர்.

தமது மகளின் சடங்கு ஊரும் ஏனையோரும் பார்க்கும்படி ஒளி பரப்பப்படுகின்றது என்று மகிழ்ச்சி அடைகின்றார்களேயல்லாமல் தமது மகளின் சடங்கு விரசமான முறையில் படம்பிடிக்கப்பட்டு, அது மற்றவர்களின் மலின ரசனைக்கு தீனியாக் கொடுக்கப்படுகின்றது என்ற உண்மையை உணரவேண்டும்.

அத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் காரணமாக இளைஞர்கள் மத்தியில் போதைவஸ்துப் பாவனையும், ஆபாசப் படச்சுருளின்(புளூ பிலிம்)புழக்கமும் அதிகரித்துள்ளன.

இப் பழக்கங்களுக்கு இன்று பாடசாலை மாணவர்களில் கணிசமானோர் அடிமையாகியுள்ளனர் என சமீபத்திய பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் மாணவர்களின் கல்வியும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

ஒரு யுத்த காலகட்டத்தில் ஆக்கிரமிப்பாளனும் இத்தகைய ஒழுக்கச்சீர் கேடுகளைப் புகுத்த நேரடியாகவும், மறைமுகமாகவும் முயலுவான். அவ்வொழுக்கச் சீர்கேட்டிற்கூடாக எமது கலாச்சாரத்தின் சாரத்தைச் சிதைத்து எமது இளைஞர்கள், யுவதிகளின் சிந்தனைகளைப் போராட்டத்தின் பக்கமிருந்து திசைதிருப்பி எமது விடுதலைப் போராட்டத்தை வேரோடு களைய எதிரி முனைந்து கொண்டிருக்கின்றான்.

உதாரணத்திற்கு, முல்லைத்தீவு நகரிலுள்ள கடைகளுக்கு ஆபாசப் படச்சுருள்களை இந்திய இராணுவத்தினர் விநியோகித்து விற்கும்படி கட்டாயப்படுத்தினார்கள். அத்துடன் நகருக்கு வரும் மக்களையும் அதை வாங்கும்படி நிர்ப்பந்தித்தனர். இதேபோல் தமிழீழத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஆக்கிரமிப்பாளர்களும், துரோகக்கும்பல்களும் சேர்ந்து எமது மக்கள் மத்தியில் ஒழுக்கச்சீர் கேடுகளைத் திணித்தனர்.

இத்தகைய போக்குகள் முளையிலேயே கிள்ளியெறியப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது ஊரிலும் இத்தகைய ஒழுக்கச் சீர் கேட்டை ஊக்கிவிக்கக்கூடிய களியாட்டங்களைக் கண்காணித்து நெறிப்படுத்தவேண்டிய பணி பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் சமூகத்தின் மூத்த உறுப்

(11ஆம் பக்கம் பார்க்க)

# இலக்கியத் தூபம்

## "அழலாடிக்குட்டன்"

**வணக்கம் வாருங்கள்**

மதிப்புக்குரிய இலக்கியத் தட வாசகர்களுக்கு எனது அன்பான வணக்கங்கள். புதிய வலுவும் இலக்கிய ஆளுமையும் கொண்ட **'ஈழநாதம் ஞாயிறு மலரின்' இலக்கியத்தடத்தின்** ஊடாக தங்களைச் சந்திப்பதில் பெரு மகிழ்வு கொள்கின்றேன்.

இந்தப் பகுதியினூடாகச் சில இலக்கிய விவாதங்களையும் இலக்கியச் செய்திகளையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள முனைகின்றேன்.

இலக்கியத் தேடலில் ஆர்வமும் அக்கறையும் உள்ள எவரும் இலக்கியத் தடம் சிறப்பாக வெளிவர உதவி செய்யலாம்.

ஒரு சாதாரண மனிதருக்கே பல சமூகப் பொறுப்புக்கள் உண்டு. எனவே கலை இலக்கியப் படைப்பாளிகள் ஏனையோருக்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். அந்தப் பொறுப்பினைச் சரிவரப் புரிந்து கொண்டு பணிபுரிய முனைவோமாக.

★ ★ ★

எந்த நிலையிலும் வளர்ச்சிபெற விரும்பும் இலக்கியப் படைப்பாளிகளுக்குத் தேடல் மிக மிக அவசியமானது.

அக்கறையும் ஆர்வமும் அதனூடாகக் கிளர்ந்தெழும் லட்சியமும் கொண்ட வாசகர்களோ, எழுத்தாளர்களோ எப்பொழுதும் நல்லதொரு ஆக்க இலக்கிய கர்த்தாவின் படைப்புக்களை நோக்கிய தேடலுக்கு முனைபவர்களாகவே இருப்பார்கள்.

இந்தத் தேடலும், அதன் விளைவாகக் கிடைக்கும் அனுபவங்களும் உயரிய சிந்தனைகளும், ஆக்கபூர்வமான கருத்து வடிவங்களும் எழுத்தாளர்களின் ஆக்கங்களை, கலைத்துவமும் ஆழமும் கொண்டவைகளாகவும் மாற்றுகின்றன.

சிறுகதைத் தொகுதி ஒன்றுக்கான விமர்சனக் குறிப்பில் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''குறித்த ஆசிரியர்கள் மிக்க கவனத்துடனேயே தங்கள் படைப்புக்களை ஆக்கியுள்ளனரெனக் கூறப்படுமானால் நிச்சயமாக சிறுகதை பற்றிய அவர்கள் வாசிப்பு வட்டம் மிகக் குறுகியதாகவே இருக்க வேண்டும் போலத் தோன்றுகிறது. ஏனெனில் புதுமைப்பித்தன், கு. ப. ரா, அழகிரிசாமி, லா.ச.ரா, தி. ஜானகிராமன் புரசு பாலகிருஷ்ணன் போன்றோருடைய ஆக்கங்களைப் பற்றிய பரிச்சயமிருப்பின் இந்தப் படைப்புக்கள் பெரும்பாலானவற்றில் இப்பொழுது காணப்படாத ஒரு கனதி நிச்சயமாக இருந்திருக்கும்.''

ஆரம்பகால எழுத்தாளர்களின் படைப்புக்களுக்கும், ஆர்வமுடன் நல்ல கட்டுக்கோப்பான சிந்தனைகளுடன் வளர்ந்த பின்னர் அவர்கள் படைக்கும் படைப்புக்களுக்கும் உள்ள இடைவெளிக்கு இதுவே காரணம்.

குறிப்பிட்ட கால வளர்ச்சி பெற்ற எழுத்தாளர்கள் தங்கள் ஆரம்பகால எழுத்துக்களையும் தங்கள் வளர்ச்சிப் படிகளையும் திரும்பிப் பார்த்தால் இதனைப் புரிந்து கொள்ளலாம்.

இது குறித்தே கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் நூல் ஒன்றின முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''இப்பொழுது எழுதும் புதிய இளம் எழுத்தாளர் பலரின் கதைகளில் அவர்களின் எழுத்துப் பயிற்சியின்மையும் குறிப்பிட்ட இலக்கிய வடிவம் பற்றிய ஞானமின்மையும் துருத்திக் கொண்டு காணப்படுகின்றன.

இன்று தமிழ்நாட்டில் சிறுகதை இலக்கிய வடிவை மேலும் புதிய புதிய பரிமாணங்களுக்குத் புதிய தலைமுறையினர் இட்டுச் செல்கிறார்கள். ஆனால் நமது முன்னோடிச் சிறுகதை எழுத்தாளர்களையும் இன்றைய ஆளுமை மிக்க சிறுகதை ஆசிரியர்களையும் அறியாமலேயே ஈழத்தின் இளைய தலைமுறை எழுத்தாளர் பலர் பல சிறுகதைகளை எழுதி விடுகின்றார்கள்''.

சிறுகதையோ, நாவலோ, கவிதையோ, எந்த இலக்கிய வடிவமாக இருந்தாலும் மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் பொருத்தமானவையே.

எனவே இலக்கிய ஆர்வத்துக்கும் கனதியான இலக்கியப் படைப்புக்களைப் படைக்கும் அக்கறையும் இருந்தால் தேடல் மிகவும் அவசியமானது.

★ ★ ★

### ஜானகிராமன் பற்றி ''சிட்டி''

''நாவல் இலக்கியத்தில் உத்திகள் அதிகம் பேசப்படுவது இன்றைய இலக்கியப் போக்குகளின் விளைவு. திட்டமிட்டு எந்த ஓர் உத்தியையும் செயற்கையாக ஜானகிராமன் மேற்கொண்டதில்லை. நனவோடை போலத் தோன்றும் கதை சொல்லும் முறை கூட, கதைமாந்தரின் இயல்பும் மற்றக்கதை மாந்தர்களுடன் அவர்களுக்கு ஏற்படும் உறவும் நிர்ணயிக்கும் போக்குத்தான் பொதுவாக, கதை வளர்ச்சியைக் கதை மாந்தரிடமே விட்டுவிட்டு அதனால் விளையும் நிலைகளுக்கு அவர்களையே பொறுப்பாக்கும் முறையையே கையாள்வதால் ஆசிரியர் என்ற வகையில் ஜானகிராமன் திட்டமிட்டு உத்தி என்ற ஓர் உபாயத்தைக் கையாளும் அவசியம் இல்லாமல் போய்விட்டது.

இவருக்கு மட்டும் கைவந்த சிறப்பான உத்தி கதைமாந்தரின் உரையாடலிலே இவர் தோற்றுவிக்கும் மௌன இடைவெளிகள்தான்.

கதைப்போக்கில் தலையிடாமல் கதைமாந்தர் மூலமே கதை சொல்லிக் கொண்டு போகும் ஜானகிராமனின் எழுத்திலே காணப்படும் வசீகரமும், நளினமும் அவர் அங்கங்கே சுட்டிக் காட்டும்முறையில் வர்ணிக்கும் காட்சிகளில் பளிச்சிடுவதை வாசகர் தம்மையறியாமலே உணர்வது அவருடைய நாவல்களையும், கதைகளையும் படிக்கும்போது அடையும் அபூர்வ அனுபவம்.

கதைமாந்தரின் தூய ஆளுமையை அவர் சொற்களில் வடிக்கும் போது அவர்களுடைய உருவங்கள் ஓவியமாகவும் சிற்பமாகவும் உயிர் பெற்று மனக்கண் முன் பிரதிஷ்டை செய்யப்பட்டு விடுகின்றன. மானிட அழகைப்பற்றி வர்ணிக்கும் போது கவிதைப் பாணியை அவர் கையாள்வதில்லை. (மிகவும் எளிய சொற்களைக் கொண்டு ஆழ்ந்த வண்ணமும் நொடிப்பொழுதில் தோன்றி மறைந்து விடும் சலனமும் கலந்து முழுமையான வடிவத்தைப் படைத்து விடுகின்றன.)

பொதுவாக மற்ற நாவலாசிரியர்களைப் போலவே ''ஜானகிராமனும் சிறுகதைக் களத்தில் பயிற்சி பெற்றுத்தான் நாவல் எழுத வந்தார்'' என்று ஜானகிராமன்பற்றி குறிப்பிட்டுள்ளார் எழுத்தாளர் சிட்டி.

★ ★ ★

### கே. டானியல்

இலக்கியத்தையோ கலைகளையோ, மனித இனத்தின் அழகு சாதனப் பொருளில் ஒன்றாகக் கருதிய காலம் இன்னும் மறைந்து விடவில்லை. அந்தக் கருத்தினை வற்புறுத்தவும், நிலைநாட்டவும் பல முதலீட்டாளர்கள் முயல்கின்றனர். பல விளம்பரங்களை உள்ளடக்கிய ஒரு சஞ்சிகையின் நட்டுக்கு நடுவே அந்த விளம்பரங்களுக்கு நிகரான முறையில் கவர்ச்சியாக இந்த இலக்கியமும் அமைய வேண்டும் என்பதற்காகவே இதற்கான தனியான கல்வி முறையும் இதற்கான பட்டப் படிப்பும் நவீனப்பட்ட முதலாளித்துவ நாடுகளில் இருக்கின்றன. இதுபோன்ற நவீன முறையை உலகெங்கும் பரப்பிவிடும் பணியிலும் பல பிரதிநிதிகள், வெளியீட்டாளர்கள், பத்திரிகையாளர்கள், படைப்பாளிகள் என்ற பெயரில் தமிழ் இலக்கிய உலகிற்குள்ளும் புகுந்திருப்பது அறியப்பட வேண்டியது.'' என்று கருத்துத் தெரிவித்திருப்பவர் மறைந்த எழுத்தாளர் கே. டானியல் அவர்கள்.

★

---

## தியாகி

**- சரவணமுத்து ஜெயா -**

மீண்டும் அதே நினைவுகள்
மிக அமைதியான அந்த இரவிலே
நிசப்தம் நிலைக்கின்றது....

அவன் எனது விடுதி மாணவன்
உணர்ச்சிகளுக்கு விடிவு கொடுத்த
நியாயமான எதிர்கால சுபிட்சத்திற்கான
விடிவெள்ளி...

காலவோட்டத்தில் கலக்கின்ற
சமுதாய இழிவுகளை
களைந்தெறியத் துடிக்கின்றவை
அவன் கரங்கள்...

இன்று....
காற்று சுவாசப் பைகளிலிருந்து
வெளியே வருவதற்குள்
உயிர் காற்றையில்லாமல் செய்யும்
நீண்ட இரும்புக்குழலினால்
நெருப்பைக் கக்கும்......

அவன் தியாகியாகி விட்டான்
வெளிச்சத்துக்காக எரியும்
மெழுகுவர்த்திகள் அவைகள்
சூறாவழிகள் அவற்றை அணைக்கும்
ஏனென்றால்...
அதற்கு வேகம் மட்டுமே உண்டு
விவேகம் இல்லை.

---

## வள்ளுவ வாக்கியம்

அவன் ஒரு பெரிய பதவியிலிருந்தான் அவனின் உதவி தேவைப்பட்டவர்களினாலேயே அவனுக்கு அப்பதவி வாய்த்தது அந்தத்தகுதி அவனுக்கோ, அதனை வழங்கும் தகமை அவர்களுக்கோ இருக்கவில்லையாயினும் அவன் பதவியில் இருந்தான். அவன் தன்னிலைக்கும் மேலாகத் தன்னை புழுகிக்கொண்டான், புகழ்ந்து கொண்டான், அதுமட்டுமல்ல மற்றவர்களை தாழ்த்துவதிலும் இன்பம் கண்டான். பதவிப்போதை, புகழ்ப்போதை, தலைக்கேற அவனது தடுமாற்றம் தொடர்ந்தது. சிலர் அவனை முட்டாள் என முணுமுணுத்துக் கொண்டனர். பலர் அவனை பைத்தியக்காரன் எனப் பட்டம் சூட்டினர். இப்போது பிதற்றல் அவர் தொழிலாகிவிட்டது. ஒருவரும் அவரை அக்கறைப்படுத்துவதுமில்லை. அழிவின் விழிம்பில் அரற்றும் அவருக்கேற்றாற்போல் வள்ளுவனின் இந்த வாக்கியம் அமைகிறது.

அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

(அரசியல் - வலியறிதல் . குறள் 474 அதிகாரம் 48)

சரியானவர்களோடு ஒத்துநடக்காது, தன் வலிமையின் அளவையும் அறியாது தன்னை வியந்து மதித்துக்கொண்டிருப்பவன் விரைவிலேயே அழிவான்

# கதைத்தேன் துளிகள்

**சுந்தரின் உள்ளத்து உணர்வுகள் இலக்கிய வடிவம் பெற்று கவித்துவமாக சுவைஞர்கள் நெஞ்சில் தேனாகப் பாய்வதினாலேயே கதைத்தேன் என மகுடமிடப்பட்டது.**

- சிரித்திரன் சுந்தர்

## இசையாமை

அந்த ஹோட்டல் ரேடியோவிலிருந்து அமுதகானம்
பொழிந்து கொண்டிருந்தது
சுற்றி நின்றவர்கள் அனைவரும் அந்தக்கான
மழையால் கட்டுண்டு கிறங்கிப்போய் இருந்தனர்
ஹோட்டல் வாசலில் ஒரு மூலையில் ஒதுங்கியபடி
பிச்சைக்காரன் போல் நின்ற அந்த மனிதனை
முதலாளி-
''ஏனப்பா இதுக்கை நிற்கிறாய்
அப்பால் போய்விடு...'' என இரைந்து
மிரட்டினார்.
''மன்னியுங்கள், என்னிடம் ரேடியோ வாங்க
வசதியில்லை... நான் பாடிய பாடல் எப்படி இருக்கிறது
என்று கேட்கவே நிற்கிறேன்...'' என
கூறியபடி இன்னும் சற்று ஒதுங்கி நின்றார்
அந்த அமுத கானத்திற்குரியவர்

## இரக்கசிந்தை

புத்தகம் ஏந்தி பாடசாலை செல்ல வேண்டிய அச்சிறுமி
பிட்சா பாத்திரம ஏந்தி வந்தாள்
அந்த பஸ் கியூ வரிசையில் நின்ற ஒவ்வொருவரையும்
நோக்கி ''ஐயா, அம்மா, தாயே...'' என இரந்து
தர்மம் கேட்டாள்
கியூவரிசையினர் மரச்சிலைகளாக நின்றனர்
வரிசை முடிவில் தாயுடன் நின்ற ஒரு குழந்தை
அந்தப் பிச்சைக்காரச் சிறுமியைப் பார்த்து கை நீட்டியது
சிறுமியின் குவளைக்குள் ஒரு பத்துச்சத நாணயம் மட்டுமே
இருந்தது.
அதை அவள் எடுத்து அன்பு வடியும் முகத்துடன், கை
நீட்டிய அக் குழந்தையின் கைகளில் வைத்து விட்டு....
''ஐயா, அம்மா, தாயே...'' என்றபடி தனது யாசகத்தை
தொடர்ந்தாள்



## பாதுகாப்பு

நூல் நிலையம்-
கண்ணாடி அலுமாரியுள் பாதுகாப்பாக வைக்கப்
பட்டுள்ள புத்தகங்கள் வரிசையுள் அந்த நூல்
அவள் பார்வையுள் பதிய...
அதனை எடுத்து ஆதியோடந்தமாக, முன்னட்டை
முதல் பின்னட்டை வரை கூர்ந்து நோக்கியவள்
தரையில் வீசப்பட்ட மீன்போல் மூச்சு வாங்கினாள்
கண்கள் அவள் பார்வையை நீர் திரையிட்டு மறை
த்தது-
அருகே வந்த நூலகருக்கு ஒன்றும் புரியவில்லை
கேள்விக்குறியோடு நின்ற அவரைநோக்கி-
''என் கணவரை காச நோய்க்கிருமிகளிடமி
ருந்து காப்பாற்ற வக்கற்றநாடு அவரின் புத்த
கத்தை மட்டும் பூச்சி புழு அணுகாமல் காப்
பாற்று... கிறது...''
என்றாள் விம்மலினூடே...



## வீடுபேறு

ஒரே கருப்பையில் உதித்த இரட்டையரால்
ஒரே வீட்டில் நிம்மதியாக வாழமுடியவில்லை
வாதம், வழக்கு பாகப்பிரிவினை வரைசென்றது
வழக்கோ தவணை தவணையாகத் தவழ்ந்தது
பிரிவினைக் குறியான வீடோ பராமரிப்பாரின்றி
கவனிப்பாரற்றுக் கிடந்தது
நீதி மன்றத் தீர்ப்பினை எதிர்பார்த்து சகோதரர்கள்
அக்கறையின்றி இருந்தனர்
ஒரு நாள்... ஒரே அடைமழை.... இடிமுழக்கம்
நாட்டையே அதிரவைத்தது.,...
ஈரலிப்பால் நனைந்து ஊறி தூர்ந்து போனவீடு
இடியின் அதிர்வில் தரைமட்டமாக...
அந்த இல்லம் அவர்களின் சமாதியானது

# மனவலயம்

பிரிய—

ரசிகர்களே... வாசகர்களே... என்னை வளர்ப்பதற்கு ஆதரவுச் சாமரம் வீசிய அன்புள்ளங்களே

சில வருஷகாலம், நான் சிதைந்துபோய் இருந்தது நிஜம். ஆனாலும் என் சிந்தனைகள் சிதைந்ததில்லை.

மனதில் உறுதியுள்ள படைப்பாளியொருவன் புயல்வீசும் பொழுதுகளில் கூட புன்னகைத்துக் கொள்வான். அவன் மனதில் ஏற்படும் சின்னச் சின்னக் காயங்களுக்கெல்லாம் அவன் விழிகளின் முன் விரிந்து கிடக்கும் எதிர்காலமே மருந்து பூசும்.

★ ★ ★

சிரிப்பதும், அழுவதும் காலத்தின் கட்டளை. அப்படி காலத்தின் கட்டளையினால் என்னுள் முகிழ்த்த உணர்ச்சித் துளிகளுக்கெல்லாம் எழுத்து வடிவம் கொடுப்பதுதான் எனது இந்த முயற்சி.

கவிதை, சிறுகதை, நாடகம் என்னும் கலை இலக்கிய வடிவங்களுக்குள் கைவீசித் திரிந்தவன்; திரிபவன் நான். இனி இவற்றோடு கட்டுரை என்னும் கடற்பரப்பினுள் நீச்சலடிக்கப் போகிறேன்.

கலா வடிவத்தில் நான் தொடர இருக்கும் இக் கட்டுரைகளில்-

என் சிரிப்பு, கண்ணீர், சோபம், தாகம் போன்ற அத்தனை உணர்ச்சிகளும் வெளிப்பட்டு பரிமாணமடையும்.

இன்றைய எமது இளைஞர்களில் பலர் சசப்பான நிகழ்வுகளை, நினைவு மேடையில் இருந்து தள்ளிவிட்டு, இனிப்பு நதிக்குள் சங்கமமாகி விடுகிறார்கள்.

இது பலம் அல்ல; எதிர்காலத்தால் எச்சரிக்கப்பட வேண்டிய மாபெரும் பலவீனம்.

நடந்தவற்றையும், நடப்பவற்றையும், நடக்க வேண்டிய நிகழ்வுகளையும் நான் நாகரீகமாகச் சொல்லப் போகிறேன்.

**⊞ வவுனியா திலீபன் ⊞**

என் பார்வைகள் விழுந்த திசைகளைப் படம் பிடித்துக் காட்டப் போகிறேன்.

இவை அற்புதமானவையாகவும் இருக்கலாம்; அபத்தமானவையாகவும் இருக்கலாம். அத்தனைக்கும் காலத்துடன் இணைந்து நாமும் பொறுப்பேற்றுக் கொள்வோம்.

'சுதந்திரம்' என்ற மகுடத்தின் கீழ், நான் சிருஷ்டித்த கவிதை.

தாராளமாக
வாய்களைப் பயன்படுத்தலாம்;
சாப்பிடுவதற்கு மட்டும்!'

- எனது இராகங்கள் - பக் 24

இந்த நிலை இன்று மங்கிவிட்டது. என் பேனா இன்று வசதியோடு வாய் விரிக்கிறது.

அடுத்த வாரம் முதல் அதன் வார்த்தைகளை கட்டுரை வடிவத்தில் சந்தியுங்கள்! ★

## வாசக நேயர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும்

வாசகர்களே......
ஞாயிறு மலர் பற்றிய
உங்கள் ஆலோசனைகள்,
கருத்துக்கள், விமர்சனங்கள்
வரவேற்கப்படுகின்றன ..
எழுத்தாளர்களே
உங்களின்
ஆற்றல்மிகு ஆக்கங்களை
நாங்கள் எதிர்பார்க்கிறோம்.
நம் சமுதாய ஏற்றத்தை
முன்னெடுக்கும்ஏவுகணைகளாக
உங்கள் படைப்புக்கள்
அமையட்டும்.
பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு
உரிய சன்மானம் வழங்கப்படும்..




★ அறிமுகம்:-

பிரதான வீசியில் இருந்து பிரிந்து செல்லும் அந்த ஒழுங்கையில் இறங்கி நடக்க மதவடியைக் காணலாம்.

ஒழுங்கையின் ஊடாக போகும் வெள்ள வாய்க்காலுக்காகவே மதகு இருக்கிறது. என்றாலும் ஒருபக்க மதகு தூர்ந்து போய் விட்டது. மறுபக்க மதகு தான் ஓரளவு நன்றாக இருக்கின்றது.

அந்த மதவடியே நம்முடைய சதா நாயகர்களின் தளமாக இருக்கின்றது. மதவடிக்கு அண்மையில் நன்கு வ்சாலித்த ஓர் ஆலமரமும் இருப்பதால் வெய்யிலின் கொடுமை இல்லை.

அநேசமாக மாலையில் நான்கு மணிக்குப் பிறகு மதவடிக்கு நமது சதாநாயகர்கள் வருவார்கள். பொழுது மங்கும் நேரம் வரை நேரம் போவது தெரியாமல் கதைப்பார்கள்.

ஏனைய நேரங்களில் யாராவது வழிப்போக்சர்கள் அந்த மதவடியில் ஆறி இருந்து விட்டுப் போவார்கள்.

சில வருடங்களுக்கு முன்னர் மதவடியில் கூடியிருந்து கதைப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகத்தான் இருந்தது. ஆனால் வெளிநாட்டு மோகத்தாலும் சிலர் புலம் பெயர வேறு சிலர் வெளிநாட்டவரால் சொந்த மண்ணில் கொல்லப்பட, மிஞ்சியது விக்கியும், சவுந்திரமும், தாடிமாமா என்று அழைக்கபடும் தவாவும் வேறு சிலரும் தான்.

எண்பத்தியேழு அக்டோபர் பத்தாம் திகதிக்குப் பின்னர் கிட்டத்தட்ட இருபத்தியாறு மாதங்களாக மதவடியில் பகல் நேரத்தில் கூட யாரும் இருக்க முடியவில்லை. காரணம் மிக அண்மையில் இந்திய இராணுவ முகாம் ஒன்று இருந்தது மாத்திரம் அல்ல சொந்த வீட்டிலும் பிறந்த மண்ணிலும் நிம்மதியாக இருக்க முடியாததும் தான்.

காரண காரியங்களை இனி விளக்கவேண்டியதில்லை. அன்னிய இராணுவ முகாம் அகல பழையபடி மதவடிகளை சட்டத்தொடங்கி விட்டது. சோர்ந்து போய் இருந்த விக்கி, சவுந்திரம் தாடிமாமா மீண்டும் மதவடிக்கு மாலை வேளைகளில் வரத் தொடங்கி விட்டார்கள்.

அவர்களை தினமும் நாங்கள் அங்கு சந்திக்கலாம். அவர்கள் கதைப்பதைக் கூடக் கேட்கலாம். எல்லாவற்றையும் அல்ல. சில முக்கியமான விடயங்களை.

★ ★ ★

நேற்றைக்கு ரேடியோவில் ஒரு கதை கேட்டன் என்று தொடங்கினார் விக்கி.

''என்ன நேசக்கரங்களா? அன்பு வழியா? வெற்றிமாலையா? எனக் கேட்டான் சவுந்திரம்'' அவசரப்படாதை மச்சான். சொல்லுறதைக் கேள். நூறு வயதுக்கு மேல் எந்த விதமான நோயுமில்லாமல் ஆரோக்கியமாக வாழும் ஒருவரைப் பேட்டிகாண பத்திரிகை நிருபர்கள் அவர் வீட்டுக்குப் போனார்கள். நீங்கள் இவ்வளவு காலமும் எப்படி ஆரோக்கியமாய் இருக்கிறீங்கள் என்று அவரிடம் கேட்க எந்த விதமான கெட்ட பழக்கமும் எனக்கு இல்லை. அதுதான் காரணம் என்று பதில் சொன்னாராம். அந்த நேரத்தில வீட்டின் மாடியில சாமான்கள் தவறி விழும் சத்தங்கள் கேட்டன. மாடியில் என்ன சத்தம் என பத்திரிகையாளர்கள் கேட்டனர். மாடியில் என்னுடைய தகப்பனார் இருக்கிறார் அவருக்கு எல்லாவிதமான கெட்ட பழக்கங்களும் இருக்கு. இப்ப அவர் வெறியில் இருக்கிறார் போல அது தான் காரணம் என்றார் அவர்.

தாடிமாமா தாடியைத் தடவிக் கொண்டு ''இதில யாரைப் பின்பற்றுவது? தகப்பனையா? மகனையா? எனக்கேட்டான்

★ ★ ★

''எங்கடை இலக்கிய வாதிகள் படைக்கும் சில இலக்கியப் படைப்புக்கள் கூட இப்படித்தான். எந்தப்பக்கத்திற்கு எடுக்கிறது எண்டு தெரியாமல் இருக்கு'' என்று சொன்னான் சவுந்திரம்.

''யோசிச்சுப் பாக்க ஆத்திரம் தான் வருகுது'' என்றான் தாடிமாமா.

''ஏன்''

''ஒரு காலத்தில் தமிழரின்ரை உரிமைப்போராட்டங்களையே வெறும் பயங்கரவாதமாய் கொச்சப்படுத்தின எங்கடை நாட்டு இங்கிலீசுப் பேப்பர் எல்லாம் இப்ப என்ன மாதிரி எழுதுது எண்டு பாறன் மச்சான் எங்கடை டெடியளின்ரை படங்கள் என்ன? கட்டுரைகள் என்ன? ''வியாபாரப் பத்திரிகைகள் எல்லாமே உப்பிடித்தான். எந்தப் போட்டால் பேப்பர் விக்கும் எண்டு அவங்களுக்குத்தான் தெரியும். அதுதான் உந்த ஆட்டம் ஆடுறாங்கள்.

★ ★ ★

''என்ன இண்டைக்கு நல்லாய் காசு புழங்குது-'' என தாடிமாமாவிடம் விக்கி கேட்டான்.

அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு ''நேற்றைக்கு நிவாரணக் காசு எடுத்தனான் தானே அதில கொஞ்சம் என்ரை கைச்செலவுக்கு எடுத்தனான் ''என்றான் தாடிமாமா

'உன்ரை கைச்செலவுக்கு கொஞ்சம் நீ எடுக்க மிச்சத்தை வீட்டுக்காரர் என்ன செய்தவை.

''என்ன செய்யிறது. உடுபுடவை எடுத்திருக்க வேணும்''

''அதுதானே பாத்தன். எங்கடை சனம் என்னத்தைத்தான் பிரயோசனமாய்செய்யுதுகள்.நிவாரணம் கொடுக்கிற ஆட்களும் அப்படி. வேண்டுகிற ஆட்களும் அபபடித்தான்''.

''நீ என்னடாப்பா சொல்லுகிறாய்''

விக்கி படு கோபமாகச் சொன்னான் ''பசியோடை இருக்கிறவனுக்கு சும்மா சாப்பாடு குடுக்கிறதை விட அவன்ரை சாப்பாட்டிற்கு ஒரு வழி செய்யிறது தான் பிரயோசனமான அலுவல், நிவாரணத்துக்கு குடுக்கிற காசை சனம்

## அயக்கிரீவன்

என்ன செய்யுது. குடிக்கிறவன் குடிக்கிறான். ஊதாரித்தனமாக செலவழிக்கிறவன் செலவழிக்கிறான். இதால கண்டதென்ன? எல்லாக் காசும் பிரயோசனமாய் செலவழித்தால் எப்படியிருக்கும்?

★ ★ ★

''அன்டைக்கு ஒரு புத்தகத்து அட்டையைப்பார்த்து ஓவியம் நல்லாய் இருக்கு எண்டு சொன்னியே மச்சான். ஞாபகம் இருக்கே''

''ஓம்-''என்றான் சவுந்திரம்.

''அதைக் கீறின எங்கடை ஓவியர் வி. கே. என்ற வி. சனகலிங்கம் சுகமில்லாமல் மகரகம ஆஸ்பத்திரியில இருக்கிறாராம். நினைச்சால் கவலையாய் இருக்கு. கெதியில சுகமாகி வந்து பழையபடி கீற வேணும்''

★ ★ ★

''பொழுது படுகுது மச்சான். வீட்டை போவமோ எனக்கேட்டான் தாடிமாமா.

''ஏண்டாப்பா அவசரப்படுகிறாய்- இப்ப என்ன பயம். ஆறுதலாய் போவம்-''

''அமைதிப்படை இருக்கேக்க பொழுது பட்டால் வீட்டைவிட்டு வெளிக்கிடவே பயமெனக்கு. அந்த ஞாபகம் வந்திட்டுது.''

''எங்கடை வீட்டுப்பக்கத்தில ஒரு காம்ப் இருந்தது தானே. இரவில சலம் கழிக்கக் கூட வெளியில வரேலாது. நான் டகிடிக்கு சொல்லேல்ல இரவில வீட்டுக்க தகரப்பேணி எடுத்து வைச்சுத்தான் அந்தக் காரியங்களைச் செய்யிறது. இப்பதான் நிம்மதியாய் இருக்கு''

''நீ சொல்லுறது சரிதான் மச்சான். இப்ப கொஞ்சம் நிம்மதியாத் தான் இருக்கிறம். ஆனால் எங்களுக்கு முழுச்சுதந்திரம் கிடைக்குதோ அண்டைக்கு பூரண நிம்மதியும் முழுமையான விடுதலையும்'' என்றான் விக்கி வெகு நிதானமாக.

புலிக்கொடி இப்போது வடக்கு கிழக்கு மாகாணம் எங்கும் பறக்கிறது. புலிச்சின்னம் தமிழர்களின் தேசிய செல்வமாகி விட்டது. இராஜராஜசோழனின் சாம்ராஜ்யத்தில் பட்டொளி வீசிப் பறந்த புலிக்கொடி உலகின் பல நாடுகளிலும் பறந்து தமிழர்களின் புகழ் கொடியை ஒன்பதாம் நூற்றாண்டில் நிலை நிறுத்தியது. இன்று தமி



ழர் பெருமைகளையெல்லாம் விடுதலைப் புலிகள் உலகெங்கும் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். தமிழர் வரலாற்றோடு பின்னிப் பிணைந்த புலிக்கொடி இன்று தமிழர் வரலாற்றுப் பெருமைகளைப் பேசுகின்ற சின்னமாகிவிட்டது.

### இங்கிலாந்து தந்த கௌரவம்

கடந்த வருடம் இங்கிலாந்து நாட்டு மக்கள் மத்தியில் நடைபெற்ற ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின் போது உலகின் மிகச் சிறந்த கெரில்லாத் தலைவன் யார் என்ற கேள்விக்கு முதலாம் இடம் தலைவர் பிரபாவுக்கும் இரண்டாம் இடம் நெல்சன் மண்டேலாவுக்கும் மூன்றாம் இடம் யாசீர் அரபாத்துக்கும் கிடைத்தன. இவ்வாறாக இன்று உலகின் முன்னணி வீரர்களாக எங்கள் விடுதலைப் புலிகள் விளங்குகிறார்கள்.

தென்னிந்தியத் தமிழ் மக்களுக்கு முன்னர் வடநாட்டில் மதிப்புக் கிடையாது. இலங்கைத் தமிழர்களை சிங்களத் தலைவர்கள் கள்ளத் தோணிகள் என்று இகழ்ந்தது போல தென்னிந்தியத் தமிழர்களை வட இந்தியர்கள் 'மதராசி வாலா' என்றே இகழ்ந்தனர். ஆனால் விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த போராட்டம் தென்னிந்தியத் தமிழர்களுக்கு வட இந்தியாவில் கௌரவத்தையும் புகழையும் தேடித் தந்துள்ளது என அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த தமிழ்நாடு தோழமைக் சழகத் தலைவர் திரு. இராமகிருஷ்ணன் ஈழநாதம் பத்திரிகையாளர்களுடன் பேசும்போது குறிப்பிட்டார்.

தமிழர் வீரம் பற்
தமிழ்நாட்டில் உத
மான சங்ககால இல
கியங்களான புறநானூ
றும், கலிங்கத்துப்பரண
யும் எடுத்துக் கூறுகி
றன. நாம் கற்கிறோம்
ஆனால் கண்டதில்லை
புலிக்கொடி ஏந்தி
ராஜராஜ சோழனி
பெருமைகள் தென்கிழ
காசிய நாடுகள் வ
தான் பரவியது. ஆனா
இன்று விடுதலைப் பு
கள் தமிழர் பெரும
களை உலகம் பூராவு
பரப்பி நிற்பதை நித
சனமாகக் காண்கிறோம்
விடுதலைப் புலிகளி
வீரம் செறிந்த போரா
டம் எப்படி படிப்ப
யாக பரிணாம வளர்ச்
பெற்றது என்பதையு
அதை முறியடிக்க உ
கின் எந்தெந்த நாடுக
எல்லாம் எப்படியெ
லாம் முயற்சி செய்த
என்பதும் அவற்றை எ
படி விடுதலைப் புலிக
முறியடித்தனர் எ
பதும் வரலாற்று
சிறப்புமிக்க விடய
களாகும்.
ஆரம்பத்தில் வி
தலைப் புலிகளோ
ஸ்ரீலங்காவின் பொலி
இராணுவம், கட
படை, விமானப்படை
விசேட அதிரடிப்படை
ஊர்காவல் படை, கறு
புச் சட்டைக்காரர் எ
றெல்லாம் பல கூலி
படைகள் மோதிப் பா
த்து படுதோல்வியை



மண்டேலா

தழுவிக் கொண்டதோ
பெரும் இழப்புக்களை
யும் சந்தித்து வந்தன
தனது சொந்தப்பை
களைக் கொண்டு ஈழ
போராட்டத்தை மு
யடிக்க முடியாத தர்மி
டர் ஜெயவர்த்தன
சர்வதேச பயங்கரவா
களை வரவழைத்தா
ஆரம்பத்தில் (1984 இ
இஸ்ரேலிய மொசா
படைகள் மட்நாய் எ




பவனன் தலைமையி
கொழும்பிலுள்ள அ
ரிக்க தூதரகத்தில் இ
ரேலிய நலன்காக்கு
பிரிவு ஒன்றைத் திறந்
ஸ்ரீலங்காப் படைகளுக்
ஆலோசனை வழங்கி
அமெரிக்க சி.ஐ.ஏ. நி
வனத்தைச் சேர்ந்
செஸ்பர் வெயின் பே
இலங்கைக்கு வந்
தமிழ்ப் போராளிகளுக்
எதிராக எப்படிச் செய
பட வேண்டும் எ

க் கொடி இப்
வடக்கு கிழக்கு
ம் எங்கும் பறக்
புலிச்சின்னம்
ளின் தேசிய
ாகிவிட்டது.
ாஜசோழனின்
யத்தில் பட்
வீசிப் பறந்த
ாடி உலகின் பல
லும் பறந்து
களின் புகழ்
ய ஒன்பதாம்
ன டில் நிலை
து. இன்று தமி



தமைகளையெல்
விடுதலைப் புலி
கங்கும் பரப்
ாண்டிருக்கிறார்
மிழர் வரலாற்
பின்னிப் பிணை
க்கொடி இன்று
வரலாற்றுப்
களைப் பேசு
சின்னமாகிவிட்

**ந்து**
**களரவம்**

வருடம் இங்
நாட்டு மக்கள்
நடைபெற்ற
ருத்துக் கணிப்பு
டிப்பின் போது
மிகச் சிறந்த
த் தலைவன்
ற கேள்விக்கு
இடம் தலை
ாவுக்கும் இரண்
டம் நெல்சன்
ாவுக்கும் மூன்
டம் யாசீர் அர
தும் கிடைத்
வாறாக இறு
னணி வீரர்
எங்கள் விடு
லிகள் விளங்கு
ர்.
ந்தியத் தமிழ்
த முன்னர் வட
திப்புக் கிடை
இலங்கைத் தமி
சிங்களத் தலை
ள்ளத் தோணி
று இகழ்ந்தது
தென்னிந்தியத்
ளை வட இந்தி
மதறாசி வாலா'
இகழ்ந்தனர்.
விடுதலைப் புலி

ீரம் செறிந்த
ம் தென்னிந்
ழர்களுக்கு வட
ில் கெளரவத்
புகழையும்
ந்துள்ளது என
யில் இலங்
ிஜயம் செய்த
தோழமைக்
லைவர் திரு.
ஷ்ணன் ஈழ
த்திரிகையாளர்
பேசும்போது
ார்.

# போராட்டத்தின் நிழலில்

## அருணின் பிரசாத்

தமிழர் வீரம் பற்றி தமிழ்நாட்டில் உதயமான சங்ககால இலக்கியங்களான புறநானூறும், கலிங்கத்துப்பரணியும் எடுத்துக் கூறுகின்றன. நாம் கற்கிறோம். ஆனால் கண்டதில்லை. புலிக்கொடி ஏந்திய ராஜராஜ சோழனின் பெருமைகள் தென்கிழக்காசிய நாடுகள் வரைதான் பரவியது. ஆனால் இன்று விடுதலைப் புலிகள் தமிழர் பெருமைகளை உலகம் பூராவும் பரப்பி நிற்பதை நிதர்சனமாகக் காண்கிறோம்.

விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த போராட்டம் எப்படி படிப்படியாக பரிணாம வளர்ச்சி பெற்றது என்பதையும் அதை முறியடிக்க உலகின் எந்தெந்த நாடுகள் எல்லாம் எப்படியெல்லாம் முயற்சி செய்தன என்பதும் அவற்றை எப்படி விடுதலைப் புலிகள் முறியடித்தனர் என்பதும் வரலாற்றுச் சிறப்புமிக்க விடயங்களாகும்.

ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளோடு ஸ்ரீலங்காவின் பொலிஸ், இராணுவம், கடற்படை, விமானப்படை, விசேட அதிரடிப்படை, ஊர்காவல் படை, கறுப்புச் சட்டைக்காரார் என்றெல்லாம் பல கூலிப் படைகள் மோதிப் பார்த்து படுதோல்வியைத்



மண்டேலா

தழுவிக் கொண்டதோடு பெரும் இழப்புக்களையும் சந்தித்து வந்தனர். தனது சொந்தப்படைகளைக் கொண்டு ஈழப் போராட்டத்தை முறியடிக்க முடியாத தர்மிஷ்டர் ஜெயவர்த்தனா சர்வதேச பயங்கரவாதிகளை வரவழைத்தார்.

அரம்பத்தில் (1984இல்) இஸ்ரேலிய மொசாட் படைகள் மட்நாய் என் பவனான் தலைமையில் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு ஒன்றைத் திறந்து ஸ்ரீலங்காப் படைகளுக்கு ஆலோசனை வழங்கின. அமெரிக்க சி.ஐ.ஏ. நிறுவனத்தைச் சேர்ந்த செஸ்பர் வெயின் பேகர் இலங்கைக்கு வந்து தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக எப்படிச் செயற்பட வேண்டும் என ஆலோசனை வழங்கினார். பிரித்தானிய கே. எம். எஸ். நிறுவனத்தின் கீனி மினி படைகள் இலங்கைப் படை



களுக்கு இலங்கையில் பயிற்சியும் ஆலோசனையும் வழங்கின. பிரித்தானிய எஸ். ஏ. எஸ் படைப் பிரிவினர் இலங்கைப் பாதுகாப்புப்படையின் உயர் அதிகாரிகளை பிரிட்டனுக்கு அழைத்துப் பயிற்சி கொடுத்தனர். பிரித்தானியஹெலிகப்டர் விமானங்களை அதாவது பெல் - 212 கர விமானங்களைப் பிரிட்டன் கொடுத்துதவியது. தென்னாபிரிக்காவுக்குச் சென்ற என். யு. ஜெயவர்த்தனா இலங்கைப் போராளிகளுக்கு எதிராக பயன்படுத்த ஆயுதங்களைக் கொள்வனவு செய்தார். தென்னாபிரிக்க விமானங்கள் இந்தியாவில் தரித்து நின்று இலங்கைக்குள் ஆயுதங்களைக் கொண்டு வந்தன. 1985 இல் தென் கொரியாவுக்குச் சென்ற முன்னாள் தேசிய பந்தோடஸ்து அமைச்சர் லலித்அத்துலத்முதலிக்கு தென்கொரியா ஆயுதங்களை வழங்கியது. சீனாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட அதி விசைப் படகுகள் கடலில் எங்கள் போராளிகளோடு மோதலில் ஈடுபட்டன.

இத்தாலிய சியாமார்செட்டி குண்டுவீச்சு விமானங்கள் தமிழ்ப் போராளிகள் மீதும், பொது மக்கள் மீதும் குண்டுகளை அள்ளி வீசின.

பாகிஸ்தானில் பயிற்சியளிக்கப்பட்ட கிறிமினல் குற்றவாளிகள் கறுப்புச் சட்டைக்காரர் என்ற பெயரில் ஒரு படையாக்கப்பட்டனர். அமெரிக்க ஆயுதங்கள் பாகிஸ்தான் ஊடாக இலங்கைக்குள் தாரை வார்க்கப்பட்டன. தென்னாபிரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட பவ்வலோ ஆமாட்கார் சள் மன்னாரில் வைத்து லெப். கேணல் ராதா தலைமையில் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டன. இவற்றை எப்படியுமே தகர்க்க முடியாது என்ற உறுதிப்பாட்டின் பேரில் இலங்கை வாங்கியது.

இவ்வாறு சர்வதேசப் பயங்கரவாதிகள் எல்லோரையும் இலங்கைக்குள் கொண்டு வந்தவர் மிஸ்டர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா இறுதியில் இந்தியப் படைகளை வரவழைத்தார். இந்தி



யப் படைகளின் சகல படைப் பிரிவுகளும் விடுதலைப் புலிகளுடன் மோதிப் பார்த்தனர் யுத்தத்திற்கென பயிற்றுவிக்கப்பட்ட கூர்க்காப் படை வீரர்கள் நூறு பேருக்கு மேல் முல்லைத்தீவில். இடம் பெற்ற தாக்குதலில் மடிந்து போயினர். நித்திகைக்குளம் தாக்குதலில் நூறு மீட்டர் தூரத்தை தாண்டமுன் இரு நூறு பேருக்குமேல் பொறிவெடியில் சிக்கி ஒற்றைக் காலைஇழந்தனர். கூர்க்காப் படைகளுக்கு தலைமை தாங்கிய கேணல்பஸ்கிதன்வீரமும் களத்தே போட்டு தனது சீருடையில் குத்தியிருந்த உயர் விருதுகளையும் கிழித்து எறிந்துவிட்டு அகாலமரணத்தை தழுவிக் கொண்டது நாயாற்றில் நடந்த மோதலிலாகும். இவன் இறந்த பின்னர் தேகாந்த நிலையில் வைத்து ''வீரசக்கர'' விருது வழங்கிக் கெளரவிக்கப்பட்டார்.

சீக்கியப்படைகளும்மராட்டிய வீரர்களும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முன்ணனியில் நின்றனர். ஆனால் அவர்களும் எமது சுதந்திரப் போராட்ட வீரர்களோடு மோதி பல களங்களில் பின்வாங்கி ஓட்டம் பிடித்தனர். இது மட்டுமல்ல ராஜீவ்காந்தி போபேர்ஸ் ஊழலில் சுவீடனிடமிருந்துபெற்றுக் கொண்ட ஆயுதங்களையும்விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் பயன்படுத்தினார் என ''இலஸ்ட்டேட்டட் வீக்லி ஒவ் இந்தியா'' செய்தி வெளியிட்டது.

கூட்டுமொத்தமாகப் பார்க்கும் போது இலங்கை இந்தியா மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலுமுள்ள முதலாளித்துவ நாடுகளும் அரைவேக்காட்டு கம்யூனிசவாதிகளும் விடுதலைப் புலிகளுடன் மோதி மூக்குடைபட்டனர். எங்கள் மண்ணின் விடுதலைக்கான போராட்டம் பல பரிமாணங்களைப் பெற்று முன்னேறிக் கொண்டு இருக்கிறது.

## யாத்திரை

-சௌந்திரன்-

யுத்த மேகங்கள்
சூழ்ந்த வேளைதனில்
சமாதானத் தூதுவர்கள்
இரத்தத்தால் நனைந்த போது
இலட்சக்கணக்கான
கண்ணீர்த் துளிகளால்
உனது மேனி
கழுவப்பட்டது—

நீ
சரித்திர மலையொன்றை அசைத்து
பல விந்தைகள் புரிந்தாய்
மீண்டும் காலத்தின் தேவைகள்
உன் மீது பதிக்கப்பட்டன—

சுதந்திரமான இருப்புக்காக
வீரத்தின் விளை நிலத்தில்
இளமையின் சுவடுகள்
இரத்தக் கறைகளாகப் பதிந்துள்ளன—

சுமக்க முடியாத சுமைகள் தான்
கனத்த இதையத்தோடு சுமந்து
நீதியின் பாதையில்
நெடும் பயணம் நடந்து

## மனிதர்கள்

ஆக்கம் -மைதிலி அருளையா

எப்போது பார்த்தாலும் புன்னகை
உள்ளினூடே சற்று உற்றுப்பார்த்தால்
கொடிய குதறலிற்கான ஆயத்தம்
உதட்டிற்கும் உள்ளத்திற்கும்
இடையே பெரும் இடைவெளி
ஒரு பாலைவனத்தொலைவு
நீர் வரண்ட வெட்டை வெளி
புளுதித்திரளல்; உருளல்
புழுக்கம் மிகுதல்....
அழுக்குப்படிந்த கற்களின் மேல்
மஞ்சளைத் தேய்த்து கன்னத்தில்
அப்பிக் கொண்டு
அழகு பார்க்கிறவளைப் போல-
வார்த்தை விஷயங்கள்...
தேன் தடவலினூடுதான்
உமிழப்படுகிறது
இறுக அணைக்கிற வேகத்திலேயே
நசிந்து விட முயலுகிற லாகவம்
முத்தமிடுகிற சாக்கிலேயே...
மூக்கைக் கடிக்கிற முயற்சிகள்
என்ன இது...
எல்லாமே
பொன் முலாம் பூசப்பட்ட
பித்தளைச் செப்புகள்
மனிதர்கள்...
மலிந்த சந்தைக் கடை [ச்]
சாக்கு மூட்டையுள்ளிருந்து
சவசலத்துக் கொண்டிருக்கும்
சரளைக் கற்கள்




தமிழே எனக்கு மொழியாக, தமிழே எனக்கு விழியாக
தமிழே எனக்கு மூச்சாக, தமிழே எனக்குப் பேச்சாக
தமிழே எனக்குத் தொழிலாக தமிழே எனக்கு வழியாக
தமிழே எனக்குத் துணையாக, தமிழே எனக்கு மனையாக
தமிழே எனக்கு எல்லாமாய் தந்த தலைவா நீ வாழி -

தமிழே செய்து நான் வாழ்ந்து, தமிழுக்காக நான்வாழ்ந்து
தமிழே வாழத் தமிழ் மாந்தர் தரணி எங்கும் புகழ் ஓங்க
தமிழால உனையும் தமிழரையும் திருநாளெல்லாம் நான்பாடி
தமிழ் ம்ண்மீதே நான் வாழ தமிழ்ப்பண்பாடி நான் வாழ
தமிழால் உன்னைப் பாடுகிறேன் தலைவா தருவாய் வரமெனக்கு

★ ★ ★

மூப்பான தமிழனுக்குப் பிள்ளையானேன்
முத்தமிழில் சரம் தொடுக்கும் கவிஞனானேன்
பூப்பாணம் எய்து கவி பாடிப் பாடி.
புலர்ந்து வந்த பொழுதெல்லாம் வீணேயாச்சு
தீப்பாணம் எய்கின்ற காலமாச்சு
திடமானேன் திண்டமிழின் சொல்லின் வில்லால்
பாப்பாணம் எய்திடவே பாணன் ஆனேன்
பாரதத்தில் ஏறி இங்கு பவனி வாரேன்.

காலத்தால் இறவாத காவியங்கள்
கவிமக்கள் இந்நாளில் பாடவேண்டும்
காலங்கள் தாண்டிய பின் காதிற் பட்ட
கற்பனையில் வரலாறு பாடிவைத்தால்
ஞாலத்துக் குதவாது நன்மையில்லை.
நமதுபரம் பரைக்குமது தவையில்லை
ஓலத்தை மட்டும் பின் எழுப்பு கின்ற
ஒப்பாரி யால் எமக்கு என்ன நன்மை?

உண்மைகளை உடனடியாய்ப் பாடிவைப்போம்
உதாரணங்கள் சில பலது கூறிவைப்போம்
அண்மையிலே நடந்திட்ட அக்கிரமம்
அத்தனையும் ஆனவரை தீட்டி வைப்போம்
திண்மையுடை எம் தமிழர் தீமையுற்று
திசை எட்டும் சிதறுண்டு ஓடிப்போனார்
பண்சமைப்பேன் எஞ்சியவர் இங்குபட்ட
**பாரதத்தின் சுவடு**களாய்ப் பாடிவைப்பேன்

பண்பாட்டின் சிகரமெது என்று கேட்டால்
"பாரதமே எனச் சொல்வேன்" என்று சொன்னான்
பண்பட்ட மேதை மாக்ஸ் முல்லர் என்பான்
பாவம் அவன் இன்றில்லை மாண்டு விட்டான்
மண்விட்டுப் போன அவன் மீண்டும் வந்தால்
மனத் துயரம் தாங்காது "மதிகெட்டேனே!
புண்பட்டுப் போச்சு யான் புகன்றதென்று
புதுக்கருத்துச் சொல்லிடுவான் புரிந்து கொள்வீர்

பொருள்தேடி வந்திட்ட வெள்ளைத் தோலர்
பொங்கு கடல்வழிவந்து நமது பூமி
அருள்கின்ற வளம் கண்டார். ஆசையுற்றார்.
ஆண்டவரை, வாழ்ந்தவரை அடிமை செய்தார்
மருள்கின்ற மனம் கொள்ள இந்த மண்ணார்
மாணிக்கம் வாசனைகள் அள்ளிச் சென்றார்
இருள் சூழ்ந்த மதியினராய் என்முன்னோர்கள்
இருந்தவைகள் யாவையுமே இழந்து விட்டார்

ஒரு நாடு இரு இனங்கள் ஆண்டமண்ணை
ஒன்றாக்கி எல்லைகளை நீக்கி விட்டு
திருவோடு ஏந்து நிலைக் கெம்மை ஆக்கி
திரும்பியவர் போகையிலே செய்ததென்ன?
வருகையிலே சுதந்திரமாய் இருந்த பூமி
வடக்கினையும் கிழக்கினையும தெற்கினோர்க்கு
தருகையுடன் தம் கருமம் முடித்துப் போனார்
தமிழ் மண்ணைச் சிங்களர்க்குத் தாரைவார்த்தார்

மேற்பட்டு அந்நாளில் வாழ்ந்த எங்கள்
மேல் வர்க்கத் தமிழ்த் தலைவர் புத்திகெட்டு
ஏற்பட்ட பெருந் தீங்கை உணர்ந்தாரில்லை
என்றைக்கும் ஒன்றாக வாழ்வோமென்று
நாற்பத்து எட்டினிவே மாசி நான்கில்
'நமக்குமது சுதந்திரம் தான், என்று எண்ணி
கீழ்பட்டு நாமடைந்த கேடுதன்னை
கிஞ்சித்தும் எண்ணாது தவறிழைத்தார்.

(தொடரும்)

# தொழுநோய்

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மக்களை பீதியடைய செய்யும் கொடிய நோய்களான எயிட்ஸ் (Aids) போதைப் பொருள்பாவனை, கெப்பனரற்றஸ் B(Hepatitis B) போன்ற நோய்களின் வரிசையில் தொழுநோயும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

தொழு நோய் குஷ்டரோகம் எனவும், ஆங்கிலத்தில் லெப்பரசி (Leprosy) எனவும் அழைக்கப்படுகிறது. தொழுநோயானது அதிகமாக தென்கிழக்காசியா, தென்னமெரிக்கா, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளில் காணப்படுகின்றன. இலங்கையில் தற்போது பதிவு செய்யப்பட்ட தொழுநோயாளர்களின் எண்ணிக்கை கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நோய்கள் இருக்கக் கூடியவை.

இந்நோயின் தொற்றும் காலம் 2-7 வருடங்கள் அல்லது 3-5 வருடங்கள் என்றும் அருமையாக 6-20 வருடங்கள் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக தொழுநோயின் கிருமிகள தோலின் கீழ்ப்பகுதி, சுற்றயல் நரம்புத் தொகுதி மூக்கின் உட்பகுதி, ஈரல், நிணநீர் முடிச்சு, மண்ணீரல், கண், தசைநார்கள், குருதிக்குழாய்கள் ஆண்களில் விதை போன்றவற்றில் காணப்படுகின்றன. இந்நோயினால் எமதுடலின் நரம்புத் தொகுதியே முக்கியமாக பாதிக்கப்படுகின்றது.

இந்நோயின் முக்கிய அறிகுறிகளாக உணர்ச்சியற்ற நிலையில் காணப்படும் தோல், நரம்புத் தொகுதியில் ஏற்படும் நோ, வீக்கம், தோலில்




தொழுநோய் என்றவுடன் கைவிரல்கள் கால் விரல்கள் இல்லாத அல்லது அழுகிய நிலையுடன், மூக்கு எலும்புகள் அழுகி மூக்கே இல்லாத நிலையில் அல்லது உடல் உறுப்புகள் அழுகிய நிலையில் காணப்படும் ஓர் அருவருப்பூட்டும் நோயாளியே எமது மனக்கண்முன் தோற்றமளிக்கின்றார். ஆனால் தொழுநோயால் பீடிக்கப்படும் யாவரும் மேற்கூறிய நிலையை அடைய

**ந. ஜெயராசா**

வேண்டும் என்பது கட்டாயம் இல்லை. மேற்கூறப்பட்ட நிலைகள் தொழுநோயின் ஒருவகையின் இறுதிக் கட்டமே. தகுந்த சிகிச்சையை ஆரம்பத்திலேயே நாம் பெற்றுக் கொள்ளவதன் மூலம் இவ் விறுதிக்கட்ட நிலையை நாம் தடுக்க முடியும்.

தொழுநோயானது, Mico Bacterium Leprae என்னும் Hanscn's Bacillus சினால் தொற்றுகிறது. இப் பற்றீரியங்கள் எமதுடலில் தோல் உணவுக்கால்வாய், சுவாசப்பாதை வழியாகவும் தோலில் காணப்படும் சிராய்ப்புப்புண்கள் வழியாகவும் சிகிச்சை பெறாத நோயாளியின் புண்ணின் வாயிலாகவும் நோய் தொற்றுகிறது. நோயாளியிலிருந்து வெளியேறும் கிருமிகள் சாதாரண சூழலில் 7 நாட்களும், இருளில் 30 நாட்களும் உயிருடன்

கடியில்லாத மினுமினுப்பான மென்மையான காய்கள் (NODULES) போன்ற அமைப்புகள் காணப்படுவதாகும். இவை ஆரம்பநிலை அறிகுறிகளாகும். தீவிர நிலயில் கண் இமைகளில் மயிர்காணப்படாமை, காதுகளில் தடித்த பருக்கள், மூக்குப்பகுதி விகாரமடைந்து இரத்தம் வடிதல் படிப்படியாக உடைந்து விடல், மயிர்கள் காணப்படாமை, உடம்பு மினுமினுப்புடன் வீங்கி காணப்படல், முகம் விகாரமடைந்து சிங்கம் போல தோன்றுதல் போன்ற அறிகுறிகள் காணப்படும்.

மேலும் இந்நோயினைத் தொற்றும் தன்மையுள்ளது, தொற்றாத்தன்மையுள்ளது என இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. தொற்றும் தன்மையுள்ளது. (Leqroma-tus) லெப்டரே மற்றஸ் என்றும் தொற்றாத் தன்மையுள்ளது Tubecu-loid அல்லது, Neuro Leprae என்று அழைக்கப்படுகிறது.

தொற்றும் தன்மையுள்ளதில் சலனில் தாக்கும் சக்தி Celiular Imm unity காணப்பட்டது. Rashcs ஐ பொறுத்தவரை செந்நிறம் உடையனவாயும், அழுத்தமாக மினுமினுப்பாக தட்டையாக அல்லது சற்று உயர்ந்து காணப்படும். இவ் அடையாளங்கள் மிகச்சிறியனவாயும், எண்ணிக்கையில் கூடியும் உடல் பூராவும் வரையறுக்கப்படாதனவாகவும் காணப்படும்.

( 11ஆம் பக்கம் பார்க்க)

# பின்னணி

## சி. கதிர்காமநாதன்

நீங்கள் தமிழ்நாடு போயிருக்கின்றீர்களா? இது மடத்தனமான கேள்வி. எப்படி எல்லாரும் போயிருக்க முடியும்? ஒரு சிலர் தான் போயிருக்க முடியும். அப்படிப் போயிருந்தவர்களுக்கு நான் சொல்லும் விடயம் பழமையாக இருக்கலாம். ''அவன் சொல்வது உண்மைதான்'' எனச்சொல்லலாம் அங்கு போகாதவர்களுக்கு இது ஆச்சரியமாக இருக்கும். எனவே நான் சொல்வதைக் கேளுங்கள்.

நான் இங்குவந்து ஆறு மாதத்திற்கு மேலாகிறது. இந்தப் பிளாட்டில் பலர் நண்பர்களாகி விட்டனர். ஆரம்பத்தில் நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன். வந்த புதிதில் தனியாக இருந்த போது மனம் விட்டுக் கதைப்பதற்கு ஒருவரும் கிடைக்கவில்லை. நான் சிலோன்காரன் எனத் தெரிந்தவுடன் சிலர் முகம் மாறியது. சிலர் சாடையான புன்முறுவலுடன் போய் வந்தார்கள்.

சின்னக் குழந்தைகள் ஏதோ என்னை அதிசயமாகப் பார்த்தார்கள். இரவில் கீழே எல்லோரும் கதைத்துக் கொண்டு இருக்கும் போது என்னைக் கண்டால் பேச்சு நின்றுவிடும். எல்லோரும் என்னைப் பார்ப்பார்கள். பிறகு அவர்கள் மௌனமாகித் தங்களுக்குள் கதைக்கும் போது 'சிலோன்' என கதைப்பது காதில் விழும்.

எனக்குப் பெரிய சங்கடமாக இருக்கும் முகத்தில் அப்பிக் கிடந்த தாடியை சொறிந்தபடி யோசித்த படி இருப்பேன்.

அதன் பின்னர் நாள் போகப் போக ''A'' ஒன்றில் இருக்கும் சிறிராமின் அறிமுகம் கிடைத்தது. சிரிப்பில் தொடங்கி பின் பேச்சில் வளர்ந்து பிறகு அவர் எனக்கு வழிகாட்டியாக மாறினார். பின் உயர் படிப்புக்காக டெல்லி போக வேண்டி இருந்தமையினால் சில போக்குவரத்துக் குறிப்புக்களை படம் வரைந்து தந்தார். அப்படி அவர் தந்தது எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தது. அவர் டெல்லி போன பின் கடிதம் போடத் தொடங்கினார். இந்த வேளையில் ''B'' இரண்டில் இருந்து சேட்டு இனத்தைச் சேர்ந்த சுரேசின் நட்புக் கிடைத்தது.

''என்ன சார் படிக்கிறீர்களா? அல்லது ஏதாவது பிசினஸ்'' அவர் இழுக்க நான் சிரித்தேன்.

''இல்ல ... பிசினஸ் தான்''

இந்த உரையாடலில் தொடங்கி ''சார் ஏதாகிலும் சிலோனில்இருந்து கொண்ணாந்தீங்கன்னா தாங்க, நாங்கவித்திடுவம் நமக்கு கமிஷன் வரும்'' என அவர் தன்னுடைய விடயத்தைச் சொன்னார். சுரேசில் தொடங்கிய நட்பு அப்படியே அவர் அண்ணன் (லலித்) தம்பி (பிரகாஷ்) தங்கை (சங்கீதா) அப்பா அம்மா என வளர்ந்தது.

வீடுபோய் சப்பாத்தி சாப்பிட்டு, லலித்தின் மகனின் பிறந்த நாள் விழாவுக்குப் பகல் சோடனை வேலை செய்து இரவு கொண்டாடிப் படம் எடுத்து, பாட்டுப் போட்டு ஆட்டம் ஆடி .....

இவையெல்லாம் சந்தோஷமானவிடயங்கள். இந்த வேளையில் தான் ''B'' நாலில் இருக்கும் சிதம்பரம் அண்ணாமலை கம்பசிலிருந்து விடுமுறையில்இருப்பிடம் வந்தார். ஏற்கனவே சேட்டுப் பையன்களின் நண்பனான அவர் எனக்கும் நண்பனாக முடிந்தது.

விடுமுறையில் அவர் வந்தமையினால் நீண்ட நாட்கள் இங்கு இருக்க முடிந்தது. இதனால் இரவில் 'கரம் போர்ட்' விளையாட முடிந்தது. இந்த விளையாட்டில் இன்னும் சிலரின் அறிமுகம் கிடைத்தது.

''C'' மூன்றில் இந்தியன் வங்கியில் வேலை செய்யும்வெங்கட்ராமன், ''C'' ஐந்தில் பார்த்தசாரதி இவர் சவர்கார கொம்பனியில் வேலை செய்கிறார். தாம்பரத்தில் தனியார் கொம்பனியில் வேலை செய்யும் கணபதி, அவர் தம்பி கணேஷ்- இப்படிப் பலர்.

இதனோடு சிதம்பரத்தின குடும்பத்தினரோடும் அதிகமாக உறவாட முடிந்தது. எல்லாம் ஏதோ வகையில் சந்தோஷமாகத்தான் போய்க் கொண்டு இருந்தது. இப்படியே நான் நண்பர்களோடு கதைத்து, சிரித்து, படம் பார்த்து, சிவாவிஷ்ணு கோவிலுக்குப் போய்க் கும்பிட்டு, பாண்டி பசாரில் கையேந்தி பவனில் சுடச்சுட சுண்டல், வடை, டரோடா சாப்பிட்டு, சைக்கிளில் இரவில் மவுண்ரோடுபோய் சுத்தி அடித்துத் திரிந்து

சந்தோஷமாக பொழுது போய்க் கொண்டு இருக்கும் என நீங்கள் என்னைப் பார்ப்பது எனக்குப் புரிகின்றது. அப்படித்தான் நீங்கள் நினைப்பீர்கள.

ஆனால்,

இந்த நண்பர்கள், சிரிப்பு, கும்மாளம், கதைப்பு, ஆட்டம், பாட்டம் எல்லாம் எவ்வளவு தூரம் உண்மையானதென உங்களுக்குப் புரியாது. என்ன தான் கூத்து ஆடினாலும் அவர்கள் மனங்களில் ஏதோ ஒரு உறுத்தல் இருந்து கொண்டு தான் இருந்தது. அதனை நான் பல விடயங்களில் அறிய முடிந்தது.

நான் அதனை மறந்து நடந்தாலும் அவர்கள விடமாட்டார்கள். சதா ஒருவராவது கேள்வி கேட்காமல் விட மாட்டார்கள். அவ்வாறுகேட்காவிடில் அவர்களது தலை வெடித்துவிடும் போல நிலை. அவர்கள் கேட்கும் கேள்விகள் எல்லாவற்றுக்கும் என்னால் பதில் சொல்லக் கூடியதாக இருக்கின்றதா?

''ஆமா நீ ஒத்த ஆள் தானே இருக்கிறாய்?'' ..



''சாப்பாடு சமையலா அல்லது ஹோட்டலா? ...

''செலவுக்கு என்ன மாதிரி பணம்?''

''இப்டவும் சிலோனில சண்டையா?''

''ஆமா உனக்கு தமிழ் சரியே வராதா? சிங்களமா?''

''உனக்கு சுடத் தெரியுமா?''

இந்தக் கேள்விகளை மறுபடி ஒரு கிழமை கழித்துக் கேட்பார்கள் சில நேரங்களில் இது வேறு விதமாத மாறும்.

''உங்க வீட்டில இரண்டு பெட்ருமா?''

''ஆமா அங்க வச்சிருக்க கசெற் செற் சிலோனில வேண்டியதா?''

''அந்த டைனிங் டேபிள செயார்ஸ் எல்லாம் ...

''எத்தனை செயார்ஸ் ....

''இல்ல தப்பு ஆறு செயார்ஸ் போய் பார''

எனக்கு ஆச்சரியமாக இருக்கும் எனக்கே சரியாக எத்தனை கதிரைகள் என்பது தெரியாது.

இப்படிக் கேள்விகள் கேட்பது புரியவில்லை.

ஒரு முறை சுரேஷின் அண்ணன் கூறினார்.

''கதிர் உங்க வீட்டை எனக்குக் காட்டவேயில்லை. ஒரு நாள் வந்து பாக்கணும்.''

எனக்கு ஒருமாதிரியாக இருந்தது. எல்லா ஃப்ளோரும் கொஞ்சம் வித்தியாசப் படலாம் அறைகள் கூடிக்குறையலாம். என இடத்திலை என்ன புதிதாக இருக்கப் போகிறது? இவர்கள் மனதில் என்ன நினைத்திருக்கிறார்கள்?

குழப்பமாகவும் எரிச்சலாகவும் இருந்தது திருப்பி, திருப்பி கேள்விகள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

சில நாட்கள் கழித்துத் திடீரென லலித் உள்ளே வந்தார். ஒவ்வொரு இடத்தையும் நோட்டம் பார்த்தார்.

''எவர்சில்வர் பாத்திரங்களும் காஸ்சும் வைத்திருக்கிறீர் என்ன சமையலா?''

என்ன தமிழ் பேப்பர் எல்லாம் வைத்திருக்கிறீர் படிப்பீரா?''

''எங்க வீட்டை விட இது ரொம்ப நல்லாயிருக்கு நீர் காலி பண்ணும் போது சொல்லும் நாங்க எடுக்கணும்.

கடைசியாக பூட்டியிருந்த அறையைப் பார்த்தவுடன்,

சிறுகதை

''என்ன இந்த அறையைப் பூட்டி வைச்சிருக்கிறீர்?

''என்ன சாமான்கள் இருக்கோ. நான் பார்க்கக் கூடாதோ? ...

எல்லாம் முடிந்து போகும் போது சொன்னார் ''கதிர் ஒரு நாள் அந்த அறையைக் காட்டணும்.''

நான் சிரித்தபடி நின்றேன்.

இப்படி ஏன் துளைத்து எடுக்கிறார்களோ தெரியாது. இந்த விடயங்களினால் நான் அவர்கள் பார்வையில் இருந்து கொஞ்சம் விலகி இருக்க விரும்பினேன்.

ஒரு முறை கீழே இருக்கும் போது அகப்பட்டேன்.

''என்ன காலேல உன்ன காணோமே?''

''எந்த இடத்தில உமக்கு பிரன்ஸ் இருக்கு, ...........

''அதெல்லாம் அவர் சொல்லமாட்டார், என்ன கதிர்? ...........

''அந்த ரூமை காட்ட மாட்டீரே? உம்ம மாதிரித்தான். அப்ப நிறைய பேர் தாடியோட ரங்கநாதன் தெருவிலநிப்பினம்.'' என கதை நீண்டு கொண்டுபோனது.

வழமையாக இங்கே வசிக்கும் உத்தியோகத்தரை இறக்க அந்த தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஜீப் வண்டி சத்தத்துடன் நின்றது.

''கதிர் பொலிஸ் உள்ளுக்கு போ-'' என எல்லாரும் கூப்பாடு போட்டார்கள். எனக்கு உடம்பு பதறியது. இருந்தும்- அடக்கிக் கொண்டேன். இவர்கள் என்ன நினைக்கிறார்கள்.

அன்றைக்கு கரம் போர்ட் விளையாடும் போது வெங்கட்ராமன் வரவில்லை. பின்னர் மோட்டார் சைக்கிள் விபத்தில் கால் அடிபட்டு வீட்டில் இருப்பது தெரிந்தது. இரவு விளையாட்டு முடிந்து அவரைப் பார்க்கப் போனேன்.

''என்ன சிலோன் சார் வாங்க உக்காருங்க மைனர் அக்சிடென்தான் நல்லகாலம் பெரிதாக ஒன்னுமில்ல''

கொஞ்ச நேரம் விபத்து நடந்தது பற்றி பெருகிவரும் சனத்தொகைபற்றி, கவனமில்லாமல் ஓடும் சாரதிகளைப் பற்றிப் பேசி முடித்தோம்

''நீர் என்ன இங்க செய்கிறீர்?''

இவர் என்னிடம் எத்தனைதரம் இதனைக் கேட்டு விட்டார். விளையாடும் போது வழியில் காணும்போது, இப்டடி எத்தனைசந்திப்புக்களில்.

''ஓ...... பிசினஸ் தானே. அப்ப உமக்கு பெசன் நகர் திருவான்மையூர் பக்கங்களிலை நிறைய தெரிஞ்ச ஆட்கள் இருப்பினம் என்ன?

............

''என்ன இல்லையோ' உண்மையைச் சொல்லும் நான் உம்மைக் காட்டிக் கொடுக்க மாட்டன்.'' என்றார் அவர்.

யாழ்ப்பாணத்தில் அடித்த ''ஷெல்'' தலையில் விழுந்தது போல் இருந்தது. உடம்பு நடுங்கியது.

இனிமேல் கதைத்து பிரயோசன மில்லை,

(11ஆம் பக்கம் பார்க்க)



# மனோரஞ்சிதம்

மகளிர்ப்பகுதி

# பெண்கள் - பெண்விடுதலை - சில கருத்துக்கள்

★ இப்போது எம்மத்தியில் பெண்கள் விடுதலை பற்றிப் பல்வேறு பட்ட மட்டங்களிலும் பேசப்படுகின்றது. அதைவிட முக்கியமான விடயம் ஆண்களும் இது பற்றி அதிக அக்கறை காட்டுவதே.

விரல் விட்டு எண்ணக் கூடிய முறையில் இருந்தாலும் கூட பல்வேறு துறைகளில் பெண்கள் முன்னணியில் நின்று தத்தமது தளங்களை நிலைப்படுத்திக் கொண்டும் வருகின்றனர்.

என்றாலும் ஆண்டாண்டு காலமாகப் பெண்கள்படும் துயரங்கள் கணக்கிட முடியாதன. ஒரு நாடு இன்னொரு நாட்டிடமும், ஒரு இனம் மற்றைய இனத்திடமும் தொழிலாளவர்க்கம் முதலாளி வர்க்கத்திடமும் அடிமைப்பட்டுக் கிடந்து நசிவடைவது போலவே பெண்களும் ஆண் ஆதிக்கத்திற்கு இடையில் நின்று சுமைதாங்கிகளாக சுமந்துகொண்டிருக்கிறார்கள்.

இன்று என்னதான் சித்தாந்தங்களைச் சொல்லிக்கொண்டு இருந்தாலும் மறைமுகமாக எவ்வாறு 'சாதிவெறி'' உள்ளதோ அவ்வாறே பெண்கள் விடுதலை பெற்று விட்டார்கள் சகலதுறைகளிலும் முன்னேறிவருகின்றார்கள். என்று சொல்லிக்கொண்டாலும் பெண்கள் ஆண் ஆதிக்கத்தில் இருந்து முற்றாக விடுபடவில்லை

★ பொருளாதார சுரண்டல்.
★ ஆண்பெண் வேறுபாட்டால் குறைந்த அந்தஸ்து.
★ பெண்களுக்கெதிரான வன்முறை.
★ பொருள் உற்பத்தி சந்ததி உற்பத்தி.

செல்வி சித்திரா சிவகணேசபிள்ளை

இது போன்ற பல காரணங்களால் பெண்கள் கஷ்டப்பட்டுக் கொண்டே உள்ளனர்.

இவை அடிப்படையான சில விடயங்கள்.

★ இப்படியான விடயங்களில் ஓரளவாவது தப்பிப் பிழைத்துக் கொள்பவர்கள். யார்? நிச்சயமாக பெண்களில் ஒரு பிரிவினர் ஆண் ஆதிக்கச் செயற்பாடுகளில் இருந்து சிறிதளவேனும் தப்பிக் கொள்கின்றனர். அவர்கள் யார் எனில் கல்வி அறிவு பெற்று நிரந்தரமான தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டவர்களே.

அரசாங்க தனியார் (சிறிய நிறுவனங்கள் அல்ல பெரிய நிறுவனங்கள்) துறைகளில் உள்ளவர்களே இவ்விதம்மை நிலைநிறுத்திக் கொண்டவர்கள்.

இவர்களே பெண் விடுதலைபற்றி குரல் கொடுத்துக் கொண்டு அதற்கான செயற்பாடுகளில் முனைந்து செயற்படுபவர்களாகவும் உள்ளனர். இவர்களது குரல்கள் பல்வேறு நிலைகளில் செய்தித்தொடர்பு சாதனங்களாலும் ஏனைய வழிகளாலும் வெளிக்கொண்டு வரப்படுகின்றன.

இவ்வாறு வெளிக்கொண்டு வரப்படும் சகலசெய்திகளும், இவர்களுக்கிடையேயும் இவர்களுக்கு மேற்பட்டநிலையில் உள்ள பெண்களுக்குமே போய்ச் சேருகின்றது.

ஆனால் இத்தகைய பெண்கள் மொத்தப் பெண்களில் எத்தனை சதவீதத்தினர் என்பது பற்றி யோசிக்கும் போது தான் நாம் சில கசப்பான உண்மைகளை உணர வேண்டியுள்ளது.

★ மொத்தப் பெண்கள் தொகையில் பெரும் பகுதியினர் மிகவும்வறிய நிலையிலேயே உள்ளனர். கிராமங்களிலும் வயல்களிலும் ஏனைய துறைகளிலும் கூலித்தொழிலாளர்களாக உள்ளனர்.

நகரங்களில் உள்ள பெண்கள் கூட, தங்கள் வாழ்க்கையைக்கொண்டு நடாத்த குறைந்த சம்பளத்தில் வேலை செய்கின்றனர்.

இவர்களது நிலை அன்றும் இன்றும் எந்தவிதமான மாற்றமும் இன்றி அப்படியேதான் உள்ளது

நாளாந்தக் குடும்பக் கடமைகளுடன் (சமையல்- பராமரிப்பு-ஏனைய வேலைகள்) கூலிவேலைகளுக்குமாக இத்தகைய பெண்களின் உழைப்பு நேரத்தினைக் கணக்கிட்டால் உண்மை புரியும்.

உலகின் மொத்த உழைப்பு நேரத்தில் 2/3 பகுதி பெண்களின் உழைப்புத்தான் என்று சொல்லப்படுகிறது.

இதுதான் உண்மை நிலை. மொத்தத்தில் வசதியும், பொருளாதாரநலன்களும் ஏனைய நலன்களும் உடைய பெண்களை விட மிகவும் கீழ்மட்டத்தில் பொருளாதாரக் காரணங்களால் நலிவு பெற்ற சமூகத்தில் வாழும் பெண்கள் சொல்லொணாத் துயரத்தில் மூழ்கியுள்ளனர்.

இதை விடத் துயரமான விடயம் என்னவென்றால் இந்தப்பெண்கள் தங்கள் இழிநிலையைச் சிறிதளவேனும் உணராமல் வாழ்ந்து மடிந்தும் விடுகின்றனர்.

★ ஆனால் நம்மத்தியில் உள்ள பெண்களில் ஒரு பகுதியினர் சொந்தத் தொழில் காரணமாக அல்லது வெளிநாட்டு வருமானம் காரணமாக (கணவன் அல்லது சகோதரன் அல்லது உறவினர் வெளிநாடுகளில் வேலை செய்து அனுப்பும் பணம்) நல்ல வசதியான வாழ்க்கைவாழ்கின்றனர்

வசதியான வாழ்க்கை நாகரீகமான உடை அழகு இவை மாத்திரம் இருப்பதால் பெண் விடுதலையே கிடைத்து விட்டதாக இவர்கள் கற்பனையில் வாழ்கின்றனர்.

இவர்களின் அநேகர் தமது அதீத செயற்பாடுகளால் கடும் நாகரீக முயற்சிகளில் இறங்கித் தம்மை கவர்ச்சிப்பொருட்களாக்கிக் கொள்ளுகின்றனர். தமிழகத்துச் சினிமா நடிகைகளைப் போல

இவையெல்லாம் சாதனைக்குரிய விடையங்கள் அல்ல. முதலாளித்துவம் தனது சுரண்டல் விளையாட்டுக்களுக்குக் கவர்ச்சிமுலாம் பூசுவதுபோல இவையும் பெண்விடுதலை என்று சொல்லித் தலைக்குமேலே மண் போடும் நடவடிக்கைகள் ஆகும்.

★ எமது சமூகத்தில் என்றைக்கு அடிமட்டத்தில் வாழும் மனிதன் தனது நியாயமான அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய நிலைக்கு வருகின்றானோ. என்றைக்கு அவனது உழைப்பு சுரண்டப்படாமல் உழைப்புக்கு ஏற்ற கூலி கிடைக்கின்றதோ- என்றைக்கு அவன் மனிதனாகச் சக மனிதர்களால் மதிக்கப்படுகின்றானோ அன்றைக்குத்தான் அவனுக்கு விடிவு கிடைக்கும்.

அதேபோலத்தான் என்றைக்கு அடிநிலையில் உள்ள பெண்ணின் இடர்ப்பாடுகள் களையப்பட்டு சகல உரிமைகளையும் பெறுகின்றாளோ அன்றைக்குத்தான் உண்மையான பெண்விடுதலை என்றதன் அர்த்தம் அர்த்தமாகும். ★

# சிறைமீளும் நம் கிராமம்

-எஸ். கருணாகரன்-

நாட்கள் நெருங்க நெருங்க
பரீட்சைக்கு தோற்றும் மாணவன் போலல்லாது
மகிழ்வும் ஆவலும் இதமெனத் ததும்ப
எங்கள் கிராமத்தினின்றும்
அவர்கள் போவதை எதிர்பார்த்திருந்தோம்.

எங்கள் தலைவிதி தம்முன் சிக்குண்டதென்ன
ஆண்டு பலவாய் புகழந்துரைத்தவர்,
நீண்டு வந்த எங்கள் துயரை
இந்த நாட்களில் முடிப்போமென்று முழங்கி
எங்கள் குருதியில் யாகம் செய்தனர்
ராஜீவ் அரசு;
எங்கள் மண்ணில், யுத்த களத்தில்
தோற்றுப் போனது.

நூறு தலைமுறை
அந்நியர் படையெடுப்பு பலவும் கண்ட
எங்களூரின் பனைகள் அறியும்
வெப்பத்தில் கரையும்
பனிமலை ரகசியம்

தோல்வியின் புறத்தே
வரலாற்றின் படிப்பினை உணர்ந்தவர்
ஈழத்திலிருந்து மீழ்தலே
தமதரும் வாழ்வின் பேறென
காவல் அரண்கள் அனைத்தும் சரித்து
ஊரின் நடுவே சிறையென விழித்த
முள்முடி முகாமை
அந்நியப்படை கழற்றியது.

அவர்களுக்கு போகும் அந்தரம்.
நமக்கு
போகவைக்கும் அவசரம்,

இதுவரை நாளில் மறைத்து வைத்த
மகிழ்வை

மறுபடியும் கிராமம் சூடிக்கொண்டது.
ஊர்மனை தோறும் நம்
கிராம மக்களில் ஆனந்தம்
எல்லை திறந்த ஜேர்மனி போலே
எங்களூரில் மனிதர் திரிந்தனர்.

இந்த மண்ணில்
அந்நியர் காலடிகள் சுவடுபதிக்க
என்றும் விடோம் என்ற
சத்தியப்போர் வெற்றி கொண்டது

போகும் படையே
சேதி யொன்றினைப் புரிந்து செல்வீர்
''குருக்ஷேத்திரத்தை
இனியொருதரம் புரட்டிப்பாருங்கள்
நூறு பேரின் அரசும் படைபலவும்
ஐந்தே பேரிடம் தோற்றது புரிக

தன்னிலை மறந்து
நீதிமாறி நின்ற கர்ணன்
முடிவின் முதலே
அழிந்தது சாட்சி.

இந்நாளில்
கவனிப்பாரற்றுக் காடுமண்டிய
பனைகளின் கீழே
வீறு கொண்டு வடலிகள் முளைவிட்டெழுந்தன
இனியவை பயன் தரும்.

குட்டிக்கதை

# நன்றி

அவர்கள் புறப்பட்டார்கள். பெட்டி பெட்டியாகக் கட்டிக் கொண்டு வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அணிவகுத்து நின்றன. யந்திரப் பிசாசுகள் தலை நீட்டியபடி அதனுள் இருந்தன.

சோம்பிக் களைத்திருந்த அவர்களில் அனேகம் பேர் புறப்படுவது காரணமாக உயிர்த்திருந்தார்கள்.

வேலிப் பொட்டுகளூக்கால் மனிதர்கள் எட்டிப் பார்த்தார்கள். யாராவது கையசைத்து விடை கொடுக்க முனையவில்லை. கைகொடுத்து வரவேற்றதன் பலனை அனுபவித்தவர்கள் அல்லவா?

எல்லோரும் வாகனங்களில் ஏறியபின்னர் அவர்களின் தலைவனும் ஏறினான். நீண்ட ஊர்வலமாக வாகன அணி புறப்படத் தயாராக மதிற் கரையோரமாக குந்தியிருந்த நாலைந்து பேர் விரைந்து வந்தார்கள் மூட்டை முடிச்சுக்களுடன்.

'' நாங்களும் வாறம் ஐயா எங்களையும் கூட்டிக் கொண்டு போங்கோ ''

அதற்குப் பதிலாக தலைவன் சிரித்தான்.

'' உங்களுக்கு விசுவாசமாக இருந்தனாங்கள் ஐயா நீங்கள் சொன்னபடி செய்து கொண்டு '' என்றார்கள் மீண்டும் மீண்டும்.

தலைவன் திரும்பவும் சிரித்தான்.

— முருகன்

உலைக்களம்....

3-ம் பக்கத் தொடர்ச்சி

பினர்களையுமே சாரும்.

பாடசாலைகள், தனியார் கல்விநிலையங்கள், கோவில் திருவிழாக்கள், சடங்குகள், வேலைத்தளங்கள் எதுவானாலும் அங்கு நடப்பவைகளை உன்னிப்பாக அவதானித்து நெறிப்படுத்துங்கள். முடியாவிட்டால் அத்தகைய நபர்களை, அதற்குக் காரணமானவர்களை அம்பலப்படுத்துங்கள்.

ஒவ்வொரு தமிழீழ பிரஜையின் விழிப்புணர்ச்சிக்கூடாக வெற்றியை நோக்கி வீறுநடைபோடும் தமிழீழ விடுதலைப் போரை இன்னும் வளர்த்துச் சென்று எதிர்கால சமூகத்திற்கு ஒரு உன்னதமான விடுதலையையும், உயர் ஒழுக்கத்தைப் போதிக்கும் எமது கலாச்சாரத்தையும் பாதுகாத்து எமது எதிர்கால சந்ததியினரிடம் ஒப்படைப்போம். அதுதான் இன்றைய ஒவ்வொரு தமிழீழப் பிரஜையினதும் கடமையாகும். ★

பின்னணி...

9-ம் பக்கத் தொடர்ச்சி

ஒப்புதலுக்காக மேலும் சிரித்து கதைத்து விட்டு வெளியே வந்தேன். உடம்பு வியர்த்து இருந்தது. மனம் என்னவோ செய்தது. வலி எடுத்தது.

அன்றிரவு நித்திரை கொள்ளவில்லை. மறுநாளும் மனம் சாந்தி அடையவில்லை, யாரிடமாவது இதுபற்றி சொல்ல, நான் சொல்லுவதைக் கேட்பவர் ''சும்மா விடு தம்பி, அதை மறந்துபோம் இப்படித்தான் இருப்பினம் நீர் யோசியாம இரும்'' என எனக்கு சொல்ல வேண்டும் போல இருந்தது. மத்தியானம் நான் வெளியே போய் திரும்பி வரும் போது வாசலில் பிரகாஷ் இருந்தான். என்னிடம் நன்றாக்கதைப்பான். மனம் அவனிடம் சொல்ல சொல்லித் தூண்டியது.

அவனிடம் கொஞ்ச நேரம் கதைத்து விட்டு இதுபற்றி சொன்னேன் நான் சொன்னதை கேட்டுவிட்டு அவன் சொன்னான்.

''ஆமா அது உண்மைதானே கதிர். உமக்கு அவர் திரும்பத் திரும்ப கேட்பது நோண்டிற மாதிரி இருக்கும். ஆனால் அவர் நோண்டுறது சரிதானே. எங்களோட நீர் பேசிச் சிரிக்கலாம். இருந்தாலும் நீர் ஏதாவது ஒ டில இருக்கலாம். நாளைக்கு ஏதேனும் நடந்தால் எங்கபிளாட்டுக்குத்தான் கெட்ட பெயர். அது தான் ... இப்படி.'' ★

# உடைத்துவிடு

—சேனா

காந்தீயம்
கண்ணீர்வடிக்கிறது
உழைப்பை அதன்
உள்ளார்ந்த
உடைப்பைப் பார்த்து
விடுதலையை,
விடி[illegible]கிலியின்
விளைப்பைப் பார்த்து,
சிந்தும் கண்ணீரை
ஏந்திப் பாத்திரத்தின்
ஓட்டையைப் பொத்த முடியுமா பார்.
ஏந்திய கண்ணீரால்
இரும்புப் பிடியை
உருக்க முடியுமா பார்
முடிந்தால்
எனக்கும் சொல்
மறந்து விடாதே

# ''கோணர் கிக்''

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் நடைபெற்ற சங்கதி இது!

வாக்குப் போட வந்தவர் சொன்ன சிரிப்பான தகவல் இது!!

ஓமந்தை ம ா வித்தியாலயத்தில் ஒரு வாக்களிப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டு இருந்தது.

அங்கு சுமார் 9. 30 மணிவரை வாக்காளர்கள் வரவில்லை.

அதன்பின்பு சாரைசாரையாக வாக்காளப் பெருமக்கள் வந்து சேர்ந்தார்கள்.

உத்தியோகத்தர்கட்கு விடயம் விளங்கவில்லை.

வாக்களிப்பு நிலையத்தில் சனக்கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

பாராளுமன்றத் தேர்தல்களைப் பகிஸ்கரிக்குமாறு விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விட்டும் இவ்வாறு அதிக ஜனங்கள் வாக்குப் போட வந்துவிட்டார்களே எனச் சிலர் அதிசயப்பட்டார்கள்.

நடந்த விசயம் இதுதான்!

மக்கள் வாக்களிக்க வராது இருந்த சில ஊர்கட்குச் சில இயக்கத்தினர் சென்று பின்வருமாறு ஒலிபரப்பினர்.

''வாக்குப் போடாமல் இருக்கும் ஊர்களை நோக்கி 'ஷெல்' அடிக்கப்படும்.''

இப்படித்தான் அவர்களின் சனநாயகம் நடந்தது.

— அங்கதன்

தொழுநோய்....

5-ம் பக்கத் தொடர்ச்சி

தொற்றத்தன்மையுள்ளதில் கலனில் தாக்கும் சக்தி (Cellular Immunity காணப்படும், Rashes 1-3 ஆக எண்ணிக்கையில் குறைந்தும், 1''-2'' அளவு பருமன் உடையதாகவம், குறிப்பிட்ட வரையறுக்கப்பட்டதாகவும், வெள்ளை அல்லது செம்பு நிறம் உடையதாகவும்; மேற்பரப்பு காய்ந்து செதில் தோல் போன்றும். மயிர்கள் காணப்படாததும் காணப்படும்.

தொழு நோயை, இரத்தப்பரிசோதனை மூலம், உணர்ச்சியற்ற தேமல் போன்ற தழும்புகள் இருப்பதை கொண்டும், தடித்த சுற்றயல் நரம்புத்தொகுதி அதாவது கழுத்து, கால் பகுதிகளில் நரம்புகளில் ஏற்பட்ட வீக்கம் அல்லது தடிப்புத் தன்மை போன்றவற்றாலும், நரம்புகள் இயங்காமல் இருப்பதைக் கொண்டும் கடியிலாத மினுமினுப்பான மெதுமையான Nodules (காய்கள்) இருப்பதைக் கொண்டும் இது தொழுநோய்தான் என நிர்ணயம் செய்யலாம்.

சுகாதார அறிவு இன்மையாலும் சுகாதார சேவைக் கவனக்குறைவினாலும் போஷாக்கின்மையாலும், தனிநபர் சுத்தம் அறியாமையாலும் இந்நோய் தீவிர நிலைக்கு உள்ளாக்கப்படுகிறது.

ஆரம்பநிலையில் இனம் கண்டு சிகிச்சித்தாலும், இந்நோய் இனம் கண்டவர்க்கு தொடர்ந்து சிகிட்சையளிப்பதனாலும், சிகிச்சை பெறாத நோயாளிகளை இனம் கண்டு சிகிச்சை அளிப்பதனாலும் இந்நோயை நாம் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம்.

இலங்கையில் மாந்தீவு கெந்தளை ஆகிய இடங்களில் தொழுநோய்க்கென வைத்தியசாலைகள் உள்ளன. யாழ் மாவட்டத்தை பொறுத்தவரை யாழ் போதனா வைத்தியசாலையிலும் இத்தொழுநோய்க்குரிய பிரிவு இயங்குகின்றது. ★

கலாரதம்...

2-ம் பக்கத் தொடர்ச்சி

தமையால் பேச்சுத் தமிழ் வழக்கிலிருந்தது. சமநிலையற்ற சமூக வளர்ச்சியில் ''தெரிந்த மொழி'' இலக்கிய அந்தஸ்தைப் பெறவில்லைப் போலும். பொருநராற்றுப் படையிலும் போர்க்களம் பாடும் பொருநர் பற்றிய குறிப்பு வருகிறது. ஒருவரைப் போல் வேடமிட்டுப் பாடுநரைப் பொருநர் என்பர். சிலப்பதிகார மாதவியின் பதினொரு ஆட்டங்களில் கடைசி ஆட்டம் ' கடையக்கூத்து ' (வாயுரைத்து வடக்குத் திசை வாசலில் கடையா-இழிசனர் முன்னர் ஆடியதாகக் கருதப்படும் ஆட்டம்) எப்படியாயினும் தமிழ்இலக்கியங்களில் நாடகம் என்ற சொல் முன்னர் வழக்கிலிருக்கவில்லை. தமிழர் வாழ்வில் வட-நாட்டு நாகரிகம் அதன் பண்பாட்டைப் பாசித்தது. மாதவியின் பிறப்புக் கூட சமஸ்கிருதமயமாகியது. வட நாட்டு நாகரிகம் தமிழ் நாட்டின் பட்டி தொட்டிகளைத் தாக்கவில்லை. நிலக்கிழார்களையும், வியாபார மூலதனமுடையோரையும் தாக்கியது. சமஸ்கிருதமயமாக்கப்பட்ட கலாசாரத்தில் நாடகம் என்ற சொல் வழங்கலாயிற்று.

இனி! காரணங்கள் லௌகீக மயமாக்கப்படும் போது அதற்கும் ஓர் வரம்பு ஏற்படுகிறது. பார்வையாளரும் நடிகரும் பிரியும்போது-பராதீனப்படும் போது (Alienation) அரங்கு தோன்றுகிறது. கிரேக்க மொழியில் Theator (அரங்கு) என்றால் பார்க்கும் இடம் என்று பொருள்படும். ஆகவே தியேட்டர் என்பதை ஒரு கட்டடம் என்று மாத்திரம் கொள்ளாமல் நாடகம் பார்க்கின்ற இடம்: பார்க்கப்படுவதற்கும் அளிக்கப்படுவதற்கும் உள்ள தொடர்புகள் என்பது முக்கியமானது. உ-ம்; சிங்கள நாட்டில் விவசாயச் சமூகங்களில் சொக்கரி ஆட்டம் வயலில் சூடடிக்கும் களரியில் இன்றும் நிகழ்த்தப்படுகின்றன.

முழுச் சமூகமுமே ஒத்திசைவாக இயங்கும் நிலையில் அரங்கு இருக்கவில்லை. ஊர் முழுவதும் இரண்டாகப் பிரிந்து போட்டிகளில் ஈடுபடுவதும் உண்டு இவ் வகை விளையாட்டுக்களில் கொம்பு விளையாட்டும் ஒன்று. இது மட்டக்களப்பில் சில கிராமங்களில் இன்றும் ஆடப்படுகிறது. கொம்பு விளையாட்டின் இறுதியில் பெரியதோர் ஊர்வலம் நடைபெறும். தோற்றவர்கள் வென்றவர்களால் அடிமைகள் போல் நடத்தப்படுவார்கள். கிரேக்க மரபிலும் நாட்டில் ஊர்வலமாகச் செல்லுதல் (Exodus into The Open Country) குறிப்பிட்ட ஆட்டத்தை ஆடுதல், வெற்றியுடன் திரும்பிவருதல் ஆகிய நிகழ்ச்சிகள் கருவளக் கடவுளான டயோனிசியஸ் விழாவில் வழக்கிலிருந்தன. மரபு நாடக அரங்கில் எல்லா மக்களும் கூடினார்கள். ஆக்கியோன் பார்வையாளன் என்ற பிரிவு இருக்கவில்லை. இதற்கு அடிப்படையான காரணம் சமூக ஒருமைப்பாடாகும் ஒரிஸா, வாங்காளம், அஸாம், நீலகிரி போன்ற இடங்களில் ஒதுக்குப்புறமான குறிஞ்சி நிலங்களில் வாழும் பழங்குடிகள் ஒத்திசைவாகவே ஆடல்களிலும், பாடல்களிலும் ஈடுபடுகின்றனர். ★

# வைரவரிகள்

மனிதன் எண்ணமே வடிவமானவன். இவ்வுலகில் இருக்கும்போது அவன் எவ்விதம் எண்ணுகின்றானோ அவ்விதமே இங்கிருந்து போன பிறகு ஆகிறான் என்கிறது சாந்தோக்ய உபநிடதம்.

★

உங்கள் வாய் நாறுகிறதா? உங்களுக்கு எங்கே தெரியப் போகிறது? பிறருக்குதான் தெரியும் அதைப் போக்க எலுமிச்சம்பழத்தை ஒரு கிளாஸ் தண்ணீரில் பிழிந்து சிறிது உப்புச் சேர்த்துச் சாப்பிட்டு வாருங்கள். அந்தத் தண்ணீரைக் கொண்டு வாய் கொப்பளித்து வந்தாலும் நல்லதே!

★

கடவுள் நம்மிடையே இருக்கிறார். ஒவ்வொருவரிடமும் நாம் கடவுளைப் பார்க்க முடியும். எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்திருப்பவர் அவர். இதை உணர்ந்துவிட்டால் அப்புறம் கடவுளின் தரிசனத்துக்காகக் காத்திருக்க வேண்டியதில்லை. ஜகம் முழுவதும் ஜகந்நாதன் நிறைந்திருப்பதை உணருவோம்.

★

'' ABLE WAS I ERE I SAW ELBA'' என்பது மாவீரன் நெப்போலியன் சொன்ன புகழ்மிகு வாசகம். இந்த வாசகத்தைத் தலைகீழாக வாசித்தாலும் அதேஅர்த்தம்தான் வரும்.

★




''அண்ணை ஒருக்கால் கோயிலடியனைய பார்த்து கிளியர் பண்ணி விடுங்கோ! றோட்டைக் கடக்க வேணும்.

பள்ளிக்கூடத்திற்குப் பின்னாலை பச்சைபடுத்திருப்பான். வாழைத் தோட்டத்தையும் வடிவாய்ப் பார்த்துக் கொண்டு வாங்கோ''

இப்படி உரிமையோடும் பாசத்தோடும் அடிக்கடி வந்து கடந்த இரண்டு வருடங்களில் எனக்கு அன்புக்கட்டளையிட்ட காண்டீபன் இன்று எம்மோடில்லை.

மகாபாரதக்கதையில் அருச்சுனன் கையில் இருந்த காண்டீபத்திற்கு பெரும் எண்ணிக்கையான கௌரவர்படை அஞ்சி நடுங்கியது போல் காண்டீபன் பெயரைக் கேட்டு அந்நிய ஆக்கிரமிப்புப்படை அஞ்சியது.

காண்டீபனை எல்லோரும் ''காண்டி காண்டி'' என்றே அன்போடு அழைப்பர்.

''மெய்யே காண்டி என்ன புதினம்'' இது காண்டியை கிளறிவிட நான போடும் புதிர்க் கேள்வி.

''எனக்குத் தெரியுமே! உங்களுக்குத்தானே தெரியும்! அங்கால போய் வந்தனீங்களாம்? அண்ணர் சொன்னார்.

இது காண்டி என் கேள்விக்கு பதில் சொல்லாமல் தப்பபிக்கொள்ள புத்திசாதுரியமாக திருப்பிப் போடும் மறுகேள்வி

காண்டி! உனக்கும் உன் நண்பர்களுக்கும் நாங்கள் ''கிளியர்'' பண்ணி விட்ட அந்தப் பாதையில் எத்தனை போராளிகள் சென்று வந்தனர். அப்போது ஒரு நாள் கூட ஒருவருக்கும் ஒரு சிறு காயம் கூட ஏற்படதில்லை. உங்கள் விஷயத்திலை. நாங்களும் ஊர்மக்களும் எவ்வளவு விழிப்பாக இருந்தோம். றோட்டுப் பார்த்து உன்னை யுத்தகாலத்தில் பாதுகாத்தோம் ஆனால் சமாதான காலத்தில் றோட்டால் போன ஒரு மினிபஸ் மோதி உனை இழந்தோமே! மினிபஸ் சாரதிக்கு ஒரு மனிதனின் இறப்பு! ஆனால் எங்களுக்கு இது எத்தனை பெரிய இழப்பு? ஒரு நாள் நீ என்னிடம் வந்தாய் வழமைபோல் அந்தப் பனம்தோப்பில் நின்று ரெண்டு ஆள் அனுப்பினாய். உன்னைத் தேடிவந்த யான் ''என்ன காண்டி என்ன விஷயம்'' என்றேன்.

''அண்ணை உங்களுக்கு பொற்பதி றோட்டிலை இருக்கிறது ஆட்கள் யாரையும் தெரியுமோ?'' என்று கேட்டாய்.

''ஓம் காண்டி'' என்று சிலரின் பெயர்களை யான் சொன்னேன்.

அதில் ஒரு சிறிய உள்ளம் படைத்த பெரிய மனிதனின் பெயரைக் கேட்டதும் அவர் எப்படி என்று திருப்பி என்னிடம் ஒரு கேள்வி கேட்டு அவரைப்பற்றி விசாரித்தார்.

நான் உடனே, ''தம்பி காண்டி நீ அங்கே போகாதே அந்த ஆள் ஒரு வெலாசக்காரன். தண்ணி போட்டால் என்ன கதைக்கிறது என்று தெரியாமல் கதைச்சு போடும். பிறகு எல்லாம் ஆபத்தால் போய்விடும்'' தண்ணி மனிதரின் அலம்பல்வாயிலிருந்து உன்னைக் காப்பாற்ற நான் போட்ட அன்புக்கட்டளை இது.

''இல்லை அண்ணை ஒரு நாள் இரவு நானும்

**நேதாஜி**

காந்தனும் படுக்கப் போய்க் கேட்டம் அந்த ஆள் முடியாது என்று சொல்லிப் போட்டுது.'' என்று வேதனையோடு சொன்னாய்.

இப்படி எத்தனையோ பெரியவீட்டு சின்ன மனிதர் உம்போன்ற தேச பக்தர்களைக் கண்டு மருண்டது உண்மைதான். ஆனால் குடிசையில் வாழ்ந்த எத்தனை அடிமட்டமக்கள் உன்னையும் உன் நண்பர்களையும், கருவிகளையும் தமது உயிரையும் பொருட்படுத்தாது அந்நியனிடமிருந்து காப்பாற்றினார்கள்.

இந்த பொற்பதி றோட்டில் ஒரு மாடி வீட்டுக்கனவான் இந்திய அரசுக்குக் கொடுத்த ஆலோசனையை எண்ணிப்பார். இரண்டாயிரம் பேர்தான் புலிகள் அவர்களுக்கு மக்கள் ஆதரவு இல்லை என்று தீக்கோழி பாணியில் அறிவுரை சொல்லவில்லையா? அதேவேளையில் இதே பொற்பதி றோட்டில் எங்கள் போராளிகளைக் காப்பாற்றிய சாதாரண குடிசைவாழ் மக்களின் குடிசைகள் பலவற்றை ஒரே நாளில் பட்டப்பகலில் இந்திய இராணுவம் எரித்து சாம்பலாக்கியது. ''எல்லாத்தையும் எரிச்சுப் போட்டாங்கள் தம்பி'' என்று அன்று ஒரு மூதாட்டிகதறி அழுத காட்சி இன்னும் என் கண் முன்னால்நிற்கிறது.

காண்டீபா! அடிக்கடி யாழ். நகரை சுற்றிய பகுதிக்குள் உன்னைக் கண்டிருக்கிறேன். அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவமும் அவர்களின் கூலிப்படைகளும் உன்னைத் தேடி எத்தனை



மேஜர் காண்டீபன்

தேடுதல் வேட்டைகளை நடத்தின? எத்தனை சுற்றி வளைப்புக்களைப் போட்டன. கோண்டாவிலில் தங்கியிருந்த கூர்க்காக்கள் உன் பெயரை எத்தனை தடைவைகள் மனப்பாடம் செய்திருப்பார்கள். கோண்டாவில் லெ. கேணல் சசிகுமார் எத்தனை வீடுகளில் உன்னைத் தேடியிருப்பான். ஒரு நாள் கோண்டாவிலில் பெரிய சுற்றி வளைப்பு; பெரும் தொகையான இந்திய ஜவான்கள் ட்ரக்குகளிலும், ஜீப்புகளிலும் கொண்டுவந்து குவிக்கப்பட்டனர். இந்திய சிப்பாய்கள்அங்குமிங்குமாக துப்பாக்கிகள் சகிதம் ஓடியும் நடந்தும் திரிந்தனர்.

இந்த சுற்றிவளைப்பில் சாந்தன் உட்பட மூன்று போராளிகள் சைனட் போட்டு வீரமரணமடைந்தனர். பொதுமக்கள் மத்தியில் ஒரே பதற்றமும், பரபரப்பும். காண்டீபா நீ! மட்டும் எதுவித பதட்டமும் இல்லாமல் பதினெட்டு மணி நேரம் புகையிலைத் தோட்டம் ஒன்றுக்குள் படுத்திருந்துவிட்டு வெளியேறி சீறும் சிறுத்தைபோல் இருப்பிடம் வந்து சேர்ந்தாயே! உன் தந்திரோபாயங்களைச் சொல்லி வியக்க வைத்தாய்!

யாழ். நகரப் பொறுப்பாளனாகவிருந்த காண்டீபன் அக்கால கட்டத்தில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் காயப்பட்டு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டான். சிகிச்சை பெற்றுத் திரும்பிய இவனை எனது நண்பர்கள் சுகம் விசாரித்தார்கள். அப்போது அவன் சிரித்துக் கொண்டே ''என உடம்பில் பதினெட்டுசேலைன் போத்தில் ஏற்றப்பட்டது. ஊசி மருந்து எண்பது தடவைகள் போடப்பட்டது'' என்று கூறினான்.

இதன் பின் அச்செழுவில் ஒரு மோட்டார் சையிக்கிளில் பயணம் செய்யும் போது காருடன் மோதி காண்டீபனுக்கு காலில் அடிபட்டது. சில நாட்கள் சிகிச்சை பெற்று மீண்டும் களத்திக்கு வந்தான்

காண்டீபனைத் தேடித்திரிந்த கோண்டாவில் கொமாண்டர் மணியம் தோட்டத்தில் விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்ட மோதல் ஒன்றில் மரணமடைந்தான்.

''காண்டீபா உன்னோடு பழகிய நாட்களை இப்போது எண்ணிப்பார்க்கிறேன். அந்தப்பனை மரத்தோப்பில் வடலிப் பனைகளின் நிழலில் அடிக்கடி அந்தப் பனங் குற்றிமேல் உன் தோழர்களோடு அமர்ந்து டேப் றெக்கோடரில் ''களத்தில் கேட்கும் கானங்களைப் போட்டுக் கேட்பாயே! இனி அந்த றெக்கோடரில் உன்கானங்களைக் கேட்கவா எங்களை விட்டுப்பிரிந்தாய்!

''காண்டி என்னதான் இருந்தாலும் அந்த நாட்களின் சந்தோஷம் இப்போது இல்லையடா! நாங்கள் அமர்ந்து இருந்து கதைப்பதும் கூடியிருந்து தேனீர் குடிப்பதும் ''அவர்கள்'' வருகிறார்கள் என்று செய்தி வந்தால் ஓடி மறைவதும் ஒரு திறில்தான். ஆனால் அதில் இருந்த இங்கிதம் இப்போது இல்லையடா! என்னைக் காணும் உன் நண்பர்களும் அதைத்தான் சொல்கிறார்கள்.

காண்டீபா! இனி நீ மீண்டும் எப்போது வந்து'' அண்ணை ஒருக்கால் றோட்டுப் பார்தது விடுங்கோ'' என்று கேட்பாய்! நாங்களும் எப்போது உனக்கு றோட்டு பார்த்து கிளியர் பண்ணி விடுவது?

★

---

அண்மையில் விடுதலையான தென் ஆபிரிக்கா தேசிய காங்கிரசின் தலைவர் நெல்சன் மண்டேலா பற்றிய கவிதை.

### இந்த புலர்ப்புத்தான் ஒரு அஸ்த— மனத்துக்கான ஆரம்பம் !

அந்த கறுப்பு ரோஜா
இசைதென்லிறன் - வேக
மொட்டுடைப்பினுாடே
தனது
வாழ்க்கைப் பயணத்தை
வட்டமாக்கிக் கொண்டு.
புலர்ப்பின் புதுப்பொலிவுடன் - தனது
அடுத்த ஜனனத்தின்
புதுத்தெம்புடன்
புதுமையாக பார்க்க பார்க்க.........
அணுவில் இருந்து ஆகாயம் வரை?
அதற்கு
புத்தம் புதிதாய்
புரியத் தொடங்கியது.
பச்சைப் போர்வைக் கோரச்சிறைக்குள்
தனது காலத்தில் - அந்த
பரப்பிற்கு அப்பால்
பார்த்தவை எல்லாம்
பசுமையாக படர்ந்து கொண்டேஇருந்தது?
ஆனால்
அந்தமொட்டுடைப்பு
ரோஜாவுக்கு மட்டுமல்ல - பல
ராஜாக்களுக்கும்
இனிமையாக வீசிய
இளந்தென்றல்களுக்கும்
இங் கொன்றும் அங் கொன்றுமாயிருக்கும்
இற்கைக் குருவிகளுக்கும்
நிச்சயம்
உறுதியை உணர்த்திக்கொண்டே
இருக்கும்.